REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2023 டிசம்பர் 6 புதன்கிழமை
# தினகரன்
THINAKARAN
வரு. 91 இல. 289
Wednesday 06, December, 2023
16 பக்கங்கள்
50/-

## டுபாயிலிருந்து நாடு திரும்பினார் ஜனாதிபதி



ஐக்கிய நாடுகள் சபையின் காலநிலை மாற்றம் தொடர்பிலான மாநாட்டில் பங்கேற்றிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பியுள்ளார். டுபாயில் இடம்பெற்ற 06

# ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்பும் முதற்கட்டமாக 14,935 பேர் இணைப்பு

- இலவச பாதணிகள் வழங்க ரூபா 2500 மில்லியன் நிதி
- பின்தங்கிய பாடசாலைகளில் பகலுணவு திட்டம்



லோரன்ஸ் செல்வநாயகம்

நாடளாவிய ரீதியில் ஆசிரியர் சேவையில் 40 ஆயிரத்துக்கும் அதிகமான வெற்றிடங்கள் காணப்படுவதால், முதற்கட்டமாக 14,935 ஆசிரியர்களை மாகாண மட்டத்தில் இணைத்துக் கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாட்டின் பின்தங்கிய பகுதி பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக பாதணிகளை வழங்குவதற்கு 2500 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் சபையில் அவர் குறிப்பிட்டார்.

7 இலட்சத்து 47 ஆயிரம் மாணவர்களுக்கு பாதணிகள் வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு முன்னர் இத்திட்டம் நிறைவு செய்யப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வரவு செலவுத் திட்டத்தில், கல்வி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு குழு நிலை விவாதத்தில் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர்,

பாரிய நெருக்கடிகளுக்கு மத்தியிலும் பரீட்சைகளை நடத்தினோம்.தொழிற் சங்க போராட்டங்களினால் பரீட்சைகளை நடத்துவதில் தாமதம் ஏற்பட்டது. 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை விட 2024 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் கல்வியமைச்சுக்கு 52 பில்லியன் ரூபா மேலதிகமாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளமை சிறந்த முன்னேற்றமாகும்.

பின்தங்கிய பாடசாலைகளின் மாணவர்களுக்கு சர்வதேச நாடுகள் மற்றும் நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் பகலுணவு வழங்கும் திட்டம் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு மாத்திரம் 1.5 பில்லியன் ரூபா அதற்காக செலவிடப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டுக்காக 16 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. 2030 ஆம் ஆண்டு சகல பாடசாலைகளுக்கும் பகலுணவு திட்டம் என்ற இலக்கை வெற்றிகரமாக அடைய முடியும்.

2023 ஆம் ஆண்டு இலவச பாடநூலுக்காக 13 பில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டுக்காக 20 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டுக்கான இலவச பாடநூல் விநியோகத்துக்காக அச்சகத் திணைக்களத்தின் ஊடாக 80 வீத நூல்கள் 06

## டெங்கு ஒழிப்பு ஏற்பாடுகளில் அரசாங்கம் அதிக அக்கறை



டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை கடந்த மூன்றாண்டுகளுடன் ஒப்பிடுகையில் இவ்வருடம் 1020 ஆக, அதிகரித்துள்ளது.

டெங்கு தொற்றாளர்களில் 47 வீதத்தினர் மேல்மாகாணத்தில் பதிவாகியுள்ளனர். இங்கு, 36,266 பேருக்கு டெங்கு தொற்றியுள்ளது. இதையடுத்து உஷாரடைந்துள்ள அரசாங்கம் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்தியுள்ளது.

கன மழையுடன் கூடிய காலநிலை நிலவுவதால் வடிகான்கள் மற்றும் கைவிடப்பட்ட காணிகளில் துப்புரவு பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. டெங்கு பரவும் வகையில் சுற்றுச் சூழலை வைத்திருப்போருக்கு அபராதம் விதிக்கும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படுகின்றன. இதனால் மிகுந்த கவனமாக 06

## மதுவரி திணைக்களத்தின் மாதாந்த வருமானம் ரூ. 100 கோடியால் அதிகரிப்பு

### துறைசார் மேற்பார்வைக் குழுவின் தகவல்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

மது வரித் திணைக்களத்தின் மாதாந்த வருமானம் ஒரு பில்லியன் ரூபாவால் அதிகரித்துள்ளதாக திணைக்களத்தின் உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

மதுபான போத்தல்களில் போலி ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டு விற்பனை செய்யப்பட்ட விவகாரம் தொடர்பில் கவனம் செலுத்தி, அவ்வாறு ஒட்டப்பட்ட போலி 06

## தங்கத்தின் விலை வீழ்ச்சி



தங்கத்தின் விலைகள் நேற்று (05) வீழ்ச்சியடைந்ததாக தங்க விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

22 கரட் 1 பவுண் தங்கத்தின் விலை நேற்று முன்தினம் (04) 177,350 ரூபாவாக பதிவாகியிருந்தது.இந்நிலையில் நேற்று (05) 22 கரட் ஒரு பவுணின் 06



## உலங்கு வானூர்த்தியில் உல்லாசப் பயணிகள் வருகை

நெடுந்தீவில் தனியார் துறையினர் ஏற்பாடு 08



## ஐயப்ப பக்தர்களுக்கான வீசாக்கள் அதிகரிப்பு

கால எல்லைகள் இரு மாதங்களாக நீடிப்பு 08

### ஆசிரியர்கள் சம்பள முரண்பாட்டிற்கு உடனடியான தீர்வு சாத்தியமற்றது

## அரசாங்க ஊழியருக்கான 10,000 ரூபாவில் ஆசிரியர்களுக்கு மாத்திரம் ரூ. 3000 கோடி

லோரன்ஸ் செல்வநாயகம்

அமைச்சர் சுசில் பிரேமஜயந்த

ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டுக்கு உடனடியாக தீர்வு காண்பது சாத்தியப்படாதென கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இம்முறை வரவு செலவு திட்டத்தில் அரசாங்க ஊழியர்களுக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ள வாழ்க்கைச் செலவு கொடுப்பனவில், ஆசிரியர்களுக்கு மாத்திரம் 30 பில்லியன் ரூபாவை செலவிட வேண்டியுள்ளதாக தெரிவித்த அமைச்சர், அவ்வாறானால் மேலும் 40 பில்லியன் ரூபா நிதி தேவைப்படும் என்றும் தெரிவித்தார்.

இந்நிலையில், ஆசிரியர்களின் சம்பளமுரண்பாட்டுக்கு தற்போது உடனடியாக தீர்வு காண முடியாது. கட்டங்கட்டமாக இதற்கு தீர்வு காண்பது தொடர்பில் அடுத்த வருடம் கவனத்தில் கொள்ளப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். அரசாங்கமானது அரசாங்க ஊழியர்களுக்கு வாழ்க்கைச் 06

## இந்திய அரசின் நிதியுதவியில் மலையக பாடசாலைகளுக்கு அடிப்படை வசதிகள்

### அடுத்த வருடம் அமுலாகுமென்கிறார் இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார்



லோரன்ஸ் செல்வநாயகம்

மலையக பாடசாலைகளுக்கும் ஏனைய பாடசாலைகளுக்கு கிடைக்கும் அனைத்து வசதிகளும் கிடைக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே, தாம் உள்ளதாகவும் அது தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தி வருவதாகவும் கல்வி இராஜாங்க அமைச்சர் அ.அரவிந்தகுமார் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

மலையக பிரதேச பாடசாலைகளில் நீண்ட காலமாக நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு கட்டம், கட்டமாக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

அத்துடன் இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் அடுத்த வருடத்தில் மலையக 06

## பண்டிகைக் காலம் கருதி லாப்கேஸின் விலைகளை அதிகரிக்கப்போவதில்லை

### லாப் கேஸ் நிறுவனம் தெரிவிப்பு





லோரன்ஸ் செல்வநாயகம்

உலக சந்தையில் சமையல் எரிவாயுவின் விலை அதிகரித்துள்ள போதும் உள்நாட்டில் இவற்றின் விலைகளை அதிகரிக்கப் போவதில்லையென, லாப் கேஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் பண்டிகைக் காலங்களை கவனத்திற் 06

## உல்லாசப்பிரயாணிகளின் வருகையில் பெரும் அதிகரிப்பு

### நவம்பரில் 1,51,496 பேர் வருகை

லோரன்ஸ் செல்வநாயகம்



நாட்டுக்கு வரும் உல்லாசப்பயணிகளின் எண்ணிக்கை கடந்த மூன்றரை வருடங்களின் பின்னர் அதிகரித்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த வகையில் கடந்த நவம்பர் மாதத்திலே அதிகளவு சுற்றுலாப் பயணிகளின் வருகை பதிவாகியுள்ளது.

இம்மாதத்தில் மாத்திரம் ஒரு இலட்சத்து 51ஆயிரத்து 496 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்ததாக அதிகார சபையின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். இதே, எண்ணிக்கையிலானோர் கடந்த 2020 பெப்ரவரியில் வருகை தந்தனர். 06

## ஏழு மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை



நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக ஏழு மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

பதுளை, நுவரெலியா, கண்டி, இரத்தினபுரி, 06

## தொழில்நுட்ப கல்வியை முதலாம் தரத்திலிருந்து ஆரம்பிப்பது அவசியம்

### ஆங்கில கல்வியை விரிவாக்குவது காலத்தின் தேவை

லோரன்ஸ் செல்வநாயகம்



பாடசாலைகளில், ஆங்கில மொழி மூலமான கல்வியை விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

தொழிநுட்பக் கல்வியை முதலாம் தரத்திலிருந்து கட்டாயமாக்க வேண்டிய அவசியம் தொடர்பில் சபையில் குறிப்பிட்ட அவர், இக்கல்வியை ஆங்கில மொழிலேயே மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர், கல்வியமைச்சரைக் கேட்டுக்கொண்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வரவு செலவுத் திட்டத்தில் கல்வி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய எதிர்கட்சித் தலைவர், நாட்டின் கல்வித்துறையில் 06

## தமிழ், சிங்கள மொழிகளில் மின்கட்டண குறுஞ்செய்தி



ஈ மின் கட்டண குறுஞ்செய்தி சேவை சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் கிடைக்கும் என இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது. இது தொடர்பில் வாடிக்கையாளர்களுக்கு விசேட அறிவிப்பொன்றையும் அச்சபை விடுத்துள்ளது. 06

## மீனவரின் வலையில் 30 கிலோ பாரை மீன்

### பார்வையிட மக்கள் கூட்டம்



யாழ். பருத்தித்துறை கடலில் மீனவர் ஒருவரின் வலையில் 30 கிலோ எடையுடைய பாரை மீன் ஒன்று சிக்கியது. இந்த மீன் பருத்தித்துறையில் நடைபெற்ற ஏலத்தில், 45000 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டது. இம்மீனைப் பார்ப்பதற்கு ஏராளமான மக்கள் கடற்கரையில் திரண்டிருந்தனர்.

## O/L பரீட்சையில் தோற்றியோருக்கு தொழிற்கல்விக்கான வாய்ப்புக்கள்

### 525 பாடசாலைகளில் பயிற்சி, விருப்பமானோர் விண்ணப்பிக்கலாம்



கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையில் சித்தியடைந்த மற்றும் சித்தியடையாத மாணவர்கள் சகலரும் தொழிற்கல்வியைப் பெறுவதற்குத் தகுதியுடையவர்களென, சமன்ரூபசிங்க தெரிவித்துள்ளார். இத்தொழிற் கல்வி பாடத்திட்டம் 525 பாடசாலைகளில் போதிக்கப்படவுள்ளதாகவும் வர்த்தமானி வெளியான பின்னர் விருப்பமானோர் இதற்கு விண்ணப்பிக்க முடியுமென்றும் மூன்றாம் நிலைக் கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் பதிவு அங்கீகாரம் மற்றும் தர முகாமைத்துவ பணிப்பாளர் சமன் ரூபசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடகப் பிரிவால் தயாரிக்கப்பட்ட '101 உரையாடல்' நிகழ்ச்சியில் கலந்து கொண்டபோதே சமன் ரூபசிங்க இதனைக் குறிப்பிட்டார். 06

## தாய்மொழியில் சட்டக் கல்வி கற்கும் வாய்ப்பு தமிழ் மாணவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்

### சபையில் ஸ்ரீதரன் எம்.பி கல்வியமைச்சரிடம் வேண்டுகோள்



லோரன்ஸ் செல்வநாயகம்

தாய்மொழியில் சட்டக்கல்வியை கற்கும் வாய்ப்பு தமிழ் மாணவர்களுக்கு வழங்கப்பட வேண்டுமெனவும் இதற்கமைய யாழ். பல்கலைக்கழகத்தில் இதற்கான ஏற்பாடுகள் செய்வது அவசியமெனவும் தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்.பி எஸ். ஸ்ரீதரன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

யாழ். தீவக பாடசாலைகளில் அதிபர் மற்றும் ஆசிரியர்கள் பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் அர்ப்பணிப்புடன் 06

# நகர்வலம்



அரச பாடசாலைகளில் 40,000 ஆசிரியர் வெற்றிடங்கள்:

## ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்பாவிடின் கல்வித்துறை பாதிக்கப்படும் ஆபத்து

சட்டமா அதிபர் உயர்நீதிமன்றத்தில் தெரிவிப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

நாடளாவிய ரீதியிலுள்ள அரசாங்க பாடசாலைகளில் சுமார் 40,000 ஆசிரியர் வெற்றிடங்கள் நிலவுவதாகவும், இது, கல்வித்துறையில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் சட்டமா அதிபர் உயர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நீதித்துறை செயற்பாடுகளை தவறாகப் பயன்படுத்தி, வழக்குத் தாக்கல் செய்துள்ளதால் மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

சட்ட மா அதிபர் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜரான மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் விராஜ் தயாரத்ன இதனைத் தெரிவித்துள்ளார்.

பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அரசாங்க பாடசாலைகளில் கடமையாற்றுகையில், போட்டிப் பரீட்சை நடத்தி ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு மாகாண கல்வியமைச்சு தீர்மானம் மேற்கொண்டிருந்தது.

இத்தீர்மானத்தை எதிர்த்தே மாகாண மட்ட பாடசாலைகளில் கற்பிக்கும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் குறித்த மனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.

இவ்வாறான 06 மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.இதன்போதே மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேற்படி மனுக்கள் முர்து பெர்னாண்டோ, எஸ். துரைராஜா மற்றும் ஷிரான் குணரத்ன ஆகிய மூவரடங்கிய உயர் நீதிமன்ற நீதிபதிகள் குழாம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.



அரசாங்க பாடசாலைகளில் பணிபுரியும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஆசிரியர் சேவையில் இணைக்காமல், வெளியிலிருந்து நபர்களை சேவையில் ஈடுபடுத்தியதன் மூலம் அவர்களுக்கு அநீதி இழைக்கப்படுவதாக மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி நுவான் போபகே, நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நேர்முகத்தேர்வு மற்றும் பரீட்சையின்றி ஆசிரியர் சேவைக்கு உள்வாங்கப்பட்டதாகவும் இதன்போது சட்டத்தரணி சுட்டிக் காட்டியுள்ளார்.

தொடர்ச்சியான விசாரணைக்குப் பின்னர் மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் மனுக்களை விசாரிப்பதற்கான நியாயமான காரணங்கள் காணப்படாததால், அவற்றைத் தள்ளுபடி செய்வதாக உத்தரவிட்டுள்ளது.

ஆலங்குடா பகுதியில்;

## புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் கைதான நால்வருக்கும் விளக்கமறியல்

புத்தளம் மாவட்ட பதில் நீதவான் உத்தரவு

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்

கற்பிட்டி நுரைச்சோலை, ஆலங்குடா பகுதியில் நபர் ஒருவருக்கு சொந்தமான தோட்டத்தில் புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நான்கு பேரையும் எதிர்வரும் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு புத்தளம் மாவட்ட பதில் நீதவான் ஏ.முஹம்மது சம்சுல் ராபி



உத்தரவிட்டுள்ளார்.

குறித்த தோட்டத்தின் காவலாளி உட்பட புதையல் தோண்டுவதற்கு உதவிய கற்பிட்டி பகுதியைச் சேர்ந்த மூவரும் இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

புத்தளம் மாவட்ட பதில் நீதவான் எம்.எம்.இக்பாலுக்கு சொந்தமான 25 ஏக்கர் தோட்டத்திலேயே இவ்வாறு புதையல் தோண்டப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். குறித்த தோட்டத்தில் கடந்த 15 வருடங்களுக்கும் மேல் காவலாளியாக கடமை புரிந்து வரும் சந்தேக நபர், அந்த தோட்டத்தில் குவேனி பாவித்ததாக கூறப்படும் செம்பு வகையைச் சேர்ந்த குடம் ஒன்று புதைத்து வைக்கப்பட்டுள்ளதாகவும், அதனை தேடியே தோட்டத்தில் புதையல் தோண்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகவும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

தோட்டக் காவலாளி உட்பட சந்தேக நபர்கள் நால்வரும் கடந்த சில நாட்களாக இரவு நேரங்களில் இவ்வாறு புதையல் தோண்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதுபற்றி , தோட்ட உரிமையாளரான புத்தளம் மாவட்ட பதில் நீதவான் எம்.எம்.இக்பால் நுரைச்சோலை பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



அநுராதபுரத்திற்கு உத்தியோகபூர்வ (04) விஜயத்தினை மேற்கொண்டிருந்த பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன், அநுராதபுரம் ருவன்வெலிசாயவில் இடம் பெற்ற கப்றுக்க பூஜையில் கலந்துகொண்டதன் பின்னர் ருவன்வெலிசாய விஹாரையின் விஹாராதிபதி ஈதலவெட்டுனுவெவ ஞானதிலக்க தேரரிடம் ஆசிர்வாதத்தினை பெற்றுக் கொண்டார். பின்னர் புனித ஜயஶ்ரீ மகாபோதியில் ஆசிர்வாதம் பெற்றுக்கொண்டு அடமஸ்தானாதிபதி பல்லேகம ஹேமரத்ன தேரரிடமும் ஆசிர்வாதத்தினை பெற்றுக்கொண்டார்.

(படம் ; அநுராதபுரம் தினகரன் நிருபர்)

## ஹம்பாந்தோட்டை ஸாஹிராவில் மாணவர்களுக்கு சின்னம் சூட்டல்

ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்

ஹம்பாந்தோட்டை ஸாஹிரா தேசிய பாடசாலையில் இவ் வருடத்தில் மாணவர் தலைவர்களாக தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு சின்னம் அணிவிக்கும் நிகழ்வு பாடசாலையின் அதிபர் எம். எம். ரிஸான் தலைமையில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் அண்மையில் வெகுவிமர்சையாக நடைபெற்றது.



இந்த நிகழ்வில் ஹம்பாந்தோட்டைஸங்கரீலாஹோட்டலின் பொது முகாமையாளர் ரெப்ஹான் என் ரஸீன் விசேட அதிதியாக கலந்துகொண்டார்.

இவர்களுடன் ஹம்பாந்தோட்டை இக்ரா ஆரம்ப வித்தியாலயத்தின் அதிபர் எம். இஸட். எம். இர்பான், பதகிரிய முஸ்லிம் கனிஷ்ட வித்தியாலயத்தின் அதிபர் சீ. ஐ. எம்.ரியாஸ், பாடசாலை அபிவிருத்திச் சங்க நிர்வாக கமிட்டியின் செயலாளர் எம். எ. எம். அஸாத், பிரதி அதிபர்களான எம். சீ. எஸ்.பாயிஸா,எம். எப். ஏ. கமர், சட்டத்தரணி எஸ். எம். ரிஸாம்,தொழில் அதிபர் எம். என். அதீகுல்லாஹ்வுடன் பாடசாலை அபிவிருத்திச் சங்க நிர்வாக கமிட்டி உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் மற்றும் பெற்றோர்களும் கலந்து சிறப்பித்தனர்.

## கொழும்பு தமிழ்ச் சங்கம் நடத்தும் இலக்கியக்களம்

கல்வி அமைச்சின் ஓய்வுநிலை மேலதிகச் செயலாளர் உடுவை எஸ். தில்லைநடராஜா தலைமையில் எதிர்வரும் 08ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ள இலக்கியக்களம் நிகழ்வில் "மலைமுகட்டில் முகிழ்ந்த வித்துவ தீபம்" என்னும் தலைப்பில் தமிழ்மணி "தேசத்தின் கண்", வாழ்நாள் சாதனையாளருமான மானா மக்கீன் உரை நிகழ்த்தவுள்ளார்.

## கால்வாய் நீரில் அடித்துச் செல்லப்பட்டு ஒருவர் பலி

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

பொலன்னறுவை சிறிபுர பொலிஸ் பகுதிக்குட்பட்ட நுவரகல ஏரிக்கு நீர் வழங்கும் கால்வாய் நீரில், ஒருவர் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நுவரகல பகுதியைச் சேர்ந்த 45 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளவராவர்.

இவரது சடலம் பொலன்னறுவை வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் குறித்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை சிறிபுர பொலிசார் மேற்கொண்டுள்ளனர்.

## கலாவெவ தேசிய நாமல் பூங்காவில் சுற்றித்திரிந்த யானை மீது துப்பாக்கிச்சூடு

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

கலாவெவ தேசிய நாமல் பூங்காவில் சுற்றித் திரிந்த ஒற்றைத்தந்த யானை மீது துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வனவிலங்கு அதிகாரிகள் தெரிவித்தனர்.

குறித்த யானை தொடர்பில் கல்கிரியாகம வனவிலங்கு பாதுகாப்பு அலுவலக அதிகாரிகள் நிக்கவெரட்டிய வனவிலங்கு கால்நடை வைத்திய பிரிவின் அதிகாரிகள் குழுவொன்று யானைக்கு சிகிச்சை அளித்து வருகின்றனர்.



சீனன்கோட்டை முஸ்லிம் வர்த்தகரின் உதவியில்

## அம்பலாந்தோட்டை துட்டகெமுனு மகா வித்தியாலய மாணவர்கள் கௌரவிப்பு

இலவச பாடசாலை பாதணிகளும் அன்பளிப்பு







(ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்)

ஹம்பாந்தோட்டை மாவட்டம், அம்பலாந்தோட்டை கல்வி வலயத்திலுள்ள மிகவும் பின்தங்கிய பாடசாலைகளிலொன்றான லுனம, துட்டகெமுனு மகா வித்தியாலயத்திலிருந்து இம்முறை தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுள் மூன்று பேர் சித்தி பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர். இம் மாணவர்களுக்கான கௌரவிப்பும் பாடசாலையில் படிக்கும் குறைந்த வருமானம் கொண்ட பிள்ளைகளை இனங்கண்டு அவர்களுக்கு தேவையான பாடசாலை உபகரணங்கள் (பாதணி, புத்தகம்) வழங்கும் நிகழ்வும் நேற்று (05) பாடசாலை கேட்போர் கூடத்தில் வெகுவிமர்சையாக நடைபெற்றது.

பாடசாலை அதிபர் திருமதி ரேனுகா ஜெயவர்த்தன தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பேருவளை சீனன்கோட்டையைச் சேர்ந்த மாணிக்க வியாபாரியான அல்ஹாஜ் எம்.எஸ்.எம். ஹில்மி மற்றும் அவரது புதல்வரான இளம் மாணிக்க வியாபாரி அஷ்மத் ஹில்மி ஆகியோரின் நிதியுதவியில் பாடசாலை மாணவர்களுக்கு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் கருத்துத் தெரிவித்த பாடசாலை அதிபர்; எமது பாடசாலை மாணவர்களின் முன்னேற்றத்திற்கு உதவ முன்வந்த சீனன்கோட்டை மாணிக்க வர்த்தகர்களை பாடசாலை மாணவர்களின் சார்பில் பாராட்டுகிறேன்.

இது எமது பாடசாலையின் வரலாற்றுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகவே இதனை நான் பார்க்கிறேன். எவ்வித பேதமுமின்றி எமது சிங்கள பாடசாலைக்கு முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த பரோபகாரிகள் உதவ முன்வந்ததையிட்டு மேலும் நான் நன்றிகளை தெரிவிப்பதாகவும் அதிபர் மேலும் தெரிவித்தார்.

## கொழும்பில் நடைபெற்ற அருள்வாக்கி அப்துல் காதிர் புலவரின் நினைவுப் பேருரை









( தெஹிவளை, கல்கிஸை விசேட நிருபர்)

தெல்தோட்டை ஊடக மன்றமும் அருள்வாக்கி அப்துல் காதிர் கலை இலக்கிய மன்றமும் இணைந்து நடாத்திய அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் 200 வருடங்கள் நினைவுப் பேருரையும் , கவிதைப் போட்டியில் கலந்து கொண்ட கவிஞர்களுக்கு விருது வழங்கி கௌரவிக்கும் நிகழ்வும் அண்மையில் கொழும்பு, வை.எம்.எம்.ஏ மண்டபத்தில் நடைபெற்றது.

காப்பியக்கோ டாக்டர் ஜின்னா ஷரிப்புத்தீன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நினைவுப் பேருரையை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் எழுத்தாளருமான பன்னூலாசிரியர் மயில்வாகனம் திலகராஜ் நிகழ்த்தினார்.

வரவேற்புரையை தெல்தோட்டை ஊடக மன்றத்தலைவர் அஷ்ஷெய்க் சி.எம்.எம். ஸூபைரும் பேருரையாளர் அறிமுகத்தினை கொழும்பு சாஹிராக் கல்லூரி உப அதிபர் அஷ்ஷெய்க் ஏ.எம். மிஹ்லாரும் கவிஞர்கள்



பாராட்டு நிகழ்வினை கண்டி வலய ஆசிரிய ஆலோசகர் ஐ.எம். ஜெமீலும் ஏற்புரையை தேசிய கல்வி நிறுவனத்தின் விரிவுரையாளர் டி.என். இஸ்ராவும் நிகழ்த்தினர்.

# அதிக திறனுள்ள மோட்டார் சைக்கிள்களை பதிவுசெய்யும் நடவடிக்கைகள் துரிதம்





அதிக திறன் கொண்ட மோட்டார் சைக்கிள்களை பதிவு செய்வதற்கு தேவையான பரிந்துரைகளை இரண்டு வாரங்களுக்குள் வழங்குமாறு அதிகாரிகளுக்கு அமைச்சர் அறிவுறுத்தியுள்ளார்.

நாட்டில் சட்டபூர்வமாக பதிவு செய்யப்படாத அதிதிறனுள்ள மோட்டார் சைக்கிள்கள் உள்ளன.

இவற்றை சட்டரீதியாக பதிவு செய்யும் நடவடிக்கைகள் அவசியம். இதற்கான பரிந்துரைகளை ஆராயுமாறே அமைச்சர் அறிவுறுத்தியுள்ளார்.

இது குறித்து அதிதிறனுள்ள மோட்டார் சைக்கிள்களை பதிவுசெய்யுமாறு உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். இதனைக் கருத்திற்கொண்டு,

போக்குவரத்து அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு, நிதியமைச்சு, சட்டமா அதிபர் திணைக்களம், மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் திணைக்களம், பொலிஸ் திணைக்களம் மற்றும் ஏனைய நிறுவனங்களின் சிரேஷ்ட அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன, போக்குவரத்து அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு, சட்டமா அதிபர் திணைக்களம், மோட்டார் போக்குவரத்து ஆணையாளர், பொலிஸ் திணைக்களம், நிதியமைச்சு மற்றும் உயர் திறன் கொண்ட மோட்டார் சைக்கிள் உரிமையாளர்கள் இது பற்றிய கூட்டத்தில் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பொருளாதாரத்தில் முன்னேற காலம் கடந்த கல்வித் திட்டங்களை கைவிட வேண்டும்

## சபையில் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் எம்.பி

(லோரன்ஸ் செல்வநாயகம்)



இரண்டாம் உலக யுத்தத்தில் பெரும் அழிவுகளை சந்தித்த ஜப்பான், கொரியா போன்ற நாடுகள் கல்வி ரீதியில் புதிய மாற்றங்களை ஏற்படுத்தியதாலேயே பொருளாதாரத்தில் முன்னேற்றமடைந்ததாக இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் எம்.பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இலங்கையை விட பின்தங்கிய நிலையிலிருந்த நாடுகள் தற்போது முன்னேறியுள்ள நிலையில், எமது நாட்டின் பின்னடைவு தொடர்பில் நாம் சிந்திக்க வேண்டும் எனவும் சபையில் அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வரவு செலவுத் திட்டத்தில் கல்வி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு குழு நிலை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர், எமது பல்கலைக்கழகங்கள் சர்வதேச தரப்படுத்தலில் மேல் மட்டத்தில் காணப்பட வேண்டுமானால், நாட்டின் பல்கலைக்கழக கல்வித் தரத்தை முன்னேற்றுவது தொடர்பில் புதிதாக சிந்திக்க வேண்டும். பல்கலைக்கழகங்களுக்கு தேவையான வசதிகளை பெற்றுக் கொடுப்பதில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும்.

கடந்த வருடத்தில் புதிய பல்கலைக்கழகங்களை உருவாக்கும் யோசனைகள் ஜனாதிபதி முன்வைத்தார்.

அத்துடன் புதிய மருத்துவ பீடங்களை உருவாக்குவது தொடர்பிலும் யோசனைகள் முன்வைக்கப்பட்டன.

06

# இந்திய வம்சாவளி தமிழர்களுக்கு இந்தியா குடியுரிமை வழங்க வேண்டும்

## சபையில் வேலுசாமி இராதாகிருஷ்ணன் எம்.பி

(லோரன்ஸ் செல்வநாயகம்)

இலங்கையிலிருந்து இந்தியா சென்றுள்ள இந்திய வம்சாவளி தமிழர்களுக்கு இந்தியா கண்டிப்பாக குடியுரிமை வழங்க வேண்டும் என வேலுசாமி இராதாகிருஷ்ணன் எம்.பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இலங்கைக்கு அவர்கள் மீண்டும் அனுப்பப்பட்டால் அவர்கள் பெருந்தோட்டங்களில் குடியமர்த்தப்பட்டு தற்போதைய நிலைமையில் அவர்கள் பிச்சைக்காரர்களாகவே வாழ நேரிடும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் கல்வி அமைச்சின் செலவுத்தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

கல்வித் துறையில் மறுசீரமைப்புக்களை ஏற்படுத்த கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த விசேட கவனம் செலுத்தியுள்ளதை வரவேற்கின்றோம். கல்வித்துறையில் மாற்றம் ஏற்படுத்த முன்னாள் கல்வி அமைச்சர்களான பந்துல குணவர்தன, அகிலவிராஜ் காரியவசம் ஆகியோர் முயற்சிகளை முன்னெடுத்த போதும் அந்த முயற்சிகள் எதிர்பார்த்த அளவு வெற்றியளிக்கவில்லை.

06

## ஷானி அபேசேகர விவகாரம்

# அரச புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் சமர்ப்பிப்பு

சிஐடியின் முன்னாள் இயக்குநர் ஷானி அபேசேகரவை கொலை செய்வதற்கு தீட்டப்பட்ட திட்டங்களை கண்டுபிடித்துள்ளதாக அரச புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்திற்கு தெரிவித்துள்ளனர். கார் விபத்தின் மூலம் இவரைக் கொலை செய்ய திட்டம் தீட்டப்பட்டிருந்ததாகவும் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஷானி அபேசேகரவிற்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் குறித்த பாதுகாப்பு அதிகாரசபையின் அறிக்கையையும் அதிகாரிகள் நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளனர்.

இந்த அறிக்கை ஷானி அபேசேகரவின் உயிருக்கு ஆபத்துள்ளதை உறுதி செய்துள்ளது. ஷானி அபேசேகரவின் பாதுகாப்பிற்கென, மூவரடங்கிய குழுவும் ஒரு பழைய மோட்டார் சைக்கிளும் வழங்கப்பட்டிருந்தது. இவரின் பாதுகாப்புக்கு இது போதாதென அவரின் சட்டத்தரணி நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

ஷானி அபேசேகரவிற்கு உரிய பாதுகாப்பை வழங்குமாறு அறிவுறுத்தப்பட்டும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை எனவும் அவரது சட்டத்தரணி நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.




தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 20ஆம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஜுமாதல் ஊலா பிறை 21

## குறள் தரும் சிந்தனை



நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்
யாதொன்றும் கண்பாடு அரிது

நெருப்புக்குள் படுத்துத் தூங்குவது கூட ஒரு மனிதனால் முடியும்; ஆனால் வறுமை படுத்தும் பாட்டில் தூங்குவது என்பது இயலாத ஒன்றாகும்.

# மாணவர்களின் நடத்தைகளில் கூடுதல் அவதானம் அவசியம்!

நாட்டின் பல பிரதேசங்களுக்கும் போதைப்பொருள் துஷ்பிரயோகம் பரவியுள்ளது. இது ஒரு தொற்றுநோய் போன்ற நிலையை அடைந்துள்ளது. அதன் காரணத்தினால் போதைப்பொருள் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கையிலும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

இதன் விளைவாக ஆரோக்கிய ரீதியிலான பாதிப்புகளுக்கு உள்ளாகின்றவர்களின் எண்ணிக்கையிலும் சமூக சீரழிவுகளிலும் அதிகரிப்பு ஏற்பட்டிருப்பதை அவதானிக்க முடிகிறது.

இது தொடர்பில் கவனம் செலுத்தியுள்ள சட்டத்தை அமுல்படுத்தும் தரப்பினர், போதைப்பொருள் துஷ்பிரயோகத்தைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் விரிவான அடிப்படையில் முன்னெடுத்துள்ளனர். அப்படியிருந்தும் போதைப்பொருள் துஷ்பியோகத்திற்குள் சமூகத்தின் வெவ்வேறு மட்டங்களையும் சேர்ந்தவர்களை உள்ளீர்க்கும் முயற்சிகள் சூட்சுமமான முறையில் இடம்பெற்ற வண்ணமுள்ளன. அவற்றில் பாடசாலைப் பிள்ளைகளை இலக்கு வைத்த முயற்சிகள் குறிப்பிடத்தக்கவையாகும்.

ஹெரோயின், ஐஸ், கஞ்சா, பாபுல், மாவா, புகையிலைத்தூள் என்றபடி பல்வேறு வடிவங்களில் போதைப்பொருட்கள் காணப்படுகின்றன. பல வயது மட்டங்களையும் சேர்ந்தவர்கள் இப்போதைப்பொருட்களைப் பயன்படுத்தக் கூடியவர்களாக இருக்கின்றனர். அவர்களில் பெரும்பகுதியினர் இளம் வயதினர் ஆவர்.

போதைப்பொருள் துஷ்பிரயோகத்திற்குள் இளம் வயதினரை உள்ளீர்ப்பதை இலக்காகக் கொண்ட பலவித முயற்சிகள் இடம்பெறுகின்றன. இளவயதினரை இப்பாவனைக்குள் உள்ளீர்த்துக் கொள்வதன் மூலம் அதன் வியாபாரத்தை நீண்ட காலத்திற்கு எவ்வித பிரச்சினைகளும் இன்றி முன்னெடுக்க முடியும். அதன் ஊடாக இலாபம் ஈட்டிக் கொள்ளலாம். ஆனால் வயதானவர்களை இலக்கு வைத்தால் அவர்களது மறைவோடு அதன் பாவனை முற்றுப் பெற்றுவிடும். இது இளம் பராயத்தினரை விடவும் இலாபம் அளிக்கக்கூடிய ஒன்றல்ல. அதனால்தான் இளம் பராயத்தினரை உள்ளீர்ப்பதற்கு போதைப்பொருள் வர்த்தகர்கள் முக்கியத்துவம் அளிக்கின்றனர்.

அந்த வகையில் ஐஸ், பாபுல், மாவா, புகையிலைத் தூள் போன்ற போதைப்பொருள் பாவனைக்குள் பாடசாலை மாணவர்களை உள்ளீர்க்கும் முயற்சிகள் சூட்சுமான முறையில் முன்னெடுக்கப்படுகின்றன. இதன் நிமித்தம் விருந்துபசாரங்கள் கூட நடத்தப்படுகின்றன. சில பிரதேசங்களில் பாடசாலைகளுக்கு அருகில் உள்ள விற்பனை நிலையங்களிலும் இவ்வாறான போதைப்பொருட்கள், இனிப்பு என்ற பெயரில் விற்பனை செய்யப்படுகின்றன.

ஆனால் போதைப்பொருள் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுவதன் விளைவாக உடல், உள ஆரோக்கிய ரீதியில் பலவித நெருக்கடிகளுக்கும் பாதிப்புகளுக்கும் உள்ளாக நேரிடும் என்பதை இவர்களில் பெரும்பகுதியினர் அறியாத நிலையில்தான் அதன் பாவனைக்கு உள்ளாகுகின்றனர். அத்தோடு சமூக சீரழிவுகளுக்கும் கூட இத்துஷ்பிரயோகம் துணைபுரிகின்றது.

இவ்வாறான நிலையில்தான் போதைப்பொருள் துஷ்பிரயோகங்களை கட்டுப்படுத்தி அதிலிருந்து மக்களை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை சட்டத்தை அமுல்படுத்தும் தரப்பினரும் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினரும் முன்னெடுத்து வருகின்றனர்.

பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்த போதைப்பொருள் விற்பனை நாட்டின் பல பிரதேசங்களில் இடம்பெற்று வருகின்றது. பாடசாலைகளுக்கு அருகிலுள்ள சிறுகடைகள், பஸ் தரிப்பிடங்கள், வெற்றிலை, பாக்கு விற்பனை செய்யும் இடங்கள் அவற்றில் குறிப்பிடத்தக்க இடங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இது தொடர்பில் சட்டத்தை அமுல்படுத்தும் தரப்பினருக்கு தகவல்களும் கிடைக்கப் பெற்றுள்ளன. இவ்வாறான இடங்களில் திடீர் தேடுதல்களை மேற்கொள்வது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான சூழலில் மாத்தளை மாநகர சபைக்கு உட்பட்ட பிரதேசத்தில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின் போது மாணவர்களை இலக்கு வைத்து மாவா, பாபுல், புகையிலைத் தூள் போன்ற போதைப்பொருட்களை விற்பனை செய்த ஏழு விற்பனை நிலையங்கள் கண்டறியப்பட்டதோடு அந்நிலையங்கள் சீல் வைத்து மூடப்பட்டுமுள்ளன. அந்நிலையங்களுக்கு நீதிமன்றத்தின் ஊடாக சட்ட நடவடிக்கை எடுக்கவும் ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பாடசாலை மாணவர்களைப் போதைப்பொருள் பாவனைக்குள் உள்ளீர்க்கும் முயற்சிகளை முறியடிப்பதில் பெற்றோரும் சமூகநலன் விரும்பிகளும் சட்டத்தை அமுல்படுத்தும் தரப்பினருக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் நல்க வேண்டும். இதனைத் தம் பொறுப்பாகக் கருதி செயற்பட வேண்டும். குறிப்பாக தம் பிள்ளைகளின் நடத்தைகள், செயற்பாடுகள் மற்றும் பயணங்கள் குறித்து பெற்றோர் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். அதன் ஊடாக தவறானதும் பிழையானதுமான குற்றசெயல்களுக்குள் பிள்ளைகள் உள்ளீர்க்கப்படுவதைத் தவிர்த்துக் கொள்ள முடியும். அதன் ஊடாக இந்நாட்டின் எதிர்காலப் பரம்பரையினரை ஆரோக்கியம் மிக்க சமூகமாகக் கட்டியெழுப்பக் கூடியதாக இருக்கும்.

editor.tkn@lakehouse.lk

# கொட்டித் தீர்த்த பலத்த மழையினால் நீரில் மூழ்கியது சென்னை மாநகரம்!

தமிழ்நாட்டின் தலைநகர் சென்னையை மிக்ஜாம் புயல் புரட்டி எடுத்துள்ளது. மிக்ஜாம் புயல் கரையை கடப்பதற்கு முன்பே சென்னை மிகப்பெரும் பாதிப்பை சந்தித்துள்ளது.

வங்கக்கடலில் உருவாகிய மிக்ஜாம் புயலால் சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் நேற்றுமுன்தினம் இரவு முதல் பலத்தமழை பெய்தது. அநேக இடங்களில் பலத்தமழை பதிவாகியுள்ள நிலையில், புயல் நேற்று கரையை கடக்கவிருந்த நிலையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தமிழ்நாடு அரசு நேற்று சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு ஆகிய நான்கு மாவட்டங்களுக்கு விடுமுறை அறிவித்துள்ளது.

சென்னையில் வெள்ளத்தில் சிக்கியவர்களை மீட்கும் பணியில் பொலிஸ்துறை, தீயணைப்புத்துறை, பேரிடர் மீட்புத்துறை ஆகியன ஈடுபட்டுள்ளன.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் பல்வேறு இடங்களில் தொடர்மழையால் வெள்ளம் சூழ்ந்துள்ளது. பாடசாலை, கல்லூரி, சில தனியார் நிறுவனங்கள் விடுமுறை அளித்துள்ளதையடுத்து பெரும்பாலானோர் வீடுகளிலேயே முடங்கியுள்ளனர்.

மழையால் சென்னையின் தாழ்வான பகுதிகளில் வெள்ளநீர் சூழ்ந்துள்ளது. சில இடங்களில் குடியிருப்பு பகுதிகளுக்குள் வெள்ளநீர் தேங்கி இருக்கிறது. புறநகர் பகுதிகளில் அடுக்குமாடி குடியிருப்புகளின் தரைத்தளங்களில் தண்ணீர் புகுந்துள்ளது.

மழையினால் சென்னையில் வசிக்கும் 3 இலட்சம் பேர் வரை பாதிக்கப்பட்டுள்ளனர். சென்னை விமான நிலையம் மூடப்பட்டதால் 150 விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன.



மக்களை வீடுகளுக்குள் முடக்கியது மிக்ஜாம் புயல்!

வீதிகளில் விழுந்த மரங்களை அகற்ற சென்னை மாநகராட்சி, தீயணைப்புத் துறை சார்பாக உதவி எண்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. மழையுடன் சேர்த்து பலத்த காற்று வீசியதால் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் பல இடங்களில் மரங்கள் முறிந்து விழுந்தன. சென்னை மீனம்பாக்கத்தில் மழையின் போது சுமார் 82 கி.மீ வேகத்தில் காற்று வீசியது. சென்னை நகரில் உள்ள நிவாரண முகாம்களில் நூற்றுக்கணக்கானோர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

பல பகுதிகளில் அடுக்குமாடி குடியிருப்புகளை வெள்ள நீர் சூழ்ந்துள்ளது. தரைத்தளத்தில் வெள்ளநீர் சூழ்ந்ததால், மக்கள் முதல் மாடியில் உள்ள நண்பர்கள், உறவினர்களின் வீடுகளில் தஞ்சம் அடைந்துள்ளனர். புயல் காரணமாகசென்னையை ஒட்டியுள்ள மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்கள் கடந்த சில நாட்களாக கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லவில்லை. கடல் கொந்தளிப்புடன் காணப்படுகிறது.

தமிழ்நாட்டில் டிசம்பர் மாதம் வந்தாலே சென்னை மற்றும் அதனை ஒட்டிய திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் வசிக்கும் மக்கள் மத்தியில் அச்ச உணர்வு மேலோங்குகிறது. இதற்கு முக்கிய காரணம் அவ்வப்போது ஏற்படுகின்ற வெள்ளம் ஆகும்.

சென்னையில் 24 மணி நேரத்தில் 40 செ.மீ மழை பெய்துள்ளது.குறுகிய நேரத்தில் அதிக மழை பெய்ததே வெள்ளப் பாதிப்புக்கு மிக முக்கிய காரணம்.

"சென்னையின் ஆக்கிரமிப்புகளை அகற்றினால் மழையை சமாளிக்கலாம். மீனவ கிராமமாக இருந்த பழைமையான நகரமான சென்னை பின்னாளில் வளர்ச்சி அடைந்து பெருநகரமாக மாற்றியமைக்கப்பட்டது. தற்போது, ஒரு சதுர கிலோ மீட்டர் பரப்பளவுக்குள் 28 ஆயிரம் மக்கள் வசித்து வருகின்றனர். சென்னை தனது திறனை தாண்டி மக்கள் தொகையை தாங்கிக் கொண்டு இருப்பதால் மழைவெள்ளத்தை சமாளிக்க இயலவில்லை" என நிபுணர்கள் கூறுகின்றனர்.

"சென்னையில் பெய்த மழைக்கு எந்த நகரமும் தாக்குப்பிடிக்காது. இப்படி பேய் மழை பெய்தால் எந்த நகரமாக இருந்தாலும் வெள்ளத்தில் சிக்கிக் கொள்ளும். சென்னையின் ஆண்டு சராசரி மழை அளவு 100 மிமீ முதல் 1100 மி.மீ ஆக இருக்கிறது. அதில் மூன்றில் ஒரு பங்கு 24 மணி நேரத்தில் பெய்து இருக்கிறது" என்று வளிமண்டலவியல் அதிகாரிகள் கூறினர். தொடர்மழை மற்றும் வெள்ளம் காரணமாக ஒட்டுமொத்த சென்னையும் முடங்கிப் போயுள்ளது.

# அறபுத் தமிழை காப்பகப்படுத்தும் முயற்சியில் தென்கிழக்கு பல்கலைக்கழகம்

தமிழ்மொழியை அறபு எழுத்து வடிவில் உச்சரிக்க முற்பட்ட எழுத்து வடிவமே அறபுத்தமிழாகும். அறபு மொழியிலுள்ள அதிகப்படியான சொல் மற்றும் ஒலிப்பு முறைகள் தமிழில் ஊடுருவியமையால் இம்மொழி உருவாகியது.

தமிழ்நாட்டில் குடியேறிய அறபிகள் தமிழைக் கற்றுக் கொண்டதுடன், அதனை அறபியில் எழுதினர். இவர்களால் பயன்படுத்தப்பட்டு வந்த இம்மொழி இந்தியாவின் தமிழ்நாடு மற்றும் இலங்கை முஸ்லிம்களிடமும் வழக்கில் இருந்துள்ளது.

முஸ்லிம்களிடமிருந்து வழக்கொழிந்து விட்ட அறபுத் தமிழ் மூதாதையர்களின் கல்வி, கலாசார, பண்பாட்டியல்களை வெளிக்காட்டும் ஓர் கூறாகும். இது இளம்தலைமுறையினர் அறியாததொன்றாக மாறிவிட்டது. அறபுத் தமிழில் வெளிவந்த இலக்கியங்களும் ஆவணங்களும் இலங்கை முஸ்லிம்களின் மிகப் பெறுமதி வாய்ந்த, தனித்துவமான முதுசங்கள் என்பதை மீளமைக்க வேண்டிய கடமைப்பாடு துறைசார்ந்தவர்கள் மீது சுமத்தப்பட்ட முக்கிய பணியாகும்.

இலங்கையின் வரலாற்றோடு கலந்துள்ள முஸ்லிம்களின் பாரம்பரியங்களையும், முதுசங்களையும் பாதுகாக்கும் நோக்குடன் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் காத்திரமான பங்களிப்புக்கள் பலவற்றினை மேற்கொண்டு வருகின்றது. இதில் பல்கலைக் கழகத்தின் இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீடத்தின் அரும்பொருட் காட்சியகம் மற்றும் பல்கலைக்கழக நூலகம் முதலியவற்றினூடாக முன்னெடுக்கப்பட்டுவரும் பணிகள் முக்கியமானவை.

இவ்வகையில் தென்கிழக்குப் பல்கலைக் கழகம் அறபுத் தமிழைக் காப்பகப்படுத்தும் முயற்சியினை முன்னெடுத்து வருகின்றது. 90 அறபுத் தமிழ் நூல்கள் திரட்டப்பட்டுள்ளன.

இவை அன்பளிப்பாகக் கிடைக்கப் பெற்றவைகளாகும். இவற்றினை எண்ணியமப் படுத்தி (Digitized) ஒரு மின்னியல் நூலகமாக (elibrary) மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இதனை http://www.ar.lib.seu.ac.lk என்ற இணையத்தள முகவரியில் பார்வையிடவும் பதிவிறக்கம் (download) செய்து பயன்படுத்தவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அறபுத் தமிழைப் பாதுகாக்கும நோக்கில் இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபுமொழிப் பீடம், பல்கலைக்கழக நூலகத்துடன்





இணைந்து, நாடளாவிய ரீதியில் அறபுத்தமிழ் மொழியில் அமைந்துள்ள நூல்கள், கடிதங்கள், அழைப்பிதழ்கள், காணி உறுதிகள், விளம்பரங்கள், திருமணப் பதிவுகள் போன்றவற்றை உள்ளடக்கிய ஆவணங்களைப் பாதுகாக்கும் ஒரு திட்டத்தினை ஆரம்பித்துள்ளது. இத்துறை சார்ந்த விடயங்கள் இருப்பின் பல்கலைக்கழகத்திற்கு ஒப்படைக்குமாறு அறபு, இஸ்லாமிய கற்கைகள் பீடம் கோரியுள்ளது.

நூல்களை ஆவணப்படுத்துவதோடு மின்னியல் நூலகத்திலும் உரியவர்களின் பெயரில் பதிவேற்றம் செய்யவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஆவணங்களை ஒப்படைக்க தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் இஸ்லாமியக் கற்கைகள் பீடத்தின் பேராசிரியர் எம்.எஸ்.எம். மஸ்ஹிர்(mazahirsmm@seu.ac.lk), காப்பக சேகரிப்பு பகுதிக்கான சிரேஷ்ட உதவி நூலகர் எஸ்.எல்.எம்.சஜீர்(sajeer.slm@seu.ac.lk) ஆகியோருடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

**ஜெஸ்மி எம்.மூஸா...**
*(பெரியநீலாவணை தினகரன் நிருபர்)*

# ஒலுவில் வைத்தியசாலை, பெரியபள்ளிவாசல் குறைகள் தீர்க்க பைசல் காசிம் எம்.பி ஏற்பாடு

முன்னாள் சுகாதார இராஜாங்க அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான பைசல் காசிம் சில தினங்களுக்கு முன்னர் ஒலுவில் பிரதேசத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்தார். இவ்விஜயத்தின் போது ஒலுவில் வைத்தியசாலையின் குறைபாடுகள் மற்றும் அங்குள்ள உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கும் குறைகளையும் கேட்டறிந்து கொண்டார்.





அத்துடன் இவ்வைத்தியசாலையினால் ஒலுவில்வாழ் மக்கள் பெற்றுக் கொள்ளும் சேவைகளின் தரத்தினையும் பைசல் காசிம் எம்.பி இதன்போது கேட்டறிந்து கொண்டார். இங்குள்ள பொதுமக்கள் சேவை பெற்றுக் கொள்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக பாராளுமன்ற உறுப்பினரின் கவனத்திற்கு கொண்டுவந்திருந்தனர். இதனை கவனத்திற் கொண்ட அவர் உரிய அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு இவ்வைத்தியசாலையில் உள்ள குறைபாடுகள், அவசரமாக நிவர்த்தி செய்ய வேண்டிய விடயங்கள் தொடர்பில் தெளிவுபடுத்தியிருந்தார்.

குறித்த விடயங்களுக்கு உரிய தீர்வை குறுகிய தினங்களுக்குள் வழங்குவதாக அதிகாரிகள் கூறியதற்கமைவாக அவ்விடயங்களை பொதுமக்களுக்கு தெளிவுபடுத்தியதுடன், சேவை வழங்கும் வைத்தியர்கள், ஊழியர்களுடன் சிநேகபூர்வமான கலந்துரையாடலிலும் ஈடுபட்டிருந்தார்.

அதனைத் தொடர்ந்து ஒலுவில் பிரதேசத்தில் மிகப் பழைமையான வரலாறு கொண்ட பெரிய பள்ளிவாசலுக்கும் விஜயம் மேற்கொண்டிருந்தார். பள்ளிவாசலின் சுற்றுமதில் அமைத்தல், அதற்கான நிதி திரட்டும் விடயங்கள் தொடர்பில் பள்ளிவாசல் நிருவாகத்தினர் தெளிவுபடுத்தியிருந்தனர்.

இவ்விடயத்திற்கு தன்னாலான முழு ஒத்துழைப்பினையும் வழங்குவதாக பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார். பின்னர் நிருவாக சபையினரால் சுற்றுமதில் நிர்மாணிப்புக்கு நிதி திரட்டல் தொடர்பான ஆவணக் கடிதம் கையளிக்கப்பட்டது.

அவர் இராஜாங்க அமைச்சராகப் பதவிவகித்த காலத்தில் இப்பிரதேசத்திற்கு ஆற்றிய பணிகள் தொடர்பில் அங்குள்ள பெரியோர்கள், இளைஞர்கள் பலரும் சிலாகித்து பேசியிருந்தனர். இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த பைசால் காஷிம் எம்.பி, தன்னுடைய அரசியல் வாழ்வில் ஒருபோதும் அரசியலை மையப்படுத்தி சேவைகளை செய்யவில்லை என்றும் மக்களை, அவர்களின் தேவைகளை மையப்படுத்தியே பணி செய்துள்ளதாகவும், இதனை இப்பிரதேச மக்கள் நன்கறிவர் என்றும் குறிப்பிட்டார்.

**றிசாத் ஏ. காதர்...**
*(ஒலுவில் மத்திய விசேட நிருபர்)*

# கொழும்பில் புதிய அலுவலகத்தை திறந்துள்ள IMM கன்சல்ட் நிறுவனம்

துபாயை தலைமையிடமாகக் கொண்ட முன்னணி இடம்பெயர்வு ஆலோசனை நிறுவனமான IMM கன்சல்ட், கொழும்பில் தனது புதிய அலுவலகத்தை திறந்து வைத்துள்ளது. இந்த விரிவாக்கம் IMM கன்சல்ட்டின் மற்றொரு குறிப்பிடத்தக்க மைல்கல் ஆகும்.

ஷமீர் நிசார் மற்றும் குலாம் மத்னி ஆகியோரால் துபாயில் நிறுவப்பட்ட IMM கன்சல்ட், இடம்பெயர்வு ஆலோசனையில் விரைவாக நம்பகமான பெயராக மாறியுள்ளது. சிறந்து விளங்குவதற்கான அர்ப்பணிப்பு மற்றும் குடியேற்ற செயல்முறைகளில் தனிநபர்கள் மற்றும் குடும்பங்களுக்கு உதவுவதற்கான பணியினை திறம்பட செய்து வருகின்றது. நிறுவனம் ஏற்கனவே துபாயில் ஒரு வலுவான இருப்பை நிறுவியுள்ளது. இந்த புதிய அலுவலகத்தை கொழும்பில் திறப்பது வாடிக்கையாளர்களுக்கான அர்ப்பணிப்பை மேலும் வலுப்படுத்துகின்றது.

கனடா, ஐக்கிய இராச்சியம், அவுஸ்திரேலியா, ஐக்கிய அமெரிக்கா மற்றும் நியூசிலாந்து ஆகிய 5 கண்கள் நாடுகளுக்கான இடம்பெயர்வு சேவைகளில் நிபுணத்துவம் பெற்ற IMM கன்சல்ட் அதன் தனித்துவமான சேவைக்காக தொழில்துறையில் சிறந்து நிற்கிறது.



IMM கன்சல்ட் அதன் வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட அணுகுமுறையில் பெருமிதம் கொள்கிறது, அதன் வாடிக்கையாளர்களின் தனிப்பட்ட தேவைகள் மற்றும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப தீர்வுகளை வழங்குகிறது.

IMM கன்சல்ட் இணை நிறுவனர் ஷமீர் நிசார் கூறுகையில், 'ஐஆஆ கன்சல்ட் இன் நிபுணத்துவத்தை இலங்கையின் கொழும்பிற்கு கொண்டு வருவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். தனிநபர்களுக்கும் குடும்பங்களுக்கும் இடம்பெயர்வு செயல்முறையை சீராகச் செய்ய நாங்கள் முயற்சிப்பதால், சிறப்பான மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட சேவைக்கான எங்கள் அர்ப்பணிப்பு ஒப்பற்றது' எனக் குறிப்பிட்டார்.

இணை நிறுவனர் குலாம் மத்னி கூறுகையில், 'கொழும்பில் எங்களின் புதிய அலுவலகத்தை திறந்து வைப்பது, நமது தடத்தை மூலோபாய ரீதியாக விரிவுபடுத்துவதற்கான எங்களின் பார்வையை பிரதிபலிக்கிறது. மதிப்பிற்குரிய 5 கண்கள் நாடுகளுக்கு எங்கள் சிறப்பு சேவைகளை வழங்கி, இலங்கையில் வாடிக்கையாளர்களின் இடம்பெயர்வு பயணத்திற்கு பங்களிக்க நாங்கள் எதிர்நோக்குகிறோம்' எனக் கூறினார்.

இலங்கையின் கொழும்பில் உள்ள புதிய கிளையானது, 5 கண்கள் நாடுகளுக்கு இடம்பெயர விரும்பும் தனிநபர்கள் மற்றும் குடும்பங்களுக்கு விரிவான இடம்பெயர்வு ஆலோசனை சேவைகளை வழங்கி, பிராந்தியத்தில் IMM கன்சல்ட்டின் இருப்பை மேலும் வலுப்படுத்தும். இந்த விரிவாக்கமானது, உலகெங்கிலும் உள்ள வாடிக்கையாளர்களுக்கு குடியேற்ற செயல்முறையை சீராகவும், திறமையா





கவும், மன அழுத்தமில்லாததாகவும் மாற்றும் நிறுவனத்தின் நோக்கத்துடன் ஒருமுகப்படுகின்றது.

வளர்ச்சி மற்றும் வெற்றியின் இந்த அற்புதமான அத்தியாயத்தை எங்களுடன் இணைந்து கொண்டாடுவதில் ஆர்வமுள்ள அனைத்து தரப்பினருக்கும் நலன் விரும்பிகளுக்கும் திறந்த அழைப்பை நாங்கள் விடுக்கின்றோம். எங்கள் இடம்பெயர்வு சலுகைகள் தொடர்பான மேலதிக தகவல்களுக்கு மற்றும் விசாரணைகளுக்கு, 94 77 798 2379 என்ற இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும் அல்லது ttps://www.immconsults.com/ இல் உள்ள எங்கள் வலைத்தளத்தைப் பார்வையிடவும் என அவர் மேலும் தெரிவித்தார்.

தினகரன் வர்த்தக உலா

shumsfahim@gmail.com | சம்ஸ் பாஹிம்

# நீதி அமைச்சுக்கான கொடுப்பனவுத் தீர்வை வழங்கும் மக்கள் வங்கி

நவீனமயமாக்கல் மற்றும் சௌகரியத்தை நோக்கிய ஒரு புத்தாக்க நடவடிக்கையாகஇ நீதி அமைச்சுக்கான கொடுப்பனவு ஏற்றுக்கொள்ளும் அதிநவீன தீர்வை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தியுள்ளதாக மக்கள் வங்கி பெருமையுடன் அறிவித்துள்ளது. இந்த மாற்றத்திற்கான முயற்சியானது துஇ கடனட்டைகள் மற்றும் டெபிட் அட்டைகள் போன்ற டிஜிட்டல் கொடுப்பனவு முறைகள் மூலம் நீதிமன்றங்களால் விதிக்கப்படும் அபராதங்களை தங்குதடையின்றிச் செலுத்த பொதுமக்களுக்கு இடமளிக்கிறது.

இந்த புத்தாக்கமான ஒத்துழைப்பை உறுதிப்படுத்தும் புரிந்துணர்வு உடன்படிக்கையானது 2023 நவம்பர் 30ஆம் திகதியன்று அமைச்சின் வளாகத்தில் நடைபெற்ற வைபவத்தின் போது கைச்சாத்திடப்பட்டது. அமைச்சின் செயலாளர் திருமதி வசந்த பெரேரா மற்றும் மக்கள் வங்கியின் பிரதம



நிறைவேற்று அதிகாரி/ பொது முகாமையாளர் கிளைவ் பொன்சேகா ஆகிய மதிப்பிற்குரிய அதிகாரிகள் இதில் கைச்சாத்திட்டுள்ளனர். இந்நிகழ்வில் நீதிஇ சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் (கலாநிதி) விஜயதாச ராஜபக்ஷ பாராளுமன்ற உறுப்பினர், இராஜாங்க அமைச்சர் . அனுராத ஜயரத்ன மற்றும் மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ஷ ஆகியோரும் கலந்து சிறப்பித்துள்ளனர்.

மக்கள் வங்கிக்கும் நீதி அமைச்சுக்கும் இடையிலான இந்த ஒத்துழைப்பு, செயல்திறன், வெளிப்படைத்தன்மை மற்றும் அரச சேவை ஆகிய துறைகளில் ஒரு பாரிய முன்னேற்றத்தைக் குறிக்கிறது. இந்த டிஜிட்டல் கொடுப்பனவுத் தீர்வைச் செயல்படுத்துவது சட்டத் துறையில் நெறிப்படுத்தப்பட்ட மற்றும் பயனர் நேய செயல்முறைகளுக்கு அதிகரித்து வரும் தேவையை நிவர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## வெற்றிகரமான உரிமைப் பங்கு வழங்கலைத் தொடர்ந்து

# அமானா வங்கியின் மூலதனம் ரூபா 20 பில்லியனைக் கடந்தது



வங்கியியல் துறைக்கு வழங்கப்பட்டிருந்த ஒழுங்குபடுத்தல் வழிகாட்டுதல்களின் பிரகாரம் மேம்படுத்தப்பட்ட குறைந்த மூலதன தேவைப்பாட்டு இலக்குகளை வெற்றிகரமாக எய்தி ரூ. 6 பில்லியனை உரிமை பங்கு வழங்கலினூடாக திரட்டியுள்ளதாக கொழும்பு பங்குப்பரிவர்த்தனைக்கு அமானா வங்கி அறிவித்துள்ளது. இந்த உரிமைப் பங்கு வழங்கலின் போது வங்கியின் ஏற்கனவே காணப்படும் பங்குதாரர்கள் மற்றும் வெளிநாட்டு, கூட்டாண்மை மற்றும் HNW பங்கேற்புடனான புதிய முதலீட்டாளர்களும் ஈடுபாட்டை வெளிப்படுத்தியிருந்தனர்.

இந்த உரிமைப் பங்கு வழங்கலினூடாக சுமார் 5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான வெளிநாட்டு முதலீடுகள் கிடைத்திருந்ததுடன், பிரதான பங்குதாரரான AAA தரப்படுத்தலைக் கொண்ட IsDB குழுமத்தின் மொத்த முதலீட்டு பெறுமதியை 25 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு அதிகமானதாக உயர்த்தியிருந்தது. இதனூடாக சவால்கள் நிறைந்த சூழலிலும், இலங்கையிலும் அமானா வங்கியிலும் கொண்டுள்ள தொடர்ச்சியான நம்பிக்கையை வெளிப்படுத்தியிருந்தது. நாட்டில் நிலவிய மிகவும் சவால்கள் நிறைந்த காலப்பகுதியிலும் வெளிநாட்டு முதலீடுகளைப் பெற்றிருந்தமைக்காக இலங்கை மத்திய வங்கியின் சர்வதேச வணிகச் சிறப்பு விருது வழங்கி அமானா வங்கி கௌரவிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

2021 ஆம் ஆண்டு முதல் அமானா வங்கியின் பங்குகளை கையகப்படுத்தலை ஆரம்பித்திருந்த பன்முகப்படுத்தப்பட்ட ஈடுபாட்டைக் கொண்ட நன்மதிப்பைப் பெற்ற செந்தில்வேல் ஹோல்டிங்ஸ், உரிமைப் பங்கு வழங்கலிலும் உறுதியான பங்குபற்றலை வெளிப்படுத்தி, அமானா வங்கியின் 2ஆவது அதிகூடிய பங்குதாரர் எனும் தனது நிலையை மேலும் உறுதி செய்திருந்தது.

# தலைமுறைகளை இணைக்கும் ஒரு முக்கிய தருணத்தை குறிக்கும் PRISL வருடாந்த பொதுக்கூட்டம்

இலங்கையின் பிளாஸ்டிக் மற்றும் இறப்பர் கல்வியகம் (Plastics & Rubber Institute of Sri Lanka PRISL), அதன் வருடாந்த பொதுக் கூட்டத்தை (AGM) அண்மையில் இராஜகிரியவில் உள்ள அதன் தலைமை அலுவலகத்தில் நடாத்தியிருந்தது. கொவிட்19 தொற்றுக்கு பின்னரான இலங்கையின் பொருளாதார மறுமலர்ச்சியின் பின்னணியிலும், பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும், 63 ஆண்டுகால நம்பகமான கல்விப் பங்காளி எனும் அதன் சேவையை PRISL கொண்டாடியது.

இறப்பர் மற்றும் பிளாஸ்டிக் தொழில்துறைகளில் தொழில்நுட்ப மற்றும் தொழில்முறை பணியாளர்களுக்கு அவசியமான திறனை வளர்ப்பதில் தேசிய ரீதியிலான ஒரு முக்கிய பங்கை அது கொண்டுள்ளது.

PRISL இன் வருடாந்த பொதுக்கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட செயற்குழு உறுப்பினர்கள் தங்கள் பாத்



திரங்களுக்கு உரித்தான நிபுணத்துவத்தை வழங்குகிறார்கள். இந்த அமைப்பிற்கு P.P. பெரேரா தலைமை தாங்குகிறார்.

இந்த முயற்சியில் அவருக்கு உதவியாக தெரிவு செய்யப்பட்டுள்ள உப தலைவர்களான டாக்டர் உபுல் ரத்நாயக்க மற்றும் பிரபாத் ஜயசிங்க ஆகியோர் தலைமைத்துவம் மற்றும் மூலோபாய நோக்கு ஆகியவற்றின் மூலம் நிரூபிக்கப்பட்ட சாதனையாளர்களாவர். செயலாளராக பியோ பெரேராவும், பொருளாளராக K.A.C. வித்யாரத்னவும், நிர்வாகத் தகுதியின் மூலம் இக்குழுவை ஆதரிப்பவரான உதவிச் செயலாளராக திருமதி தேவகி றொட்ரிகோவும் தெரிவு செய்யப்பட்டுள்ளதோடு, இவர்கள் அனைவரும் கூட்டாக இணைந்து ஒரு ஆற்றல்மிக்க குழுவாக தொடர்ச்சியாக வெற்றியை நோக்கி பயணிக்கவுள்ளனர்.

# ரக்பி விளையாட்டுத் துறையின் முன்னேற்றத்திற்காக CR&FC உடன் கைகோர்க்கும் First Capital

ஜனசக்தி குழும நிறுவனமான First Capital Holdings PLC எதிர்வரும் ரக்பி பருவகாலத்திற்கான பிளாட்டினம் அனுசரணையாளராக சிலோனீஸ் ரக்பி மற்றும் கால்பந்து கழகத்துடன் கைகோர்ப்பதனையிட்டு பெருமிதமடைகிறது. இந்த ஒத்துழைப்பு, CR&FC கழகத்துடனான அதன் தொடர்பின் மூலம் ரக்பி விளையாட்டுத் துறையில் First Capital இன் முதல் பிரவேசத்தைக் குறிக்கிறது. இது இலங்கையில் பெருமளவானவர்களி கவனத்தைப் பெற்றுள்ள ரக்பி விளையாட்டின் வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்படும் ஒரு நடவடிக்கையாகும். இலங்கை ரக்பி விளையாட்டுத் துறையில் அதன் 100 ஆண்டுகால பாரம்பரியத்தைக் கொண்ட CR&FC , பல்வேறு போட்டிகளில் நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்திய மிகச்சிறந்த வ வீரர்களை உருவாக்கி நாட்டின் வளமான ரக்பி விளையாட்டு பாரம்பரியத்திற்கு ஒரு சிறந்த சான்றாக திகழ்கிறது. இந்த பாரம்பரியத்தைப் பேணும் வகையில், CR&FC கழகம் எதிர்காலத்தில் ஒரு ரக்பி கல்வி நிறுவகத்தை நிறுவுவதற்கான தொலைநோக்கு திட்டத்தை கொண்டுள்ளது. இந்த பலம்பொருந்திய அணியுடன் பங்காளராக இருப்பதில் First Capital பெருமிதம் கொள்வதுடன், மற்றுமொரு வெற்றிகரமான ரக்பி பருவகாலத்திற்கு CR&FC கழகத்திற்கு ஆதரவளிக்கவுள்ளது.




இலங்கையின் மிகப்பெரும் ரக்பி கழகங்களில் ஒன்றான CR&FC உடன் கைகோர்ப்பதன் மூலம், நாட்டின் மிகவும் அபிமானம் பெற்ற விளையாட்டுகளில் ஒன்றை மேம்படுத்துவதற்கு First Capital எதிர்பார்க்கிறது. இந்த இரண்டு முன்னணி நிறுவனங்களும் 'செயற்திறனுக்கு முதலிடம்" என்ற கருத்துக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கின்;றன என்ற வகையில், இந்த பங்காண்மையானது அனைவருக்கும் எண்ணிலடங்காத நன்மைகளுடன் புதிய உச்சங்களை சென்றடையும் என்பதில் சந்தேகமில்லை.




அருந்ததியின் ஏற்பாட்டில் மாற்று மோதிரம் premier wedding Show & wedding Exhibition எதிர்வரும் December மாதம் 20ஆம் திகதி நடைபெற இருக்கிறது. இது தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடக மாநாடு அண்மையில் கொழும்பு Hotel Maradha வில் நடைபெற்றது. அருந்ததி நிறுவனத்தின் Director Mekala நடைபெற இருக்கும் premier Show பற்றி பல விடயங்களை தெளிவுபடுத்தினார்.

# தர முகாமைத்துவ அமைப்பான ISO 9001:2015 இனால் Sunshine Healthcare Lankaவுக்கு விருது

Sunshine Holdings PLCன் Healthcare பிரிவான Sunshine Healthcare Lanka Limited (SHL), SHL (Pharmaceutical) மற்றும் பிரதான களஞ்சிய தலைமை அலுவலகத்திற்குள் செயல்படுத்தப்பட்ட அதன் தர முகாமைத்துவ அமைப்புக்காக நிறுவனம் ISO 9001:2015 (UKAS) சான்றிதழைப் பெற்றுள்ளது. Bureau Veritas India வழங்கிய இந்தச் சான்றிதழானது, வாடிக்கையாளர் மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் உயர்தர சுகாதாரப் பொருட்களை வழங்குவதில் SHL இன் உறுதிப்



பாட்டை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது, வாடிக்கையாளர் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகளைப் புரிந்து கொண்டு அதனை பூர்த்தி செய்வதன் மூலம் வாடிக்கையாளர் திருப்தியை வலியுறுத்துகிறது.

இந்த சான்றிதழ் குறித்து கருத்து தெரிவித்த Sunshine Pharmaceuticals நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சாந்த பண்டார, "ISO 9001:2015 சான்றிதழைப் பெறுவது Sunshine Healthcare Lanka Limitedக்கு குறிப்பிடத்தக்க மைல்கல்லாகும்.

# OrphanCare நிதியத்துக்கு உதவிக்கரம் நீட்டும் Paan Paan

அநாதரவான சிறுவர்களை பராமரித்து ஆதரவளிக்கும் வகையில் இயங்கும் சுயாதீன காப்பகமான OrphanCareக்கு, கொழும்பின் புகழ்பெற்ற பேக்கரி தயாரிப்புகள் விற்பனை உணவகமான Paan Paan உதவிக்கரம் நீட்டியுள்ளது. இலங்கையின் அநாதரவான இளைஞர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்காக இந்த கைகோர்ப்பை மேற்கொண்டுள்ளது. முக்கியத்துவம் வாய்ந்த மனிதநேயச் செயற்பாடாக அமைந்துள்ள இந்த பங்காண்மையானது, அநாதரவான சிறுவர்கள் தமது காப்பகங்களிலிருந்து வெளியேறி இளமைப்பருவத்தை எய்தும் போது நேர்த்தியான தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.



Paan Paan இல் விற்பனையாகும் புகழ்பெற்ற ஒவ்வொரு கடை பாணிலிருந்து நிர்ணயிக்கப்பட்ட தொகை OrphanCareக்கு அன்பளிப்புச் செய்யப்படும். தமது பாண் விற்பனைகளிலிருந்து ஒரு பகுதி பணத்தை ஒதுக்கீடு செய்வதனூடாக, அநாதரவான இளைஞர்களுக்கு வலுவூட்டும் காப்பகத்தின் முயற்சிகளுக்கான தமது அர்ப்பணிப்பை Paan Paan வெளிப்படுத்தியுள்ளது. Paan Paan இன் பணிப்பாளர் அபூ யூசுப் கருத்துத் தெரிவிக்கையில், "சுவையான பாண் வகைகளை தயாரிப்பது மாத்திரமன்றி சமூகத்துக்கு வளமூட்டுவது என்பது Paan Paan இன் பிரதான கருப்பொருளாக அமைந்துள்ளது. OrphanCare உடன் கைகோர்த்துள்ளதனூடாக, எமது பிரதான பெறுமதிகளுடன் இணைந்த செயற்பாட்டுக்கும், சமூக ஈடுபாட்டுக்கும் பங்களிப்பு வழங்க முடிந்துள்ளதையிட்டு பெருமை கொள்கின்றோம் " என்றார்.

அமானா வங்கியை ஸ்தாபக அனுசரணையாளராகக் கொண்டுள்ள OrphanCare, அநாதரவான சிறுவர்களை அரவணைத்து வழிநடத்தும் சூழலை உருவாக்கி, அவர்களின் வாழ்க்கையில் இரண்டாவது தடவையாகவும் அநாதரவாக்கப்படுவதை தவிர்க்கும் வகையில் செயலாற்றுகின்றது.

OrphanCare இன் தலைமை அதிகாரி, அசாத் சஹீத், Paan Paan'இன் பணிப்பாளர் அபூ யூசுப் மற்றும் OrphanCare இன் பிரதி தலைமை அதிகாரி மர்ஷாத் பாரி ஆகியோர் படத்தில் காணப்படுகின்றனர்.

# நிலைபெறுதகு கட்டிடங்களை ஊக்குவிக்கும் வகையில் பசுமை கட்டிட சபையும் கொமர்ஷல் வங்கியும் உடன்படிக்கை கைச்சாத்திட்டது



கொமர்ஷல் வங்கியும் இலங்கை பசுமைக் கட்டிட சபையும் வரலாற்று முக்கியத்துவம் மிக்க மைல்கல் ஒத்துழைப்பு உடன்படிக்கை ஒன்றை செய்து கொண்டுள்ளன. இலங்கையில் சுற்றாடலுக்கு இசைவான கட்டிடங்களை ஊக்குவிக்கும் வகையில் இரு நிறுவனங்களும் இணைந்து செயற்படக் கூடிய கட்டமைப்புக்களை உருவாக்கும் வகையில் இந்த உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டுள்ளது.

கார்பன் சமநிலை மற்றும் சுற்றாடல் நிலைத்தன்மை பொருளாதார அபிவிருத்திகளுக்கு உதவும் வகையில் அவற்றோடு தொடர்புடைய நிலைபெறுதகு நிதி உற்பத்திகளை அறிமுகம் செய்யும் செயற்பாடுகளில் கொமர்ஷல் வங்கியும் பசுமை கட்டிட சபையும் அர்ப்பணிப்புடன் இணைந்து பணியாற்ற இந்த புரிந்துணர்வு உடன்படிக்கை வழியமைக்கும்.

இந்த நிதி உற்பத்திகளானது வள ஆற்றல் மற்றும் ஆரோக்கியமான சுற்றுச் சூழல் என்பனவற்றுக்கு ஆதரவான திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கும். மேலும் பொருளாதார வட்டத்தை ஊக்குவித்து நிலைபெறுதகு நிதிக் கொள்கைகளை சுவீகரித்துக் கொள்ளவும் வழியமைக்கும். இதன் மூலம் சூழல் செழிப்படையும். பொருளாதாரம் சுபிட்சம் பெறும். மேலும் இவற்றின் மூலம் இலங்கையின் எதிர்கால நலன்களை உறுதி செய்யும் வகையில் சமூகமும் வளர்ச்சி அடையும் என்று வங்கி தெரிவித்துள்ளது.


## இலங்கை வங்கி

**சேருநுவர பணியாளர் விடுதிக்குப் பொருத்தமான கட்டிடமொன்று தேவைப்படுகின்றது.**

**உத்தேசக் கட்டிடம் பின்வரும் வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.**

- போதுமான வாகன நிறுத்துமிட வசதி இருத்தல் வேண்டும்.
- ஆகக் குறைந்தது 750 சதுர அடி தரைப் பரப்பளவைக் கொண்டதாகவிருத்தல் வேண்டும்.
- முறையான கழிவறைகள், மின்சாரம், தொடர்ச்சியான நீர் வழங்கல் போன்ற அடிப்படை வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும் மற்றும் 1,000 லீற்றர் நீர் சேமிப்பு தாங்கி வசதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- நான்கு நபர்கள் தங்கக் கூடிய குறைந்தபட்சம் இரண்டு அறைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- முறையான காற்றோட்டம் கொண்ட கட்டிடமாகவிருத்தல் வேண்டும்.
- தீ காப்புறுதி பெறப்பட்டிருத்தல் வேண்டும்.

இது தொடர்பில் ஆர்வம் காட்டும் தரப்பினர், கட்டிட வரைபடப் பிரதி மற்றும் ஏனைய அனைத்து விபரங்களை பின்வரும் முகவரிக்கு 14 நாட்களுக்குள் கிடைக்கச் செய்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **''சேருநுவர பணியாளர் விடுதிக்கான பொருத்தமான கட்டிடம்''** எனத் தயவு செய்து குறிப்பிடவும்.

**உதவிப் பொது முகாமையாளர்,**
**(கிழக்கு மாகாணம்),**
**இலங்கை வங்கி,**
**கிழக்கு மாகாண அலுவலகம்,**
**இல. 455, பிரதான வீதி,**
**திருகோணமலை.**

1975 BOC CALL CENTRE www.boc.lk A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்

தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்



## இலங்கை வங்கி

**சாய்ந்தமருது விரிவாக்கல் அலுவலகத்திற்குப் பொருத்தமான கட்டிடமொன்றை குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ள தேவையாகவுள்ளது.**

**உத்தேசக் கட்டிடம் பின்வரும் வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.**

- கட்டிடம் சட்டபூர்வமாக நிர்மாணிக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் 10 வருடத்திற்கு மேல் பழைமை வாய்ந்ததாக இருத்தல் கூடாது.
- கூட்டத்தின் முகப்பானது குறைந்தப்பட்ச அகலம் 30 அடிகள் கொண்டதாக பிரதான பாதையை நோக்கி நகரத்தின் மத்தியில் அமைந்திருத்தல் வேண்டும்.
- நான்கு வாகனங்களை நிறுத்தி வைப்பதற்குப் போதுமான வாகனத் தரிப்பிட வசதி
- குறைந்தபட்சம் 600 - 1500 சதுர அடி தரைப் பரப்பைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- மூன்று நிலை மின்சாரம் 30Amp, நீர் வசதிகள், இலங்கை டெலிகொம் நிறுவனத்தின் தொலைபேசி இணைப்பு, ஆண், பெண் இரு பாலாரும் பயன்படுத்தக்கூடிய மலசலகூட வசதிகள், அவசர வெளியேற்றக் கதவுகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இருத்தல் வேண்டும்.
- கட்டிடத்திற்கு தரையோடு பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும். (2'x2')
- கட்டிடத்தின் பின்புறம் 100 சதுர அடி (10'x10') அளவிலான மின்பிறப்பாக்கி அறையொன்று காற்றோட்ட வசதிகளுடன் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். (இதற்கு தனியான பாதை இருத்தல் வேண்டும்)
- வலது குறைந்தோருக்காக விசேட நுழைவாயில் இருத்தல் வேண்டும்.
- நீரை சேமித்து வைப்பதற்கு 1000 லீற்றர் கொள்ளளவுடைய நீர்த்தாங்கியொன்று இருத்தல் வேண்டும்.
- கட்டிடத்தின் பின்புறக் கதவு மற்றும் ஜன்னல்களுக்கு முறையாக கிறில் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
- கட்டிடத்திற்காகத் தீக் காப்புறுதி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

இது தொடர்பில் ஆர்வம் காட்டும் தரப்பினர், கட்டிட வரைபடப் பிரதி மற்றும் ஏனைய அனைத்து விபரங்களை பின்வரும் முகவரிக்கு 14 நாட்களுக்குள் கிடைக்கச் செய்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''சாய்ந்தமருது விரிவாக்கல் அலுவலகத்திற்குப் பொருத்தமான கட்டிடம்'' எனத் தயவு செய்து குறிப்பிடவும்.

**உதவிப் பொது முகாமையாளர்,**
**(கிழக்கு மாகாணம்),**
**இலங்கை வங்கி,**
**கிழக்கு மாகாண அலுவலகம்,**
**இல. 455, பிரதான வீதி,**
**திருகோணமலை.**

1975 BOC CALL CENTRE www.boc.lk A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்

தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்



பதில் பொலிஸ் மாஅதிபராக பதவியேற்றுள்ள தேசபந்து தென்னகோனை, சர்வமத தலைவர்கள் அவரது பொலிஸ் தலைமையக உத்தியோகபூர்வ காரியாலயத்தில் நேற்று (05) சந்தித்து, ஆசிர்வதித்து, பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதை படத்தில் காணலாம்.
(படம்: சம்மில ரோஷான் - பொலிஸ் Media unit)

# மாணவர்கள் பல்கலை செல்வதற்கான பாதையை உருவாக்குவது அவசியம்

## சபையில் மனோ கணேசன் எம்.பி

லோரன்ஸ் செல்வநாயகம்

மலையகத்துக்கு பல்கலைக்கழகம் முக்கியம் என்றாலும் அதற்கு முன்பதாக பல்கலைக்கழகத்திற்கு செல்வதற்கான பாதையை அங்குள்ள மாணவர்களுக்கு வகுத்துக் கொடுப்பதே முக்கியமாகும் என மனோ கணேசன் எம்பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

மலையக பகுதி பாடசாலைகளில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் உட்பட பல பாடங்களுக்குமான ஆசிரியர்கள் இல்லாத நிலையே தற்போது காணப்படுகிறது.

அந்த வகையில் தற்போது கல்வி கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் இல்லாத நிலையில் எவ்வாறு, அந்த மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்கு அனுப்ப முடியும் என்பது தொடர்பில் நாம் சிந்திக்க வேண்டும். மலையக மாணவர்கள் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திலும் சென்று கல்வி கற்கின்றார்கள். அவர்கள் அனைவரும் பெரும்பாலும் கலைத் துறையிலேயே காணப்படுகின்றனர். அவ்வாறானால், அவர்கள் மத்தியிலிருந்து எவ்வாறு டாக்டர்களும் பொறியியலாளர்களும் உருவாக முடியும்?

பல்கலைக்கழகம் உருவாக்குவதாக கூறி அதற்கு அடிக்கல் நாட்டி நிகழ்வை ஏற்படுத்தி மலர்மாலைகளைப் பரிமாறி செயற்படும் அரசியலை, அங்கு செய்ய வேண்டாம் என நான் கேட்டுக் கொள்கின்றேன்.

அதற்காக கிடைக்கின்ற நிதியை ஆசிரியர்கள் பற்றாக்குறை மற்றும் ஆசிரியர்களுக்கு பயிற்சிகளை வழங்குவதற்கு உபயோகிக்க முடியும்.

இந்திய அரசாங்கமானது யாழ்ப்பாணத்தில் பெரும் கலாசார மத்திய நிலையமொன்றை பல கோடி ரூபா செலவில் நிர்மாணித்துள்ளது. எனினும் அதனை பராமரிப்பதற்கு முடியாத நிலையில் அதற்கும் இந்தியாவே நிதி வழங்குகிறது.

இரண்டு மூன்று வருடங்களுக்காவது ஆசிரியர்களை உருவாக்குவதற்கான வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்த நிதி பெற்றுக் கொள்ள முடியுமானால் அது சிறந்தது.

### தாய் மொழியில் சட்டக் கல்வி...

சேவை வழங்குகின்றர். இதனைக் கவனத்திற் கொண்டு அவர்களுக்கு விசேட கொடுப்பனவுகளை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் சபையில் கல்வியமைச்சரைக் கேட்டுக் கொண்டார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய மிக முக்கியமான பல்கலைக்கழகமாக செயற்பட்டு வருகிறது. அந்த வகையில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கல்வியியற் பீடத்தை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்

யாழ். பல்கலைக்கழகத்தின் கல்வியியற் துறையை 'பீடமாக' உருவாக்குமாறு கடந்த ஆண்டும் நாம் வலியுறுத்தினோம். இருந்த போதும் இதுவரை அந்த கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வரவு செலவு திட்டத்தில் கல்வியமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

கிளிநொச்சி ஊற்றுக்குளம் பகுதியைச் சேர்ந்த செல்வி டிலானி ரவிச்சந்திரன் 2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற உயர்தர பரீட்சையில் கணிதப்பிரிவில் சித்தியடைந்துள்ளார். கிளிநொச்சி மாவட்டத்தில் 44 ஆவது இடத்தை அவர் பெற்றார். அவரது கல்வித் தகைமைக்கு அமைய ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்துக்கு தொழில்நுட்ப பிரிவுக்கு அவர் தெரிவானார். குடும்பத்தில் நிலவும் வறுமை காரணமாக அவரால் அப்போது பல்கலைக்கழக கல்வியை தொடர முடியவில்லை.

அதனைத் தொடர்ந்து முறையான கல்வித் தகைமை உள்ளதால் அந்த மாணவி தேசிய கல்வியியற் கல்லூரிக்கு விண்ணப்பித்துள்ளார். எனினும், பல்கலைக்கழக கல்வியைத் தொடர அனுமதி கிடைத்துள்ளதால் தேசிய கல்வியற் கல்லூரிக்கான இவரது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டுள்ளது.

இம்மாணவி தொடர்பில் கல்வி அமைச்சுக்கும், பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குவுக்கும் இரண்டு கடிதங்களை அனுப்பி வைத்துள்ளேன். ஆனால் இதுவரை எந்த பதிலும் கிடைக்கவில்லை.பொருளாதார ரீதியில் பின்தங்கியுள்ள பகுதியைச் சேர்ந்த இம்மாணவிக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவி செய்ய வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

2022 மற்றும் 2023 ஆம் கல்வி யாண்டு மாணவர்களுடன் ஒன்றிணைந்து இந்த மாணவி பல்கலைக்கழக கல்வியைத் தொடர வாய்ப்பளிக்குமாறும் கல்விமைச்சரை அவர், கேட்டுக் கொண்டார்.

அதற்கு பதிலளித்த கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் உட்பட அதிகாரிகள் பாராளுமன்றத்துக்கு வருகை தந்துள்ளனர்.

இவ்விடயத்தை அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவதாக உறுதியளித்தார்.

### இந்திய அரசின் நிதியுதவியில் ...

பாடசாலைகளின் அடிப்படைத் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கான வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வரவு செலவு திட்டத்தில் கல்வி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு குழு நிலை விவாதத்தில் உரையாற்றும்போதே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

மலையக பாடசாலைகளுக்கான ஆசிரியர் நியமனங்கள் மற்றும் அங்கு பட்டதாரிகளை நியமிப்பதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் அதிகளவிலான ஆசிரியர்கள் அப்பிரதேசங்களில் இருந்தே உருவாவதற்கான நிலைமை ஏற்படும்.

அத்துடன் 2500 ஆசிரிய உதவியாளர்களை அங்கு நியமிப்பதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. பெரும்பாலும் அடுத்த வருடத்தில் அது இடம்பெறும்.அந்த வகையில் கல்வி பொது தராதர உயர் தரத்தில் சித்தியடைந்தவர்கள் இதில் உள்வாங்கப்படுவார்கள்.

குறிப்பாக பாடசாலைகளின் அபிவிருத்திக்காக அடுத்த வருடத்தில் இந்திய அரசாங்கத்தின் நிதியுதவி எமக்கு கிடைக்கவுள்ளது. குடிநீர் உட்பட அடிப்படை வசதிகளை பெற்றுக் கொடுப்பதற்கு அந்நிதியை செலவிட எதிர்பார்த்துள்ளோம். அந்த விடயத்தில் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு கூடிய கவனம் செலுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் கணினி, மடி கணினி, போட்டோ பிரதி இயந்திரம் உள்ளிட்ட உபகரணங்களை பெற்றுக் கொடுப்பதற்கான வேலைத் திட்டங்களையும் அங்கு முன்னெடுக்கப்படும். இதன் மூலம் சிறந்த எதிர்கால சமூகமொன்றை கட்டியெழுப்புவதற்கான நிலைமை அங்கு உருவாகும்.

அதே வேளை,கண்டி மாவட்டத்தில் சமய பாடங்களை கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் இல்லாத நிலையில், இந்து சமயத்தை முஸ்லிம் ஆசிரியரும் முஸ்லிம் சமயத்தை இந்து ஆசிரியரும் கற்பிக்கும் நிலை காணப்படுவதாக அப்பகுதியை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர் குணதிலக்க ராஜபக்ச சபையில் தெரிவித்தார்.

இவ்வாறான எத்தகைய நிலையும் அங்கு காணப்படவில்லை என்பதை என்னால் உறுதியாக கூற முடியும் அவ்வாறு இருந்தால் அது தொடர்பில் நான் கவனம் செலுத்துவேன் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

### அரசாங்க ஊழியருக்கான 10,000...

செலவு கொடுப்பனவாக பத்தாயிரம் ரூபாவை வழங்குவதாக வரவு செலவு திட்டத்தில் குறிப்பிட்டுள்ளது. இந்நிலையில் இதற்கென மேலதிகமாக 30 பில்லியன் ரூபா தேவைப்படுவதாகவும் அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வரவு செலவு திட்டத்தில் கல்வியமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு குழு நிலை விவாதத்தில், எதிர்க் கட்சியின் பிரதம கொரடா லக்ஷ்மன் கிரியெல்ல எம்பி ஆசிரியர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பாக எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த கல்வியமைச்சர்:

அரசாங்க ஊழியர்களுக்கு பத்தாயிரம் ரூபா வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு அதிகரிப்பை வழங்குவதற்கு 30 பில்லியன் ரூபா நிதி செலவிடப்படவுள்ளது.

அத்துடன் இலவச பாடநூல் வழங்குவதற்காக 15 பில்லியன் ரூபா, பகல் உணவுக்காக 16 பில்லியன் ரூபா,

மாணவர்களுக்கு பாதணிகள் வழங்குவதற்காக 2.5 பில்லியன் ரூபா நிதியை ஒதுக்க வேண்டியுள்ளது.

இவற்றை எந்த வகையிலும் வழங்காமல் நிறுத்த முடியாது. கண்டிப்பாக மாணவர்களுக்கு இவற்றை வழங்கியே ஆக வேண்டும்.

ஆசிரியர் தொழிற்சங்கங்கள் அவர்களது தொழிற்சங்க உறுப்பினர்களுக்காக போராட வேண்டும் என்பதை நாம் ஏற்றுக் கொள்கின்றோம். எனினும் அவர்கள் இது விடயத்தில் தெளிவுடன் செயற்படுவார்களென நான் நினைக்கிறேன்.

அதற்கிணங்க இந்த வருடத்தில் சம்பள அதிகரிப்பு வழங்க முடியாது. அடுத்த வருடம் முதல் நாம் கட்டம் கட்டமாக சம்பள அதிகரிப்பை பெற்றுக் கொடுப்பது தொடர்பில் கவனம் செலுத்துவோம். ஆசிரியர்கள் நிலைமையை தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

### மதுவரி திணைக்களத்தின்...

ஸ்டிக்கர்களை சோதனையிட்டதால், இந்த வருமான அதிகரித்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

திணைக்களத்தின் மாதாந்த வருமானம் ஒரு பில்லியன் ரூபாவால் அதிகரித்துள்ளதாக தேசிய பொருளாதார மற்றும் பௌதீகத் திட்டங்கள் தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழுவில், மேற்படி திணைக்களத்தின் அதிகாரி தெரிவித்தார்.

தேசிய பொருளாதார மற்றும் பௌதீகத் திட்டங்கள் தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழு,பாராளுமன்றத்தில் கூடியது. இக்கூட்டம், குழுவின் தலைவர் மஹிந்தானந்த அலுத்கமகே எம் பி யின் தலைமையில் பாராளுமன்ற கூடிய போதே இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

தேசிய பொருளாதார மற்றும் பௌதீகத் திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு, ஜனாதிபதியிடம் கையளித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக இலங்கை மதுவரித் திணைக்களம், உள்நாட்டு இறைவரித் திணைக்களம் மற்றும் சுங்கம் ஆகிய நிறுவனங்களில் அதிகாரிகள் இக்குழுவின் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

இதன்போது பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டன. மதுவரித் திணைக்கள சட்டத்தில் திருத்தம் மேற்கொள்வது தொடர்பிலும் மேற்படி குழு திணைக்களத்தின் அதிகாரிகளிடம் வினவியது.

மதுவரித் திணைக்களத்தின் அதிகரித்த வருமானத்தைத் தொடர்ந்தும் பேண வேண்டியதன் அவசியம் தொடர்பிலும், தொடர்ச்சியான சோதனைகளை அதிகரிப்பதன் மூலம் மது பானப் போத்தல்களில் போலி ஸ்டிக்கர்கள் ஒட்டப்படும் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த முடியும் என்றும் இக்குழு இதன் போது அதிகாரிகளுக்கு சுட்டிக் காட்டியது.

### தொழில்நுட்ப கல்வியை முதலாம்...

புதிய மாற்றங்களை உள்வாங்கி புதிய யுகத்திற்குள் நுழைய வேண்டிய அவசியம் காணப்படுகிறது. 1950 களிலிருந்து சிங்களம் மட்டும் என்ற பொறிமுறைக்குள் நாம் தொடர்வதால், முன்னேற முடியாதுள்ளது.

குறுகிய சுவர்களைக் கட்டிக் கொண்டு, எல்லைகளை வகுத்து, சுருங்கிய மனப்பாங்குடன் செயற்பட்டால் உண்மையான சுபீட்சத்தையும் எட்ட முடியாது.

சிங்கள மற்றும் தமிழ் மொழிக்கு முன்னுரிமை வழங்கப்படுவது போன்றே, ஆங்கில மொழிக் கல்விக்கும் முன்னுரிமை வழங்க வேண்டிய காலம் உருவாகியுள்ளது.

இந்தத் திட்டத்திற்கிணங்க நாட்டிலுள்ள 10,126 பாடசாலைகளிலும் ஆங்கில மொழிக் கல்வியை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோன்று தற்போது பாடசாலைகளில் 6ஆம் தரத்தில் இருந்து 13ஆம் தரம் வரை கற்பிக்கப்படும் தொழிநுட்பக் கல்வியை முதலாம் தரத்திலிருந்து ஆரம்பிக்க வேண்டும்.

நாட்டிலுள்ள சகல பாடசாலைகளையும் ஸ்மாட் பாடசாலைகளாக மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

### இந்திய வம்சாவளி... 03 ஆம் பக்கத் தொடர்ச்சி

கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த 2007 ஆம் ஆண்டு கல்வியமைச்சராக பதவி வகித்த போது மலையகத்துக்கு 3000 ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டன.எதிர்காலத்திலும் 2900 ஆசிரிய நியமனங்களை மலையகத்துக்கு வழங்குவதாக அவர் தெரிவித்துள்ளமை பாராட்டப்பட வேண்டியது. 1972 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் ஆட்சிக்காலத்தில் பெருந்தோட்டங்கள் அரசுடமையாக்கப்பட்டன.அதனைத் தொடர்ந்து பெருந்தோட்ட பாடசாலைகளில் பெரும்பாலான பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றது.

1977 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சௌமியமூர்த்தி தொண்டமான் அமைச்சராக பதவியேற்றதைத் தொடர்ந்து பெருந்தோட்ட பகுதி பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்பட்டன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கல்வி யமைச்சராக பதவி வகித்த போதும் பெருந்தோட்ட பாடசாலைகளின் அபிவிருத்தி தொடர்பில் விசேட கவனம் செலுத்தப் பட்டது.கல்வியியற் கல்லூரிகளை உருவாக்கி,ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்கும் திட்டத்தை அவர் அறிமுகப்படுத்தினார். அந்த வகையில் நாட்டின் கல்வித்துறையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பங்களிப்பு இன்றியமையாதது. மலையக பகுதியில் 14500 ஆசிரியர்கள் சேவையில் உள்ளனர்.உதவி ஆசிரியர்களின் பிரச்சினைகளுக்கு நிலையான தீர்வினை பெற்றுக்கொடுக்க வேண்டியது அவசியம். வெளியாகியுள்ள 2022 ஆம் ஆண்டுக்கான கல்வி பொது தராதர சாதாரண தர பரீட்சை பெறுபேறுகளின்படி யாழ். வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்.இந்துக்கல்லூரி மற்றும் மட்டக்களப்பு வின்சன்ட் கல்லூரி ஆகியன முன்னிலையில் உள்ளன.

அதே போன்று மலையகத்தில் ஹட்டன் ஹைலன்ட்ஸ் கல்லூரி முன்னிலையில் உள்ளது. மலையகத்தில் பெரும்பாலான பாடசாலைகளில் மாணவர்கள் ஒன்பது ஏ சித்தி பெற்றுள்ளார்கள். உயர் கல்வி க்கான தகுதி உயர்வடைந்துள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

### டுபாயிலிருந்து நாடு திரும்பினார்...

ஐக்கிய நாடுகள் சபையின் காலநிலை மாற்றம் தொடர்பிலான மாநாட்டில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க டுபாய் சென்றிருந்தார். இம்மாநாட்டில் உரையாற்றிய ஜனாதிபதி, காலநிலை நீதி ஒன்றியத்திற்கான முன்மொழிவையும் சமர்ப்பித்தார். இந்நிலையில்,மாநாட்டை முடித்து விட்டு ஜனாதிபதி நாடு திரும்பியதாக கட்டுநாயக்க விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

### தங்கத்தின் விலை வீழ்ச்சி...

விலை 4,350 ரூபா குறைவடைந்து 173,000 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது.

**தங்கத்தின் விலை விபரம்,**

தங்க அவுன்ஸ் – ரூ.668,631.00

24 கரட் ஒரு கிராம் – ரூ.23,590.00

24 கரட் எட்டு கிராம் (1 பவுன்) – ரூ.188,700.00

22 கரட் ஒரு கிராம் – ரூ.21,630.00

22 கரட் எட்டு கிராம் (1 பவுன்) – ரூ.173,000.00

21 கரட் ஒரு கிராம் – ரூ.20,650.00

21 கரட் எட்டு கிராம் (1 பவுன்) – ரூ.165,150.00

### பண்டிகைக் காலம் கருதி...

கொண்டு இத்தீர்மானம் எடுக்கப்பட்டதாக அந்நிறுவனத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பண்டிகை காலங்களை கவனத்திற்கொண்டு விலைகளை அதிகரிக்க தீர்மானிக்கவில்லை. முன்பிருந்த விலைகளிலேயே சமையல் எரிவாயுவை விற்பனை செய்வதற்கு தீர்மானித்துள் ளோம்.

இந்த வகையில் 12. 5 கிலோ கிராம் எடையுள்ள லாப் கேஸ் சிலிண்டரின் விலை 3,985 ரூபாவாகவும் 5 கிலோ சிலிண்டரின் விலை 1595 ரூபாவாகவும் விற்கப்படும்.

உலக சந்தையில் தற்போது சமையல் எரிவாயுவின் விலை அதிகரித்துள்ளது. எனினும், இதற்கு ஏற்ப அதன் விலையை அதிகரிக்கப் போவதில்லை. குறிப்பாக பண்டிகை காலங்களில் மக்கள் மீது அதிக சுமையை ஏற்படுத்துவதை தவிர்க்கும் வகையிலேயே இந்த தீர்மானத்தை எடுத்ததாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### உல்லாசப்பிரயாணிகளின்...

அதேவேளை, இவ்வருடத்தின் கடந்த 11 மாதத்தில் சுமார் 13 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்ததாகவும் பெப்ரவரியில் 1,276, 951 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### ஏழு மாவட்டங்களுக்கு மண்சரிவு....

கேகாலை, களுத்துறை மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களுக்கு இதுபற்றி முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கண்டி மாவட்டத்தின் பஸ்பாகே கோரளை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதிகளுக்கு மூன்றாம் நிலை மண்சரிவு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதேவேளை, தென்மேற்கு வங்காள விரிகுடாவில் நிலை கொண்டிருந்த மிக்ஜம் சூறாவளியால், மீனவர்கள் மற்றும் கடல் சார் ஊழியர்கள் கடலுக்கு செல்ல வேண்டாமென அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

### தமிழ், சிங்கள மொழிகளில்...

ஈ மின் கட்டண சேவைக்கு பதிவு செய்யுமாறு மின் பாவனையாளர்களிடம் இலங்கை மின்சார சபை முன்னதாக வேண்டுகோள் விடுத்திருந்தது.

அச்சிடப்பட்ட கட்டணப் பட்டியல்களை முற்றிலுமாக நிறுத்துவதே, இச்சேவையின் முதன்மையான நோக்கமென மின்சார சபை கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### O/L பரீட்சையில் தோற்றியோருக்கு...

இதன்பிரகாரம் முதலாம் ஆண்டில் தொழிற்கல்வியும், இரண்டாம் ஆண்டில், தொழில் பயிற்சி நிறுவனத்தின் ஊடாக NVQ தரச் சான்றிதழ்களும் வழங்கப்படும். NVQ 4 சான்றிதழ் வழங்கப்பட்ட பின்னர் டிப்ளோமா, உயர் டிப்ளோமா மற்றும் பட்டப் பின்படிப்பு வரை கற்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார். எதிர்கால சவால்களை எதிர்கொள்ளும் வகையில் மாணவர் சமூகத்தை தயார்படுத்தும் வகையில், இத்தொழிற்கல்வி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தொழில்வாண்மையாளர்களாக வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு இத்தொழிற் கல்வி சிறந்த வழிகாட்டல்களை வழங்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பான தகவல்களை www.tvec.gov.lk என்ற இணையத்தளத்தின் ஊடாக பெற்றுக்கொள்ள முடியும்.

### டெங்கு ஒழிப்பு ஏற்பாடுகளில்......

இருக்குமாறு தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவின் பணிப்பாளர் வைத்திய நிபுணர் நளின் ஆரியரத்ன தெரிவித்தார்.

நாட்டில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.2020 இல்,31139 பேரும், 2021 இல்,35054 பேரும் மற்றும் 2022 ஆம்,ஆண்டில் 76,467 பேரும் டெங்குத் தொற்றினால் பாதிக்கபட்டனர். இந்நிலையில் இவ்வாண்டின் டிசம்பர் 04 வரையில் 77,487 பேருக்கு டெங்கு தொற்றியுள்ளது.

நாளாந்தம் 250 பேர்,டெங்கின் தாக்கத்துக்கு உள்ளாகின்றனர். இவ்வாண்டிலர் 746 பேர் மரணமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஆசிரியர் வெற்றிடங்களை... .

அச்சிடப்பட்டுள்ளன. இன்னும் இரு வாரங்களில் பாடநூல் அச்சுப்பணிகள் நிறைவு பெறும். 2024 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி முதலாம் தவணை கல்வி நடவடிக்கைகள் ஆரம்பமாகவுள்ளன. இதற்கு முன்னர் பாடநூல்களை பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

### பொருளாதாரத்தில் ... 03 ஆம் பக்கத் தொடர்ச்சி

இத்தகைய திட்டங்களை முன்னெடுப்பதற்கு முன்னதாக தற்போது பல்கலைக்கழகங்களில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு முன்னுரிமை வழங்க வேண்டியது அவசியம்.

தற்போது அரசாங்க பாடசாலைகளில் அதிகளவு குறைபாடுகள் நிலவுகின்றன. பெரும்பாலான பாடசாலைகளில் முக்கியமான பாடங்களுக்கான ஆசிரியர்கள் இல்லை.

குறிப்பாக கிராமிய பாடசாலைகளில் கட்டிடங்கள் இல்லாத நிலையும் காணப்படுகிறது. வருடக் கணக்கில் மிகவும் பழமையான கட்டிடங்களிலேயே சில பாடசாலைகள் இயங்குகின்றன. இவ்வாறான கட்டிடங்கள் புனரமைக்கப்படுவதும் இல்லை.

எமது கல்வி நிறுவனங்களில் காலம் கடந்த பாடத்திட்டங்களுக்கு பதிலாக போட்டித் தன்மையுடைய உலகத்தில் பிரவேசிப்பதற்கான பாடங்கள் அவசியம்.

விஞ்ஞானம், கணிதம் போன்ற துறைகளில் நீண்ட காலம் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றன. இதற்கான தீர்வுகள் இதுவரை காணப்படவில்லை. இத்தகைய குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டு கல்வித்துறை முன்னேற்றப்பட வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# காணி தகராறில் சகோதரி மீது தாக்குதல்; பொலிஸ் கான்ஸ்டபிள் கைது

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

*காணி தகராறில் ஏற்பட்ட வாக்குவாதத்தில் தனது சகோதரியை வீச்சுக் கத்தி ஒன்றினால் தாக்கி காயப்படுத்திய குற்றச்சாட்டில் புத்தளம் பல்லம பகுதியைச் சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*கற்பிட்டி நுரைச்சோலை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பல்லம பொலிஸார் தெரிவித்தனர்.*

*பல்லம, திம்பிரிகொல்ல பிரதேசத்தைச் சேர்ந்த தனது சகோதரியுடன் ஏற்பட்ட காணித் தகராறு காரணமாக குறித்த பொலிஸ் கான்ஸ்டபிள் தனது சகோதரியை வீச்சுக் கத்தி ஒன்றினால் தாக்கி காயப்படுத்தியுள்ளார் என பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் பல்லம பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர்.*

*இந்த சம்பவத்தில் காயமடைந்த பொலிஸ் கான்ஸ்டபிளின் சகோதரி, சிலாபம் மாவட்ட வைத்தியசாலையில் பொலிஸாரினால் அனுமதிக்கப்பட்டுள்ளார்.*

*கைது செய்யப்பட்ட சந்தேக நபரான பொலிஸ் கான்ஸ்டபிளை ஆனமடுவ நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.*

*இந்தச் சம்பவம் பற்றி பல்லம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.*

# சித்தியடைந்த மாணவர்களால் பாடசாலைக்கு பொருள் அன்பளிப்பு



அ/ நாச்சியாதீவு முஸ்லிம் மகா வித்தியாலயத்திலிருந்து தரம் 05 புலமை பரிசில் பரீட்சைக்கு தோற்றி சித்தியடைந்த எம். எச்.ஹாசிப் அஹமட், (152), எஸ்.ஹம்தான் ( 149 ) ஆகிய இரண்டு மாணவர்களும் தமது பெற்றோருடன் இணைந்து பாடசாலைக்கு அன்பளிப்பு பொருள் ஒன்றை வழங்கி வைத்தனர். இங்கு இரண்டு மாணவர்களும் இணைந்து பாடசாலை அதிபர் ஆர். எப்.எஸ். ரசூலிடம் அன்பளிப்பு பொருளை வழங்கி வைப்பதை படத்தில் காணலாம். *(படம்: திறப்பனை தினகரன் நிருபர்)*



இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்கள் சம்மேளனத்தின் தலைவர் ஃபைரூஸ் மரிக்கார் இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதுவர் காலித் ஹமூத் அல் கஹ்தானியை கொழும்பிலுள்ள தூதரகத்தில் நேற்று சந்தித்து கலந்துரையாடிய போது பிடிக்கப்பட்ட படம். இச்சந்திப்பில் சம்மேளனத்தின் பிரதிநிதியும் கலந்து கொண்டிருந்தார்.


## கடற்றொழில் அமைச்சு
### இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்

**கொள்முதல் அறிவித்தல்**

**பாணந்துறை மீன்பிடித் துறைமுகத்தின் தாழ்நிலப்பகுதி மற்றும் நுழைவாயிலில் காணப்படும் மணல் அகழும் இயந்திரங்களை விற்பனை செய்வதற்கான விலைமனுக்கோரல்**
**CFHC/PD/SAND /PAN/2023/70**

பாணந்துறை மீன்பிடித் துறைமுகத்தின் தாழ்நிலப்பகுதி மற்றும் நுழைவாயிலில் காணப்படும் மணல் அகழும் இயந்திரங்களை விற்பனை செய்வதற்கான விலைமனுக்கோரல் 2023.12.20 ஆம் திகதி பி.ப.2.00 வரை இடம்பெறும். மனு ஆவணங்கள் 2023.12.06 ஆம் திகதி முதல் 2023.12.19 ஆம் திகதி வரை மு.ப.9.00 மணிமுதல் பி.ப.3.00 குறித்த பாணந்துறை துறைமுகம் மற்றும் தலைமை அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம். இது தொடர்பான விவரங்களை அதிகாரப்பூர்வ இணையதளத்தில் (www.cfhc.gov.lk) பெற்றுக்கொள்ள முடியும்.

தலைவர்,
இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்,
இல- 15, ரொக் ஹவுஸ் ஒழுங்கை,
கொழும்பு 15.



Repeat Your Ad For Better Offers


ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
திங்கள் 2023.12.04
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk

**மஹஜன சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் 5318 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 23,029,824.00
ஆங்கில எழுத்து J — வெற்றி இலக்கங்கள் 7 5 6 5 5 3

**கொவிசெத** — சீட்டிழுப்பு இலக்கம் 3560 — சீட்டிழுப்பு திகதி 2023.12.04 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 69,807,904.80
ஆங்கில எழுத்து V — வெற்றி இலக்கங்கள் 24 28 51 70 — விசேட எழுத்து V — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 16905

**Mega Power** — சீட்டிழுப்பு இலக்கம் 1666 — 2023.12.04 — 42468 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 416,837,124.00
ஆங்கில எழுத்து V — சுப்பர் இலக்கம் 11 — வெற்றி இலக்கங்கள் 06 11 62 64
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

**Lucky 7 VIP** — திகதி 2023.12.04 — சீட்டிழுப்பு இலக்கம் 0144
ஆங்கில எழுத்து B — L7 எழுத்து B — வெற்றி இலக்கங்கள் 9 6 8 6 6 0
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ.20,976,922.28

**ராசி சுப பலன்** — திகதி 2023.12.04 — சீட்டிழுப்பு இலக்கம் 627 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 4,178,224.08
வெற்றி இலக்கினம் மகரம் — வெற்றி இலக்கங்கள் 48 49 50 51 — தனயோக இலக்கம் 18270 — நாளுக்கான விதி எண் 08

**தன நிதானய** — சீட்டிழுப்பு இலக்கம் 1348 — 2023.12.04 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 123,900,328.00
ஆங்கில எழுத்து P — வெற்றி இலக்கங்கள் 03 08 13 47 — விசேட எழுத்து P — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 28241


## அறிவித்தல்
## விலைமனு அழைப்பு
## நெல் சந்தைப்படுத்தல் சபை
### கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

நெல் சந்தைப்படுத்தல் சபையினால் 2022 மற்றும் 2023ஆம் வருடங்களில் கொள்வனவு செய்யப்பட்டு அம்பாறை, ஹம்பாந்தோட்டை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் பின்வரும் களஞ்சியசாலைகளில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டுள்ள நெல் தொகையை விற்பனை செய்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

சிறிய மற்றும் மத்திம அளவிலான நெல் ஆலை உரிமையாளர்களை வலுப்படுத்துவதற்காகவும் நெல் தொகையை அரியாக்கி பாவனையாளர்களுக்கு நிவாரணம் வழங்குவதை நோக்கமாகக் கொண்டு, இந்த நெல் தொகையைக் கொள்வனவு செய்வதற்காக கமத்தொழிலாளர்களின் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திலிருந்து பெற்றுக்கொண்ட கடனை செலுத்துவதற்காகவும் நெல் தொகையை உடனடியாக வெளியேற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2023-09-30ஆம் திகதி வரை நெல் சந்தைப்படுத்தல் சபையில் பதிவு செய்துகொண்டுள்ள நெல் ஆலை உரிமையாளர்கள் விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாம். இயைபுடைய விண்ணப்பப் படிவங்களை சகல பிராந்திய அலுவலகங்களில் பெற்றுக்கொண்டு நெல் சந்தைப்படுத்தல் சபையின் பின்வரும் முகவரியில் அமைந்துள்ள பிரதான அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைக்கோரல் பெட்டியில் 2023-12-13ஆம் திகதி பி.ப. 1.00 மணிக்கு முன் உள்ளிடுதல் வேண்டும். (செயற்பாட்டிலுள்ள ஆலையொன்று உள்ளதென்பதற்காக நெல் ஆலை அமைந்துள்ள அதிகாரப் பிரதேசத்தின் பிராந்திய முகாமையாளரின் சான்றிதழுடன் கட்டளையை அனுப்புதல் வேண்டும்.)

| அம்பாறை மாவட்டம் தொ.பே. இல. 063-2224870 | ஹம்பாந்தோட்டை மாவட்டம் தொ.பே. இல. 047-2225514 | இரத்தினபுரி தொ.பே. இல. 047-2225514 |
|---|---|---|
| கோமாரிய | கச்சகல்ஆர | குட்டிகல |
| சம்மாந்துறை | சூரியவெவ | |
| வீரகொட | யோதகண்டிய | |
| பரகஹகெலே | பல்லேமலல | |
| மல்வத்த | வீரவில | |
| அம்பாறை | தெஹிகஹலந்த | |
| நெல்லிகெலே | | |
| பொத்துவில் | | |
| ரஜகலதென்ன | | |
| தம்பெட்ட | | |
| கொஹொம்பான | | |
| அக்கரைப்பற்று | | |
| கொனாகொல்ல | | |
| பஹலலந்த | | |
| பொல்வத்த | | |
| எரகம | | |

நெல் தொகையை வழங்குவதற்கு இயைபான நிபந்தனைகள் விண்ணப்பப் படிவத்துடன் வழங்கப்படும். மேலதிக தகவல்களை கணக்காளரிடம் விசாரித்தறிந்து கொள்ளலாம். 011-2326148/ 070-5042218

வழங்கப்படும் நெல்லின் அளவு, விலை மற்றும் களஞ்சியசாலை என்பன நெல் சந்தைப்படுத்தல் சபையினால் தீர்மானிக்கப்படும் என்பதுடன் இறுதித் தீர்மானத்தை சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர்,**
**நெல் சந்தைப்படுத்தல் சபை,**
**6ஆம் மாடி, வீடமைப்பு பொதுச் செயலகக் கட்டிடம்,**
**சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 02.**



## பெறுகை அறிவித்தல்
### கம்பஹா மாவட்டத்தின் சமுர்த்தி வங்கிகள் மற்றும் வங்கி சங்கங்கள்

**எமது பிரிவிற்கு கீழே குறிப்பிட்டுள்ள அம்சங்களை கொள்வனவு செய்வதற்காக முத்திரையீடப்பட்ட விலைமனுக்கள் பெற்றுக் கொள்ளப்படும்.**

| அம்சம் | மீளளிக்கப்படாத விலைமனு படிவக் கட்டணம் - ரூபாவில் |
|---|---|
| Purchase of 33 Desktops, 11 Laptops, 04 Monitors, 17 UPS, 06 Laser Printers, 10 Pass Book Printers and 04 Cash Counting Machines | 2500.00 |

2023.12.06 ஆம் திகதியிலிருந்து 2023.12.27 ஆம் திகதியன்று வரையும் வார நாட்களில் மு.ப. 9.30 மணிக்கும் பி.ப. 2.45 மணிக்குமிடையில் உரித்தான விலைமனு படிவக் கட்டணத்தை கம்பஹா மாவட்ட சமுர்த்தி அலுவலகத்திற்கு செலுத்திய பின்னர் உரித்தான விலைமனு ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம். தேவைப்படின், விலைமனு ஆவணங்கள் இந்த அலுவலகத்தில் இலவசமாக பரீட்சிக்கப்படலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஆவணங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு (மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி) முத்திரையிடப்பட்ட உறைகளில் அடக்கப்பட்டு ஒன்றில் இந்த அலுவலகத்தின் கணக்கிடல் கிளையில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் ‘‘தலைவர், பெறுகைக் குழு, மாவட்ட சமுர்த்தி அலுவலகம், 5 ஆம் மாடி, ‘‘லக்சியனே மந்திரய’’, கம்பஹா’’ என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விலைமனுவை அடக்கியுள்ள உறையின் இடது பக்க மேல் மூலையில் “Quotations for Computer Equipments & Accessories for District Samurdhi Office – Gampaha” என குறிப்பிடப்படல் வேண்டும்.

2023.12.27 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு விலைமனுக்களை ஏற்றுக் கொள்ளல் மூடப்பட்டு அதன் பின்னர் உடனடியாகவே இந்த அலுவலகத்தில் திறக்கப்படும். இறுதி நேரத்திற்கு பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவரது சட்டபூர்வமாக அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாவட்ட சமுர்த்தி அலுவலகம்,**
**5 ஆம் மாடி,**
**“லக்சியனே மந்திரய”,**
**கம்பஹா.**



## மேல் மாகாண மேல் நீதிமன்றத்தில்
### (அதன் குடியியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிப்பதில் கொழும்பில் நடைபெறுகின்றது)

நுவரெலியா, ஹாவா எலிய, உடபுஸ்ஸல்லாவ வீதி, இல. 84 எனும் இடத்தில் அமைந்துள்ள இன்டர்பெஷன் (பிறைவட்) லிமிடட் தொடர்பாக, 2007 ஆம் ஆண்டு 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 270(இ) மற்றும் (ஈ) ஆம் பிரிவின் கீழ் இன்டர்பெஷன் (பிறைவட்) லிமிடட் பெயர் கொண்ட நிறுவனத்தை கௌரவ நீதிமன்றத்தினால் கலைப்பு செய்வதற்கான கட்டளையை பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பம் விடயம் தொடர்பானது.

வழக்கு இலக்கம் : CHC /69/2023/CO
தன்மை : கலைப்பு செய்தல்

காமெக்ஸ் இன்டர்நெஷனல் ஹோல்டிங்ஸ் லிமிடட் லிமிடட்,
ப்ளெட்/ஆர் எம் 1702 17/F சினோ சென்டர்,
582- 592, நேத்தன் ரோட், மொங்கொக் கே எல்,
ஹொங்கொக்.
மனுதாரர்.

மேல் மாகாணத்தின் வர்த்தக மேல் நீதிமன்றத்தினால் மேற்குறிப்பிடப்பட்ட நிறுவனத்தினை கலைப்பு செய்வதற்கான மனுவொன்று, 2023 செப்டம்பர் மாதம் 14 ஆம் திகதி குறித்த நீதிமன்றத்திற்கு மனுதாரர் சார்பாக சட்டத்தரணி கே. உபேந்த்ர குணசேகர என்பவரினால் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும், குறித்த மனு 2023 டிசம்பர் மாதம் 14 ஆம் திகதி நீதிமன்றம் முன்னிலையில் விசாரணைக்கு தீர்மானிக்கப்பட்டுள்ளமையால், குறித்த மனுவின் அடிப்படையில் கட்டளையை பெற்றுக்கொள்வதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு அல்லது அதற்கு எதிராக செயற்படுவதற்கு அல்லது ஆதரவளிப்பதற்கு குறித்த நிறுவனத்தின் எந்தவொரு கடன்தருநர் அல்லது உதவுத்தொகை செலுத்துநர் இருப்பார்களாயின் அந்த குறித்த நபருக்கு தற்போதைய செயற்பாடுகளுக்காக அவற்றை விசாரணை செய்வதற்கு உட்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் தனிப்பட்ட முறையில் அல்லது தனது சட்டத்தரணி மூலம் தோற்ற முடியும் எனவும், மனுவின் பிரதியொன்றை தேவைப்படுத்துகின்ற கம்பனியின் எந்தவொரு கடன்தருநர் அல்லது உதவு தொகை செலுத்துநருக்கு உரிய கட்டணங்களைச் செலுத்தி கீழே ஒப்பமிடுபவரால் அது வழங்கப்படும் எனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஒப்பம் :- திரு.உபேந்த்ர குணசேகர
மனுதாரரின் சட்டத்தரணி
இல. 135-1/3, குணசிங்கபுர அலுவலக கட்டிடம்,
புனித செபஸ்தியன் வீதி,
கொழும்பு 12

குறிப்பு:- அம்மனு சம்பந்தப்பட்ட விசாரணையின் போது எண்ணுகின்ற எவரேனும் ஆளொருவர் அவ்வாறு செய்வதற்கான தனது எண்ணத்தை மேலே பெயர் குறிப்பிடப்பட்ட திரு. கே. உபேந்த்ர குணசேகர, சட்டத்தரணிக்கு எழுத்து மூலம் அறிவித்து கையளிக்க வேண்டும் அல்லது அஞ்சலில் அனுப்ப வேண்டும். அறிவிக்கும் நபரின் பெயர் மற்றும் முகவரியும், கம்பனி ஒன்றாயின் கம்பனியின் பெயர் மற்றும் முகவரி அறிவித்தலில் தெரிவிக்கப்பட வேண்டுமென்பதுடன் நபர் அல்லது கம்பனியால் அல்லது அவரது அல்லது அவர்களது (சட்டத்தரணி ஒருவர் இருப்பாராயின்) சட்டத்தரணியால் கையொப்பமிடப்பட வேண்டுமென்பதுடன், 2023 டிசம்பர் மாதம் 13ஆம் திகதி பிற்பகல் 06.00 மணிக்கு முன்னதாக கையளிக்க வேண்டும் அல்லது அஞ்சலில் அனுப்புவதாயின் அவர்களுக்கு (மேலே குறிப்பிடப்பட்ட சட்டத்தரணிக்கு) மேற்குறித்த திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு போதுமான காலநேரத்துடன் அஞ்சலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

மனுதாரரின் பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணி



## afc தங்கக் கடன் சேவை
## தங்க நகை ஏல விற்பனை

அலையன்ஸ் ∴பைனான்ஸ் நிறுவனத்தின் பின்வரும் கிளைகளில், அடமானம் வைக்கப்பட்டுள்ள 30.09.2023 அன்று முதிர்ச்சியடைந்த இதுவரை மீட்கப்படாத தங்கப் பொருட்கள், பின்வரும் தேதிகளில் காலை 09:30 முதல் கீழ்க்கண்ட இடங்களில் பொது ஏலம் மூலம் விற்கப்படும்.

### தங்கக் கடன் சேவை நிலையங்கள்

| தேதி | கிளை | இடம் |
|---|---|---|
| 19-12-2023 | சங்கானை, சாவகச்சேரி, சுன்னாகம், யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம் நகரக் கிளை, மன்னார், பருத்தித்துறை, திருநெல்வேலி, குருமன்காடு, முழங்காவில்,வவுனியா,அக்குரஸ்ஸ, அளுத்கம, அம்பலாங்கொட,அம்பலாந்தோட்டை, அம்பாறை, அனுராதபுரம்,அதுருகிரிய, அவிசாவளை, பதுளை மட்டக்களப்பு, சிலாபம், தம்புள்ளை தெஹியத்தகண்டிய, தெனியாய, எம்பிலிப்பிட்டிய கலேவெல, கல்கமுவ, காலி, கம்பஹா கம்பளை, கணேமுல்ல, ஹட்டன் ஹிங்குராக்கொட, ஹோமாகம, ஜா-எல கடவத்தை, கதுருவெல, கல்பிட்டிய களுத்துறை, களுவாஞ்சிக்குடி, கேகாலை களனி, கிளிநொச்சி, கிரிபத்கொட கொஹுவல, குளியாப்பிட்டிய குருநாகல், மஹரகம மஹியங்கனை, மாலபே, மாத்தறை மதவாச்சி, மொனராகலை, நீர்கொழும்பு, நிக்கவெரட்டிய, நிட்டம்புவ நுவரெலியா, பாணந்துறை, பராக்கிரமபுர பசறை, பிலியந்தலை, பூகொட புதுக்குடியிருப்பு, புத்தளம், ராகலை இரத்தினபுரி, ரிகில்லகஸ்கட தலவாக்கலை, திருகோணமலை, திருகோணமலை-2 உடப்புவ, வார்டு இடம் வெலிமடை, வெல்லவாய, வென்னப்புவ, கிரிந்திவெல,மாத்தளை,நாவலப்பிட்டி,பலாங்கொடை பொரளை சூப்பர் கிளை,ஹொரணை கடுவெல | 722, கோட்டே வீதி, ராஜகிரிய. |

ஏலத்தில் பங்கேற்கும் அனைவரும் தங்களின் தேசிய அடையாள அட்டையை கொண்டு வர வேண்டும் மற்றும் நிறுவனத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு இருக்க வேண்டும் எலாயன்ஸ் ∴பினான்ஸ் கோ. பி.எல்.சி க்கு எந்தவித அறிவிப்பும் இல்லாமல் ஏலங்களை ரத்து செய்ய, ஒத்திவைக்க அல்லது ஒன்றினைக்க உரிமை உள்ளது.

65 1956 இல் இருந்து
எலாயன்ஸ் பினான்ஸ் கம்பனி பி.எல்.சி
செளபாக்கியத்திற்கோர் நம்பிக்கையான அடித்தளம்

அடகுச் சேவைத் தலைவர்
எலாயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சீ
722, கோட்டை வீதி இராஜகிரிய
தொலை : 0115 573600



## தங்கக் கடன் பகிரங்க விற்பனை/ஏலம்

ரிச்சர்ட் பீரிஸ் ∴பைனான்ஸ் லிமிடெட்டின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தங்கக் கடன் மையங்களில் 30.09.2023 வரையிலான காலப்பகுதியில் அடகு வைக்கப்பட்ட தங்கப் பொருட்கள், இது வரை மீட்டெடுக்கப்படவில்லை, 29.12.2023 அன்று விற்கப்படும்.

### தங்க கடன் நிலையங்கள்

Arij City, சிலாபம், கம்பஹா, ஹட்டன், ஹோமாகம, கல்முனை, கண்டி, களனி, குளியாப்பிட்டிய, குருநாகல், மாத்தறை Metro, நீர்கொழும்பு, நுவரெலியா, வென்னப்புவ, பாணந்துறை

**திகதி, நேரம் மற்றும் விற்பனை நடைபெறும் இடம்**

திகதியும் நேரமும் : **29.12.2023 மு.ப 10.00 மணிக்கு**
இடம் : **ரிச்சர்ட் பீரிஸ் ∴பைனான்ஸ் லிமிடெட் இல.453/1, கண்டி வீதி, தலுகம, களனி.**

பங்கேற்கும் அனைவரும் தேசிய அடையாள அட்டை மற்றும் உத்தரவாத வைப்புத் தொகையை கொண்டு வர வேண்டும். ரிச்சர்ட் பீரிஸ் ∴பைனான்ஸ் லிமிடெட் எந்த அறிவிப்பும் இல்லாமல் ஏலத்தை ரத்து செய்ய அல்லது ஒத்திவைக்கும் உரிமையை கொண்டுள்ளது.

APFL Richard Pieris Finance — Your Gain is Our Goal...
**ரிச்சர்ட் பீரிஸ் பினான்ஸ் லிமிட்டெட்**
தொலைபேசி: 0714 368 997 / 0711 692 272

skills



## பிரசித்த ஏல விற்பனை

01ம், 04ம் செப்டம்பர் 2023, 02ம், 03ம் அக்டோபர் 2023, 30ம், 31ம் அக்டோபர் 2023 இல் மௌபிமா, தினகரன் மற்றும் சிலோன் டுடே ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரம் தொடர்பானது. மல்டி பினான்ஸ் பிஎல்சி இன் தங்கநகை பாதுகாப்புக்களில் வைக்கப்பட்டு பெறப்பட்ட கடன்தொகை உடன்படிக்கையினுள் நிச்சயிக்கப்பட்ட கொடுப்பனவுகள் செலுத்த தவறிய காரணங்களினால் ஏல விற்பனைக்கு தீர்மானிக்கப்பட்டுள்ள தங்க நகைகள் கீழே தரப்பட்டுள்ள திகதிகளின் கீழ் அந்த கிளைகளில் பிரசித்த ஏல விற்பனையில் காலை 10 மணிக்கு விற்பனை செய்யப்படும் என்பதனை கடன்பெற்றோருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றோம்.

| கிளைகள் | திகதி |
|---|---|
| மாத்தறை, மருதானை, கண்டி, குருநாகல், ரத்தினபுரி, கம்பஹா, அனுராதபுரம். | 22 டிசம்பர் 2023 |

மல்டி பினான்ஸ் பிஎல்சி எந்த அறிவிப்பும் இல்லாமல் ஏலத்தை ரத்து செய்வதற்கும் ஒத்திவைப்பதற்கும் உரிமையை கொண்டுள்ளது.

MULTI FINANCE
இல.275/75, பேராசிரியர். ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.

# சூரிய மின்வசதிகளுள்ள வீட்டுத் திட்டம்; விண்ணப்பங்களுக்கான முடிவு திகதி அறிவிப்பு

(யாழ். விசேட நிருபர்)

சூரிய மின்உற்பத்தி வசதிகளுள்ள இலவச வீட்டுத் திட்டங்களுக்கு விண்ணப்பிக்காதவர்களை இம் மாதம் 14 க்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. ஐம்பது இலட்சம் ரூபா செலவில் 25,000 வீடுகள் இத்திட்டத்தில் நிர்மாணிக்கப்படவுள்ளன. இதற்கான விண்ணப்பங்கள் மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களூடாக ஏற்கப்படுகின்றன.

இந்நிலையிலே, தகுதியிருந்தும் இதற்கு விண்ணப்பிக்காதோரை விண்ணப்பிக்குமாறு வேண்டப்பட்டுள்ளது. வட மாகாண ஆளுநரின் நெறிப்படுத்தலுக்கு அமைய மாவட்ட செயலாளர்களின் வழிகாட்டுதல்களுடன், பிரதேச செயலாலர்களால் வீட்டுத்திட்ட பயனாளர்களை தெரிவு செய்யும் நடவடிக்கை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மீள்குடியேற்றத்தின் பின்னர் காணி இல்லாமல் போனவர்களும், சொந்தக்காணி இருந்தும் இதுவரை வீட்டுத்திட்டம் கிடைக்காதோர், இத்திட்டத்தை பெறுவதற்கு வேறு ஏதேனும் வழியில் தகைமையுடையோர் மற்றும் வீட்டுத் திட்டம் வழங்கப்பட்டும் இதுவரையும் அது நிறைவு செய்யப்படாதோர்களும் இத்திட்டத்திற்கு விண்ணப்பிக்க முடியும். காணியில்லாதவர்களுக்கு அரசாங்க காணியில் வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

710 சதுர அடியில் நிர்மாணிக்கப்படவுள்ள இவ்வீடுகளின் கூரைகளில் ஆயிரம் சதுர அடியில் சூரிய மின் படலங்கள் பொருத்தப்படவுள்ளன.

மிகுதியாக எஞ்சும் பகுதிக்கு சீமெந்து தரை இடப்படும்.

# தினகரன், சங்கவி பிலிம்ஸ் அனுசரணையில் யாழ். நகரில் இன்று கலாவிபூஷண விருதுவிழா

## மாற்றுத்திறனாளிகள் 300 பேருக்கு யாழ். செயலகத்தில் இன்று கௌரவம்

சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தையொட்டி நடத்தப்படும் விஷேட நிகழ்வு, இன்று புதன்கிழமை (06) யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தின் பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. யாழ். மாவட்ட மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் 300 மாற்றுத்திறனாளிகள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

யாழ். மாவட்ட மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் தலைவர் எ.பெலிக்ஸ் ஜோய் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரன், சிறப்பு அதிதிகளாக தினகரன் நாளிதழ் மற்றும் தினகரன் வாரமஞ்சரியின் பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவர், வடமாகாண சமூக சேவைத் திணைக்களப் பணிப்பாளர் அகல்யா செகராசா, சங்கவி







பிலிம்ஸ் மற்றும் சங்கவி தியேட்டர் பணிப்பாளர் கலாநிதி துரைராசா சுரேஸ், கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் மாகாணப் பணிப்பாளர் சி.சிவகெங்காதரன், வடமாகாண கைத்தொழில் அபிவிருத்திச் சங்கத் தலைவரும் கைப்பணிப் பணிப்பாளருமான தம்பிராசா சுரேஸ்குமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன்போது, 15 பிரதேச செயலகங்களிலுள்ள மாற்றுத்திறனாளிக் கலைஞர்கள், சுயதொழில் முயற்சியாளர்கள், சமூக சேவையாளர்கள் ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர்.

மாற்றுத்திறனாளிக் கலைஞர்களுக்கான கலாவிபூஷண விருதை சங்கவி பிலிம்ஸ் மற்றும் சங்கவி தியேட்டருடன் இணைந்து தினகரன் நாளிதழ் மற்றும் தினகரன் வாரமஞ்சரி வழங்கவுள்ளது. சுயதொழில் முயற்சியாளர்களுக்கான விருது, சமூக சேவையாளருக்கான விருதை யாழ். மாவட்ட மாற்றுத்திறனாளிகள் அமைப்பு வழங்கவுள்ளது.

# வடக்கின் உதயம்

## பரத நாட்டியம், கர்நாடக சங்கீத போட்டிகளில் தேசிய சாதனை

(சாவகச்சேரி விசேட நிருபர்)



தேசிய மட்ட பரத நாட்டியம் மற்றும் கர்நாடக சங்கீதப் போட்டிகளில் யாழ்,கைதடி நுணாவில் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவர்கள் சாதனை படைத்துள்ளனர்.

அநுராதபுரத்தில் அண்மையில், இடம்பெற்ற தேசிய மட்ட புத்தாக்க நடன போட்டியில் "கற்றல் சுமை" என்ற தலைப்பில் கைதடி நுணாவில் அ.த.க பாடசாலை மாணவிகள் முதலாம் இடத்தைப் பெற்றனர். தனி இசை நிகழ்வில் "பதம்" எனும் தலைப்பில் செல்வன் து. ரஜிசன் மூன்றாம் இடத்தையும் பெற்று பாடசாலைக்கும் சமூகத்திற்கும் பெருமை தேடித்தந்துள்ளார்.

உல்லாசப்பயணிகள்

## உலங்குவானூர்தியில் நெடுந்தீவுக்கு வருகை



(யாழ். விசேட நிருபர்)

சுற்றுலாப்பயணிகள் உலங்கு வானூர்தி மூலம் யாழ். நெடுந்தீவுக்கு வருகை தந்துள்ளனர். நாட்டில் உல்லாசப்பிரயாணிகளின் வருகை அதிகரித்துள்ள நிலையிலேயே இவர்கள் இவ்வாறு வந்தனர்.

இவர்களுக்கான உலங்கு வானூர்தியை நெடுந்தீவிலுள்ள தனியார் சுற்றுலாத்துறை நிறுவனம் ஏற்பாடு செய்திருந்தது. கடந்த திங்கட்கிழமை இவர்கள் நெடுந்தீவுக்கு வந்தனர். நெடுந்தீவு சுற்றுலாத் துறையின் வரலாற்றில் இதுவொரு படிக்கல்லாக அமைந்துள்ளது.

# மலைச்சாரல்



## ஐயப்ப பக்தர்களுக்கு நாளொன்றுக்கு வழங்கப்படும் விசாக்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு

### அமைச்சர் ஜீவன் தொண்டமான் நடவடிக்கை

சபரிமலை யாத்திரை மேற்கொள்ளும் ஐயப்ப பக்தர்களுக்கு நாளொன்றுக்கு வழங்கப்படும் விசாக்களின் எண்ணிக்கையை அதிகரித்து கொடுப்பதற்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் நடவடிக்கை எடுத்துள்ளார்.

அகில இலங்கை மலையக ஐயப்ப ஒன்றியத்தின் நிர்வாக குழுவினருக்கும், அமைச்சர் ஜீவன் தொண்டமானுக்கும் இடையிலான கலந்துரையாடல் அமைச்சில் நேற்று (05.12.2023) நடைபெற்றது.

இதன்போது ஐயப்ப பக்தர்களுக்கு நாளொன்றுக்கு 100 விசாக்கள் மட்டுமே வழங்கப்படுகின்றது, அதன் செல்லுபடிகாலம் ஒரு மாதமாக உள்ளது. எனவே, விசாக்களையும், கால எல்லையையும் அதிகரித்து தருமாறு ஒன்றியத்தினர் கோரிக்கை விடுத்தனர்.



இதனையடுத்து இலங்கைக்கான இந்திய தூதுவர் கோபால் பாக்லேவை தொலைபேசிமூலம் தொடர்புகொண்ட அமைச்சர் ஜீவன் தொண்டமான், இது தொடர்பில் பேச்சு நடத்தினார்.

இதன்பலனாக நாளொன்றுக்கு வழங்கப்படும் விசாக்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும், செல்லுபடியாகும் கால எல்லையை இரண்டு மாதங்களாக அதிகரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தமது கோரிக்கையை ஏற்று உரிய நடவடிக்கை எடுத்த அமைச்சர் ஜீவன்தொண்டமானுக்கு, இலங்கை மலையக ஐயப்ப ஒன்றியத்தினர் நன்றிகளை தெரிவித்துள்ளனர்.

# இலங்கையில் 191 உயிரைக் காவு கொண்ட விமான விபத்து

## 49 வருடங்கள் நிறைவு

(மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்)

1974ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 4ஆம் திகதி இரவு 10.10க்கு மஸ்கெலியா நோட்டன் பிரிட்ஜ் தெப்பட்டன் பகுதியில் விமானமொன்று விபத்துக்குள்ளானது.

இந்தோனேசியாவின் சுராபயாவிலிருந்து 182 ஹஜ் பயணிகளை ஏற்றிக்கொண்டு மக்கா நோக்கிச் சென்ற மார்டின் எயார் டீ.சீ 8 ரக பயணிகள் விமானம் ஒன்றே இவ்வாறு, சப்த கன்னியா என அறியப்படும் ஏழு கன்னியர் மலையின் ஐந்தாவது குன்றின் மீது மோதி சிதறியது.

இதன்போது விமான ஓட்டிகள் உட்பட 191 பேரும் அதே இடத்தில் உடல் சிதறி உயிரிழந்தனர்.

இதனையடுத்து, விபத்தில் பலியான 190 பேர் தெப்பட்டன் தோட்ட கொத்தலென பகுதியிலேயே புதைக்கப்பட்டனர்.

அடையாளம் காணக்கூடியவாறு இருந்த விமானப் பணிப்பெண்ணின் உடலை மட்டும்



அவரின் காதலர் ஹெலிகொப்டர் மூலமாக இந்தோனேசியாவுக்கு கொண்டு சென்ற நெகிழ்ச்சியான சம்பவமும் இதில் அடங்கும்.

அத்தோடு, விபத்துக்குள்ளான விமான பாகங்களில் எஞ்சியிருக்கும் டயர்கள் இரண்டு மட்டும் இதுவரை பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

ஒரு டயர் நோட்டன் பொலிஸ் நிலையத்தில் உள்ளது. நல்ல நிலையிலிருக்கும் டயர் நோட்டன் விமலசுரேந்திர அணைக்கட்டுக்கு செல்லும் வழியில் சம்பவங்களை சுருக்கமாக தாங்கி பார்வைக்காக காட்சியப்படுத்தப்பட்டுள்ளது.

விமானத்தின் கருப்புப்பெட்டி தகவலின்படி தொழில்நுட்ப கோளாறு காரணமாகவே இவ்விமானம் விபத்துக்குள்ளாகியுள்ளது.

இலங்கையைப் பொறுத்தவரை இதுவரை வெளிநாட்டு விமானமொன்றுக்கு ஏற்பட்ட மிக மோசமான விபத்து இதுவாகும்.

# நானுஓயாவில் வீதி தாழிறக்கம்

(தலவாக்கலை குறூப் நிருபர்)

நுவரெலியா ஹற்றன் ஏ7 பிரதான வீதியின் நானுஓயா சந்திக்கு அண்மையில் வீதி தாழிறங்கியுள்ளதால் ஒருவழி போக்குவரத்து இடம்பெற்று வருவதாக நானுஓயா பொலிஸார் தெரிவித்தனர். அண்மையில் இவ்வீதியில் பாரிய வெடிப்புகள் ஏற்பட்டிருந்தமையால் தொடர்ந்து பெய்து வரும் கடும் மழை காரணமாக வீதி தாழிறங்கியுள்ளது. இப்பகுதியில் ஒருவழி போக்குவரத்து இடம்பெறுவதால்



வாகன சாரதிகள் மிக அவதானமாக வாகனங்களைச் செலுத்துமாறு பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.



புதுடில்லியில் அமைந்துள்ள இந்திய கலாசார உறவுக்கான சபை உலகிலுள்ள அதி சிறந்த மற்றும் தூய்மையான 9 உணவகங்களை தெரிவுசெய்து இவ் வருடத்திற்கான "அன்னபூரண" சான்றிதழை வழங்கியுள்ளது. இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட உணவகங்களில், கண்டியில் இயங்கும் பாலாஜி ரெஸ்ட்ரண்டும் ஒன்றாகும். கண்டி அன்னபூரணாவுக்குரிய சான்றிதழை கண்டியிலுள்ள உதவி இந்தியத் தூதுவர் டாக்டர் எஸ். ஆதிரா பாலாஜி உரிமையாளரிடம் கையளிப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படத்தில் காணலாம்.
(படங்கள்: நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்)



# மேபீல்ட் தோட்ட மாணவி யாழ். பல்கலைக்கழக சட்டபீடத்துக்கு தெரிவு

ஹற்றன் மேபீல்ட் தோட்டத்தைச் சேர்ந்த மாணவி ராஜாராம் தயாளினி யாழ். பல்கலைக்கழக சட்ட பீடத்துக்கு தெரிவாகியுள்ளார். ஹற்றன் ஹைலண்ட்ஸ் கல்லூரியின் மாணவியான இவர் ராஜாராம் கோகிலாதேவி தம்பதிகளின் புதல்வியாவார்.

இம்மாணவி கடந்த 2022 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. உயர்தர பரீட்சையில் கலைப்பிரிவில் தோற்றி மூன்று திறமை சித்திகள் பெற்றுள்ளார். நுவரெலியா மாவட்ட மட்டத்தில் ஏழாமிடத்தைப் பெற்று யாழ். பல்கலைக்கழக சட்ட பீடத்திற்கு தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேபோல இவரின் சகோதரி கடந்த 2021 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. உயர்தர பரீட்சையில் கலைப் பிரிவில் மூன்று திறமை சித்திகள் பெற்று மாவட்ட மட்டத்தில் மூன்றாமிடத்தை பெற்று கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீடத்திற்கு தெரிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஆ.ரமேஷ்)

# இராணுவத் தளபதி – இந்திய இராணுவத் தளபதியுடன் சந்திப்பு






இந்திய இராணுவத்தின் தளபதி ஜெனரல் மனோஜ் பாண்டேவின் அழைப்பின் பேரில் நேற்று முன்தினம் (4) இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் விக்கும் லியனகே, அவரது பாரியார் திருமதி ஜானகி லியனகே மற்றும் இலங்கை இராணுவச் செயலாளர் மேஜர் ஜெனரல் எஸ்.டபிள்யூ. எம். பெர்னாண்டோ ஆகியோர் புதுடில்லி இந்திய இராணுவ தலைமையகத்திற்கு விஜயத்தை மேற்கொண்டனர்.

உத்தியோகபூர்வ விஜயத்தின் போது இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பு, பயிற்சி தொகுதிகளை மேம்படுத்துதல், பரஸ்பர புரிந்துணர்வு மற்றும் இரு இராணுவங்கள் மற்றும் ஆயுதப் படைகளுக்கு இடையிலான நட்புறவு தொடர்பான விடயங்கள் மீளாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

கலந்துரையாடலின் முடிவில் இரு தரப்பினரும் பாராட்டு மற்றும் நல்லெண்ணத்தின் அடையாளமாக நினைவுச் சின்னங்களை பரிமாறிக் கொண்டனர்.

# பலரின் பாராட்டைப் பெற்றுவரும் சவுதி அரேபியாவின் மாபெரும் வெற்றி




கடந்த சில ஆண்டுகளாக சவுதி அரேபியாவின் வளர்ச்சியும், வெற்றியும் உச்சத்தை தொட்டுள்ளன. இதற்கு பெரிதும் காரணமாக அமைந்தது மன்னர் சல்மான் இப்னு அப்துல் அஸீஸ் அவர்களின் வழிகாட்டலும், முடிக்குரிய இளவரசர் முஹம்மது இப்னு ஸல்மான் அவர்களின் முயற்சியும் எனலாம்.

குறிப்பாக சவுதி அரேபியாவை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்ல வேண்டும் என்ற முடிக்குரிய இளவரசர் அவர்களின் முயற்சிகளும், சிந்தனைகளும் ஏராளம். அந்த வகையில் 2030 ஆம் ஆண்டில் சர்வதேச (எக்ஸ்போ) கண்காட்சி நிகழ்வினை நடத்துவதற்கான இரகசிய வாக்கெடுப்பில் சவுதி அரேபியா வெற்றி பெற்றுள்ளது. இச்சர்வதேச கண்காட்சியானது ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

கடந்த 2021/04/ 10ஆம் திகதி இச்சர்வதேச. கண்காட்சி நிகழ்வினை நடத்துவதற்காக சவுதி அரேபியா விண்ணப்பித்திருந்தது. சவுதி அரேபியாவுக்கு போட்டியாக ரஷ்யா, தென்கொரியா, இத்தாலி, உக்ரைன் ஆகிய நாடுகளும் விண்ணப்பித்திருந்தன. இதில் இறுதியாக சவுதி அரேபியா (ரியாத்), தென்கொரியா (பூசான்), இத்தாலி (ரோம்) ஆகிய மூன்று நாடுகள் போட்டியிட்ட நிலையில் இரகசிய வாக்கெடுப்பு நடைபெற்றது.

இதில் இத்தாலி 17 வாக்குகளையும், தென்கொரியா 29 வாக்குகளையும் பெற்றிருந்த நிலையில் சவுதி அரேபியா அதிகூடிய வாக்குகளான 119 வாக்குகளைப் பெற்று இரகசிய இலத்திரனியல் வாக்கெடுப்பில் வெற்றி பெற்றது. அதனைத் தொடர்ந்து (2023/11/28 திங்கள்) பிரான்ஸ் நாட்டிலுள்ள கண்காட்சிகள் சர்வதேச அமைப்பின் பொதுச் சபையின் ஊடாக இவ்வெற்றி உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது. இந்த வெற்றியினை சவுதி மக்கள் மிக விமர்சையாக கொண்டாடி வருவதுடன் சவுதி நாட்டு அறிஞர்கள் மற்றும் ஏனைய நாட்டு தலைவர்கள் என அனைவரும் தங்களது பாராட்டுகளையும் சவுதிக்கு தெரிவித்து வருகின்றனர்.

இந் நிகழ்வை நடாத்துவதற்கு சவுதி அரேபியாவின் தலைநகரான ரியாத் நகரம் தெரிவு செய்யப்பட்டுள்ளதோடு ரியாதின் வடபகுதியில் 6 மில்லியன் சதுர கிலோமீட்டர் நிலப்பரப்பும் இந்நிகழ்விற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. 2030 ஒக்டோபர் 01 முதல் 2031 மார்ச் 31 வரை (6 மாதங்கள்) நடைபெறவிருக்கும் பிரமாண்டமான இச்சர்வதேச கண்காட்சிக்கு 40 மில்லியன் பார்வையாளர்களை வரவேற்பதற்கான ஏற்பாடுகளை சவுதி அரேபியா செய்து வருகிறது.

"மாற்றத்திற்கான நேரம்" எனும் தொனிப்பொருளில் 7.2 மில்லியன் டொலர் செலவில் மிக விமர்சையாக நடைபெறவிருக்கும் இக்கண்காட்சி மூலம் அபிவிருத்தி மற்றும் ஏனைய நாடுகளின் நட்புறவுகளை பேணுவதற்கான ஒரு சந்தர்ப்பமாக அமையும் என வெளிவிவகார அமைச்சர் பர்ஹான் இப்னு பைசல் தெரிவித்துள்ளார்கள்.

**MMM.மன்சூர் (மதனி ) MA.அதிபர்,**
**மஃஹதுஸ் ஸுன்னா அந் நபவிய்யா மகளிர் அரபுக் கல்லூரி,**
**காத்தான்குடி.**

# கிழக்கின் குரல்



## புதிய காத்தான்குடி தோணா கால்வாய் துப்புரவு பணிகள் முன்னெடுப்பு

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)



புதிய காத்தான்குடி தோணா கால்வாயை துப்புரவு செய்யும் பணிகள் காத்தான்குடி நகரசபை ஊழியர்களினால் முன்னெடுக்கப் பட்டன.

தொடர்ச்சியாக பெய்து வரும் கடும் மழை காரணமாக வெள்ள அபாயத்திலிருந்து மக்களை பாதுகாக்கும் நோக்கில் காத்தான்குடி நகர சபையினால் தோணா கால்வாயை துப்புரவு செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தோணா கால்வாயை துப்புரவு செய்யும் பணியை காத்தான்குடி நகர சபையின் செயலாளர் திருமதி ரிப்கா ஷபீன் நேரடியாக சென்று பார்வையிட்டார்.

காத்தான்குடி நகர சபையின் சுகாதாரத்துறை ஊழியர்களினால் வடிகான்கள் துப்புரவு செய்யப்படுவதுடன் வெள்ளம் வடிந்தோடும் வகையில் குப்பைகளை அகற்றும் நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டது.

புதிய காத்தான்குடி தோணா கால்வாயில் பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் போத்தல்கள் போன்ற கழிவுகளை பொதுமக்கள் முறையற்ற விதத்தில் கொட்டி வருவதால் புதிய காத்தான்குடி தோணா கால்வாயில் வெள்ளம் வடிந்தோடுவதற்கு தடையாகவிருப்பதாக நகரசபை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். பொதுமக்கள் இவ்வாறான கழிவுகளை இந்த இடத்தில் கொட்டக் கூடாது,பொதுமக்கள் ஒத்துழைப்பு இருந்தால் மாத்திரமே தோணா கால்வாயின் ஊடாக வெள்ளத்தை வடிந்தோட செய்ய முடியுமெனவும் காத்தான்குடி நகரசபை செயலாளர் திருமதி ரிப்கா ஷபீன் இதன்போது கருத்து தெரிவித்தார்.

## ஆதிவாசிகளின் பிரச்சினைகளுக்கு கிழக்கு ஆளுநர் உடனடி நடவடிக்கை

(கிண்ணியா மத்திய, கல்லடி குறூப், திருகோணமலை தினகரன் நிருபர்கள்)



மட்டக்களப்பு வாகரை ஆதிவாசிகள் கிராமத்திற்கு விஜயம் செய்த கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஆதிவாசிகளின் பிரச்சினைகளை கேட்டறிந்தார்.

வாகரையிலுள்ள ஆதிவாசிகள் தங்களுடைய கிராமத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பில் ஆளுநருடன் இதன்போது கலந்துரையாடினர்.

தங்களுடைய கிராமத்திலுள்ள பாடசாலைகளில் கணிதம்,விஞ்ஞான ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுவதாகவும் அதனால் மாணவர்கள் பெரும் சிரமத்திற்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் இதன் போது தெரிவித்தனர்.

அதுமட்டுமின்றி கிராமத்துக்கான வீதிகள் கடும் மோசமான நிலையில் காணப்படுவதாகவும் வைத்தியசாலைக்கு உதவியாளர்களை நியமித்து தருமாறும் ஆளுநரிடம் கோரிக்கை விடுத்தனர். அதன்படி மாகாண கல்வி அமைச்சின் ஊடாக 02 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டதுடன், பாதை புனரமைப்பதற்கான நடவடிக்கையும், வைத்தியசாலைக்கு உதவியாளர் நியமிப்பதற்கும் உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஆளுநரால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டது.

## முச்சக்கர வண்டி சாரதி மீது கத்திக்குத்து

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

மண்முனை ஒல்லிக்குளம் பகுதியில் முச்சக்கரவண்டி சாரதியொருவர் கத்திக்குத்துக்கு இலக்காகியுள்ளார். புதிய காத்தான்குடி பதுரியா பகுதியில் வசிக்கும் முஹம்மட் ஜெமீல் என்ற முச்சக்கரவண்டி சாரதியே இவ்வாறு கத்திக்குத்துக்கு இலக்காகியுள்ளார்.

காத்தான்குடி பிரதான வீதி டெலிகொம் சந்தியில் வைத்து முச்சக்கர வண்டியில் ஏறிய பயணியொருவர், மண்முனை வரை செல்லவேண்டும் என அழைத்துச் சென்றுள்ளார்.

மண்முனை ஒல்லிக்குளம் சென்ற போது முச்சக்கர வண்டியிலிருந்த பயணி, முச்சக்கரவண்டி சாரதியை கத்தியால் குத்தி தாக்கிவிட்டு அவரிடமிருந்த பணத்தையும் பறித்துக் கொண்டு தலைமறைவாகியுள்ளார்.

## சமூக நல்லுறவை கட்டியெழுப்பும் மாவட்ட மட்ட கலந்துரையாடல்



பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்)

சமூக நல்லுறவை கட்டியெழுப்புதல் எனும் தொனிப்பொருளின் கீழ் கப்சோ அமைப்பினால் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்டு வந்த பிரதேச மட்டத்திலான நிகழ்வுகளையடுத்து, நேற்றுமுன்தினம் மாவட்ட மட்டத்திலான கலந்துரையாடல் சம்மாந்துறை கப்சோவின் சமூக ஒருங்கிணைப்பு பிராந்திய மையத்தில் (RHSCI) ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சமூகத்தில் காணப்படும் சவால்களை கண்டறிந்து அதற்கான முன்மொழிவுகளையும் வழங்கும் வகையில் சமூக மட்டத்திலுள்ள துறைசார்ந்தவர்களை ஒன்றிணைத்து இக்கலந்துரையாடல் நடைபெற்றது.

கப்சோ அமைப்பின் திட்டப் பணிப்பாளர் ஏ.ஜே.காமில் இம்டாட் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அமைப்பின் திட்ட ஆலோசகரான கலாநிதி ஏ.எம் அஸ்லம் ஸஜா உள்ளிட்ட மதத் தலைவர்கள், ஊடகவியலாளர்கள், எழுத்தாளர்கள், சிவில் சமூக முக்கியஸ்தர்கள், பொது நல அமைப்புகளின் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர்.

## அரச ஊழியர்களுக்கான 150 மணித்தியால சிங்கள மொழி பாடநெறி




சம்மாந்துறை அல் மர்ஜான் முஸ்லிம் மகா கல்லூரியின் அரச உத்தியோகத்தர்களுக்கான சிங்கள மொழி பாடநெறியின் இறுதி நாள் நிறைவு விழா அண்மையில் நடைபெற்றது. 150 மணித்தியாலங்களைக் கொண்ட இப்பாடநெறியானது தேசியமொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் ஏற்பாட்டில் நடைபெற்றது. மேலும் 76 அரச ஊழியர்கள் இப்பாடநெறியினை நிறைவு செய்துள்ளனர். இந்நிகழ்வில் சிங்கள பாரம்பரிய கலை கலாசார நிகழ்ச்சிகளை தமிழ் பேசும் உத்தியோகத்தர்கள் மேடையேற்று அலங்கரித்ததுடன் சிறுமிகளின் சிங்கள பாடல்களுக்கான நடனங்களும் இடம்பெற்றன. இந் நிகழ்வில் பிரதம அதிதிகளாக

சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் உமர் மௌலானா, உதவிக் கல்விப் பணிப்பாளர் எச். நைரோஸ்கான், கல்முனை பிரதேச செயலகக் கணக்காளர் முஆளு. அமீர் அலி மற்றும் சம்மாந்துறை அல் மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரி அதிபர் ர்ஆ. அன்வர் அலி ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.



பிரதேச இலக்கிய விழா நிகழ்வுகள் கோறளைப்பற்று பிரதேச செயலகத்தில் அண்மையில் நடைபெற்றது. கோறளைப்பற்று பிரதேச செயலகமும் பிரதேச அதிகாரசபை என்பனவும் இணைந்து இந்நிகழ்வினை ஏற்பாடு செய்திருந்தது. பிரதேச செயலாளர் திருமதி ஜெயானந்தி திருச்செல்வம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பல்வேறு இலக்கியம் சார்ந்த நிகழ்வுகள் நடைபெற்றன. குறிப்பாக பிரதேசத்தில் நீண்டகாலமாக கலைத்துறைக்கு சேவையாற்றிய கலைஞர்கள் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். நாடகத்துறை சார்பாக சபாபதி கந்தசாமியும் நடனம் சார்பாக திருமதி கிருஷாந்த் விமலாதேவி ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

(படம்; பாசிக்குடா நிருபர்)

## பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு
### தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவகம்
# வழங்குநர்கள் மற்றும் பராமரிப்பாளர்களை பதிவு செய்தல் – 2024

2024 ஆம் ஆண்டிற்காக பின்வரும் வகுதிகளின் வழங்குநர்கள்/பராமரிப்பாளர்களாக பதிவு செய்ய விரும்புபவர்களிடமிருந்து தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவகமானது விண்ணப்பங்களை அழைப்பதற்கு விரும்புகின்றது.

| | பிரதான வகுதி | உபவகுதிகள் |
|---|---|---|
| 01 | காகிதாதி | காகிதாதி தொடர்பான அம்சங்கள் மற்றும் உபகரணங்கள் போன்றவை |
| 02 | அச்சடித்தல் மற்றும் விளம்பரப்படுத்தல்கள் | Advertising and branding/graphic designing /printing and related services |
| 03 | மின்னியல் மற்றும் இலத்திரனியல் | மின்னியல் மற்றும் இலத்திரனியல் சாதனங்கள்/ வளிச்சீராக்கல் இயந்திரங்கள் மற்றும் தொடர்புடைய சேவைகள்/ உறையவைப்பான்கள்/ குளிரூட்டிகள் |
| 04 | சமையலறை உபகரணங்கள் | சமையலறை உபகரணங்கள்/ சமையல் அம்சங்கள்/ கரண்டிகள் போன்றவை மற்றும் கண்ணாடிப் பொருட்கள் |
| 05. | துணி | திரைச்சீலை பொருட்கள்/ தரைவிரிப்புகள்/ குடைகள் |
| 06. | வீட்டுப்பேணல் | வீட்டுப்பேணல் தொடர்பான அம்சங்கள்/ சுத்திகரிப்பு உபகரணங்கள் |
| 07. | வாகனங்கள் | வாகன உதிரிப்பாகங்கள் (ரயர்கள், பற்றறிகள்)/ சேர்விசிங் செய்தல், பழுதுபார்ததல்கள் மற்றும் வாகனங்களின் பராமரிப்பு / பெயிண்ட் பூசுதல்/ பொறிமுறை பழுதுபார்த்தல் மற்றும் பாகங்களை சீரான முறையில் இணைத்தல் |
| 08. | தகவல் தொழில்நுட்பம், தொடர்பாடல் உபகரணம் மற்றும் தொடர்புடைய சேவைகள் | Computer hardware/computer software application/ computer consumables maintenance and service/Audio visual equipment/ computers and printers. |
| 09 | தளபாடம் | அலுவலக தளபாடம்/ வகுப்பறை தளபாடம் / அலுவலக உள்ளக அலங்கரித்தல் / கட்டில்கள் / சோபா தொகுதிகள் போன்றவை |
| 10 | உணவு மற்றும் குடிமங்கள் | மரக்கறிகள் மற்றும் பழங்கள் / மளிகைப் பொருட்கள் / மீன் மற்றும் இறைச்சி தொடர்பான உற்பத்திகள் / உணவு வழங்கல் சேவைகள் |
| 11. | மருந்தாக்கங்கள் உற்பத்திகள் | மருந்தாக்கங்கள்/ சுத்திகரித்தல் மற்றும் ஏனையவை |
| 12 | நிர்மாணம் மற்றும் பொறிமுறை | வன்பொருள் அம்சங்கள் / அலுமினியம் பிரித்தடுப்புக்கள்/ பெயிண்ட் பூசுதல் மற்றும் உள்ளக வேலை / குளியலறை இணைப்புகள் / சுத்திகரிப்பு சேவை மற்றும் ஏனைய தொடர்புடைய கட்டிடப் பொருட்கள் |
| 13. | Support Service | பாதுகாப்பு சேவை / தீ அணைத்தல் மற்றும் பத்திரத்தன்மை / நிகழ்வு முகாமைத்துவம் / வாகனங்களை வாடகைக்கமர்த்துதல் /Photography/Videography |

எம்முடன் நீங்கள் பதிவு செய்ய விரும்பின் உங்கள் கம்பனியில் தலைப்புக் கடிதத்தில் கோரிக்கை கடிதமொன்றை தயவு செய்து பணிப்பாளர்/பிரதான நிறைவேற்று அலுவலர் என்ற நபருக்கு முகவரியிடப்பட்டு விண்ணப்பத்தை பெறுவதற்காக வியாபார பதிவின் பிரதியொன்றையும் சமர்ப்பித்தல் வேண்டும். 2023 டிசம்பர் 06 ஆம் திகதியிலிருந்து 2023 டிசம்பர் 27 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப.3.30 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக 1000 ரூபாவை NIPM இன் கணக்கிடல் பிரிவில் செலுத்திய பின்னர் உரித்தான விண்ணப்பத்தை பெற்றுக் கொள்ளலலாம். மேலதிக விபரங்கட்கு தயவு செய்து 011-2770232, 011-2798780 ஆகிய தொலைபேசி இலக்கங்களை மற்றும் 011-2798775 என்ற தொலைநகல் இலக்கத்துடனும் தொடர்பு கொள்ளவும்.

**பணிப்பாளர்/ பிநிஅ**
**தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவகம்,**
**எம்.டி.எச். ஜயவர்தன மாவத்தை,**
**அத்துருகிரிய.**

## சிறு விளம்பரம்

### மோட்டார் வாகனங்கள்

**118**
**ஜீப்புகள், பிக்கப்புகள் விற்பனைக்கு**

HD-5444 NISSAN X-TRAIL, 2003, JEEP கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0714542 958. 080385

**122**
**மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு**

QD-7166 BAJAJ, 2006, THREEWHEEL கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே. 0711210 810. 080383

## கேள்வி அறிவித்தல்
## கேகாலை பிரதேச சபை

கேகாலை பிரதேச சபைக்குச் சொந்தமான மொரன்தொட்ட மீன் கடையை 2024.01.01 முதல் 2024.12.31 வரை குத்தகைக்கு வழங்கப்படும். வருடாந்த குறைந்தபட்ச கேள்வி ரூ. 111,600.00 (மாதாந்தம் ரூ. 9300.00).

**மேலதிக விபரங்களுக்கு தொடர்பு 035-2222631**

**செயலாளர்,**
**கேகாலை பிரதேச சபை.**

# இலங்கை தேசிய வைத்தியசாலை
## கொழும்பு-10.
### பெறுகை அறிவித்தல்

இலங்கை தேசிய வைத்தியசாலையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலையை நிறைவேற்றுவதற்காக ICTAD இல் பதிவு பெற்றுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. 2023.12.06 ஆம் திகதியன்று மு.ப. 9 மணியிலிருந்து 2023.12.26 ஆம் திகதியன்று பி.ப. 3 மணி வரையும் இலங்கை தேசிய வைத்தியசாலையின் சிறாப்பர் பிரிவில் விலைமனு படிவ மீளளிக்கப்படாத கட்டணமாக 4,000 ரூபாவைச் செலுத்திய பின்னர், பொது நிருவாக அலுவலகத்திலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்கள் கையேற்கப்படலாம். உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் தபாலுறையில் அடக்கப்பட்டு, முத்திரையிடப்பட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிக்கப்பட்டு கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை 2023.12.27 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு முன்னராக வந்தடையும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது பிரதான கணக்காளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் அவைகளை ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்த பின்னர் உடனடியாகவே திறக்கப்படுமென்பதுடன் ஒப்பந்தக்காரர்கள் அல்லது அவர்களின் சட்டபூர்வமான அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் இந்த வேளையில் சமுகமளிக்கலாம்.

| இல. | வேலை | மதிப்பீடு செய்யப் பட்டுள்ள ஆகுசெலவு | தரம் | மீளளிக்கப் படும் விலைமனுப் பிணை | மீளளிக்கப் படாத கேள்விப் படிவக் கட்டணம் | குறிப்புக்கள் |
|---|---|---|---|---|---|---|
| 01. | தாதிமார் பயிற்சிச் பாடசாலை நிருவாக கட்டிடத்தின் புதுப்பித்தல் (AC-1/71/2023) | 7,489,179.00 | விஷேடத்துவம்: கட்டிடம். தரம்: சி-7 அல்லது மேற்பட்டது | 115,000.00 | 2,500.00 | விலைமனு ஆவணங்களை கையேற்கும் வேளையில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள விலைமனுப் பெறுமதியானது 5,000,000 ரூபாவிற்கு மேற்படின், பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடமிருந்து சான்றிதழொன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

**பிரதி பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை தேசிய வைத்தியசாலை**
**கொழும்பு-10.**

## பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு
# இலங்கைத் தேயிலைச் சபை

**இலங்கைத் தேயிலைச் சபையின்**
**தலைமை அலுவலக வளாகம் மற்றும் ஏழு பிராந்திய அலுவலகங்களுக்கு**
**பாதுகாப்பு, துப்புரவு மற்றும் பராமரிப்பு சேவையை வழங்கல் - 2024**
**மனு இலக்கம் : PROC/Security/HORO/24**
**மற்றும்**
**மனு இலக்கம் : PROC/JAN/24**

**கொழும்பு 03, காலி வீதி, இலக்கம் 574** எனும் முகவரியில் அமைந்துள்ள **இலங்கைத் தேயிலைச் சபையினால் 2024 ஆம் வருடத்திற்கு இலங்கைத் தேயிலைச் சபையின் தலைமை அலுவலக வளாகம் மற்றும் ஏழு பிராந்திய அலுவலகங்களுக்கு பாதுகாப்பு, துப்புரவு மற்றும்** பராமரிப்பு சேவையை வழங்குவதற்காக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து **2023.12.20 ஆம் திகதி பி.ப. 02.00 மணிவரை** முத்திரையிடப்படப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| மனு இலக்கம் | மனுதாரருக்கான தகைமைகள் |
|---|---|
| **PROC/SECURITY/HORO/'24** **பாதுகாப்புச் சேவை** | • மனுதாரர் 2023 ஆம் ஆண்டிற்கான பாதுகாப்பு அமைச்சின் சிவில் பாதுகாப்புப் பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். மனுவினை எடுப்பவர் பாதுகாப்பு அமைச்சகத்திடமிருந்து செல்லுபடியாகும் பதிவு மற்றும் வருடாந்திர உரிமம் பெற்றிருக்க வேண்டும். (கடிதத்தின் பிரதிகள் விலைமனுவுடன் இணைக்கப்பட வேண்டும்).<br>• சபையின் சம்பள படிமுறைக்கேற்ப பாதுகாப்பு அதிகாரிகளுக்காக ஆகக்குறைந்த சம்பளத் தேவைகள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.<br>• மனுதாரரிடம் இலங்கையில் அனுமதிக்கப்பட்ட வியாபார பதிவொன்று காணப்படல் வேண்டும் (பிரதி விலைமனுவுடன் இணைக்கப்பட வேண்டும்)<br>• மனுதாரர் குறைந்தபட்சம் கடந்த 3 வருடங்களில் திருப்திகரமான பாதுகாப்பு சேவையினை வழங்கியிருத்தல் வேண்டும் (2022,2021 மற்றும் 2020) (முன்னனுபவத்துடன் திருப்திகரமான சேவையை வழங்கியதற்கான பரிந்துரைப்பு ஆவணம் இணைக்கபட வேண்டும்)<br>• குறைந்த சம்பளம் வழங்கப்படுவது தொடர்பில் ஊழியர் திணைக்களத்தினால் பெற்றுக்கொண்ட சான்றிதழ்/ஆவணம் மற்றும் கடந்த வருடத்தின் "C" புரள்வு மற்றும் "R1" புரள்வு பிரதிகள்.<br>• 2020/2021 மற்றும் 2021/2022 வருடத்திற்கு மதிப்பாய்வு செய்யப்பட்ட கணக்கு விபரங்கள்.<br>• திருப்திகரமான சேவையை வழங்கக்கூடியதாக இருத்தல் வேண்டும். |
| **PROC/JAN/24** **துப்புரவு மற்றும் பராமரிப்பு சேவை** | • சபையின் சம்பள படிமுறைக்கேற்ப ஆகக்குறைந்த சம்பளத் தேவைகள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.<br>• மனுதாரரிடம் இலங்கையில் அனுமதிக்கப்பட்ட வியாபார பதிவொன்று காணப்படல் வேண்டும் (பிரதி விலைமனுவுடன் இணைக்கப்பட வேண்டும்)<br>• மனுதாரர் குறைந்தபட்சம் கடந்த 3 வருடங்களில் திருப்திகரமான துப்பரவு சேவையினை வழங்கியிருத்தல் வேண்டும் (2022,2021 மற்றும் 2020) (முன்னனுபவத்துடன் திருப்திகரமான சேவையை வழங்கியதற்கான பரிந்துரைப்பு ஆவணம் இணைக்கபட வேண்டும்)<br>• குறைந்த சம்பளம் வழங்கப்படுவது தொடர்பில் ஊழியர் திணைக்களத்தினால் பெற்றுக்கொண்ட சான்றிதழ்/ஆவணம் மற்றும் கடந்த வருடத்தின் "C" புரள்வு மற்றும் "R1" புரள்வு பிரதிகள்.<br>• 2020/2021 மற்றும் 2021/2022 வருடத்திற்கு மதிப்பாய்வு செய்யப்பட்ட கணக்கு விபரங்கள்.<br>• திருப்திகரமான சேவையை வழங்கக்கூடியதாக இருத்தல் வேண்டும். |

**2023.12.06 ஆம் திகதி முதல் ஒரு மனு ஆவணங்களை பெற்றுக்கொள்ள மீளளிக்கப்படாத கட்டணமாக ரூ.5,000/- ஐ செலுத்தி தமது உத்தியோகப்பூர்வ கடிதத்தலைப்பலான கோரிக்கை மூலம் கொள்முதல் பிரிவு, இலங்கைத் தேயிலைச் சபை, இல.574, காலி வீதி, கொழும்பு 03** எனும் முகவரியில் மனு ஆவணங்களை பெற்றுக்கொள்ள முடியும். சகலவிதமான கொடுப்பனவுகளும் சபையின் **2023.12.18 ஆம் திகதி** வரையில் எந்தவொரு வேலை நாட்களிலும் **மு.ப 10.00 முதல் பி.ப 3.00 மணிக்கு** இடையில் **இல.574, காலி வீதி, கொழும்பு 03** என்ற முகவரியில் அமைந்துள்ள **இலங்கைத் தேயிலைச் சபையில்** பெற்றுக்கொள்ள முடியும். மேலும் மனு ஆவணங்களின் அதன் முதற் பிரதியை இணைக்க வேண்டும். மனுக்களை இலங்கைத் தேயிலைச் சபையில் பெற்றுக்கொண்ட ஆவணங்கள் மூலமாக மாத்திரமே சமர்ப்பிக்க வேண்டும்.

| மனு இலக்கம் | விபரம் | மனு பிணை | மீள்ளிக்கப்படாத வைப்பீடு |
|---|---|---|---|
| PROC/SECURITY/HORO/24 | தேயிலை சபைக்கான பாதுகாப்பு சேவைகளை வழங்குதல் - 2024 | Rs.300,000/= | Rs.5,000/= |
| PROC/JAN/HORO/24 | தேயிலை சபைக்கான துப்புரவு மற்றும் பராமரிப்பு சேவையை வழங்குதல் - 2024 | Rs.200,000/= | Rs.5,000/= |

மனு இலக்கம் **PROC/SECURITY/HORO/24** மற்றும் மனு இலக்கம் **PROC/JAN/24** க்கான மனு ஆவணங்களை தனித்தனியாக கொள்வனவு செய்ய வேண்டும் மற்றும் 02 மனுக்களுக்கு தனித்தனியாக பூர்த்தி செய்யப்பட்ட மனுக்களை சமர்ப்பிக்க வேண்டும்.

இலங்கை மத்திய வங்கியினால் ஆங்கீகரிக்கப்பட்ட வணிக வங்கியொன்றினால் இலங்கைத் தேயிலைச் சபையின் தலைவரின் பெயருக்குப் பெற்றுக்கொண்ட குறித்த பிணைத்தொகையை முன்வைக்க வேண்டும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதியிலிருந்து **90 நாட்கள்** வரை செல்லுபடியாக இருத்தல் வேண்டும். மனுக்களின் பிரதிகளை கடித உறையலிட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் **"பாதுகாப்புச் சேவைகளுக்கான விலைமனுக்கள்"** மற்றும் **"துப்புரவு மற்றும் பராமரிப்பு சேவைகளுக்கான விலைமனுக்கள்"** எனக்குறிப்பிட்டு **2023.12.20 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு** அல்லது அதற்கு முன்னர் **தலைவர், கொள்முதல் குழு, இல.574, காலி வீதி, கொழும்பு 03** என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும் அல்லது மேற்குறிப்பிட்ட முகவரியில் வைக்கப்பட்டுள்ள மனுப்பெட்டியில் இடுதல் வேண்டும்.

மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் நேரம் முடிவடைந்த பின்னர், இலங்கைத் தேயிலைச் சபை, இல.574, காலி வீதி, கொழும்பு 03, கொள்முதல் பிரிவில் மனுக்கள் திறக்கப்படும். இச்சந்தர்ப்பத்தில் மனுதாரர்கள் அல்லது அவர்களால் நியமிக்கப்பட்ட பிரதநிதிகள் பங்கேற்க அனுமதிக்கப்படுவார்கள்.

இது தொடர்பிலான மேலதிக விபரங்களை **கொள்முதல் பிரிவு, இலங்கைத் தேயிலைச் சபை, இல.574, காலி வீதி, கொழும்பு 03 இல் பெற்றுக்கொள்ள முடியும் (தொலைபேசி 011 2582121, 2586863, 2582122)**

**தலைவர்,**
**கொள்முதல் குழு,**
**இலங்கைத் தேயிலைச் சபை,**
**இல.574, காலி வீதி,**
**கொழும்பு 03.**

SELACINE

# பெறுகை அறிவித்தல்
## அரச அச்சக கூட்டுத்தாபனம்
## விலைமனுக்களுக்கான அழைத்தல்
## (NCB) Imports

கீழேயுள்ள பண்டங்களின் வழங்கலுக்காக தகுதியும் தகைமையுமுள்ள உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் உள்ளூர் முகவர்களிடமிருந்து அரச அச்சக கூட்டுத்தாபன பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

| FILE REFERENCE | QTY (M/Tons) | ITEM | BID BOND (Rs.) |
|---|---|---|---|
| SPC/SUP/F1/001/2023/31 | 380 (±5%) | Procurement of Single side coated Board (White Back) in plackets/100shts 533x787mm/230(±3.5%) gsm | 1,520.000.00 |
| SPC/SUP/F1/001/2023/32 | 300(±5%) | Procurement of Double Side Coated Art Paper (Matt Finished) in reels/317mm/120(±2.5%) gsm | 1,200,000.00 |

1. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் நடத்தப்படும்.
2. ஒப்பந்தத்தை வழங்குவதற்காக விலைமனுதாரர் பின்வரும் தகுதித்தன்மை தகவுத்திறனுடன் இணைந்தொழுகுதல் வேண்டும்.
   அ. முகவராண்மையின் நிலபரத்தை உறுதிசெய்வதற்கான உற்பத்தியாளரின் அதிகாரம்/ அற்றோணித்தத்துவம்
   ஆ. செல்லுபடியாகும் தன்மையிலுள்ள வர்த்தக பதிவு
3. 2023.12.15 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு அரச அச்சக கூட்டுத்தாபனத்தில் விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும்.
4. 2023.12.06 ஆம் திகதியிலிருந்து 2023.12.27 ஆம் திகதியன்று வரையும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு தொகுதிக்கும் 5,000 ரூபாவை செலுத்திய பின்னர், பாதுக்க, பணாலுவ, அரச அச்சக கூட்டுத்தாபன, வழங்கல் முகாமையாளருக்கு எழுத்துமூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
5. முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அடக்கியுள்ள தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வி குறிப்பீடு குறிப்பிடப்படல் வேண்டுமென்பதுடன், 2023.12.28 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் தன்மையில் பாதுக்க, பணாலுவ, அரச அச்சக கூட்டுத்தாபன, வழங்கல் முகாமையாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் தலைவர், அரச அச்சக கூட்டுத்தாபனம், பணாலுவ, பாதுக்க என்ற மேலேயுள்ள முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் நிகழ்விற்கு சமுகமளிக்கலாம்.
6. விலைமனுவானது அதனை மூடும் திகதியலிருந்து 30 நாட்காட்டி நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
7. இலங்கையில் செயற்படும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட கோரும்போது பெற்றுக் கொள்ளும் விலைமனு உத்தரவாத பணவைப்புக்கள் அல்லது நிபந்தனையற்ற தலைவர், அரச அச்சக கூட்டுத்தாபனம் என்ற முகவரிக்கு செலுத்தக்கூடிய வங்கி உத்தரவாதமானது விலைமனுவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மேலதிக விபரங்களை 011-2757500 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக/ தொலைநகலூடாக மேலதிக விபரங்களை பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**அரச அச்சக கூட்டுத்தாபனம்,**
**பணாலுவ, பாதுக்க.**

06.12.2023

SPC

Trusted Marketplace of Classified Advertisers

Sunday Observer adz it's what you want Classified




For 15 Words Rs. 800/-
* Cost of each additional word Rs. 20/-

077 7 278 948 / 011 2 429 342/ 343 / 011 2 429 383
Fax - 011 2 429 375 - 011 2 429 380 / E-mail - classified@lakehouse.lk

Hand over your Classified Advertisements to Our nearest Branch Office

Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910 / Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291

Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335 / Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 22 25 361 FAX : 021 22 25 361

# பெறுகை அறிவித்தல்

## ஜா-எல நகர சபை

ஜா-எல நகர சபை அதிகார பிரதேசத்திற்கு சொந்தமான கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட சொத்துக்களை 2024.01.01 முதல் 2024.12.31 வரையான காலத்திற்கு குத்தகைக்கு விடுவதற்காக என்னால் பகிரங்க விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**அட்டவணை -01**

| இறைச்சி விற்கும் உரிமையை குத்தகைக்கு விடல் | விற்கவேண்டிய இறைச்சி வகை | வருடாந்த கேள்விப் பெறுமதி | கேள்விப் பிணை வைப்புத் தொகை | கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| பொதுச் சந்தை இல. 40 | பன்றியிறைச்சி | 470000.00 | 6,000/- | 300/- |

**அட்டவணை -02**

| பிணை முறி பற்றிய விபரம் | வருடாந்த கேள்விப் பெறுமதி | கேள்விப் பிணை வைப்புத் தொகை | கேள்விப் படிவக் கட்டடம் |
|---|---|---|---|
| பொதுச் சந்தை மலசலகூட அமைப்பின் உரிமையை குத்தகைக்கு விடல் | 500,000.00 | 2500/- | 300/- |
| பொதுச் சந்தை சைக்கிள் நிறுத்துமிட கட்டணத்தை சேகரிக்கும் உரிமையைக் குத்தகைக்கு விடல் | 210,000.00 | 1000/- | 300/- |

கேள்விப் பத்திரங்களை விநியோகித்தல் - 2023.12.06 முதல் 2023.12.27 பி.ப. 2.00 வரை (ஜா-எல நகர சபை அலுவலகத்தில்)
கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளல் - 2023.12.28 மு.ப. 11.00 வரை
கேள்விப் பத்திரம் திறத்தல் - 2023.12.28 மு.ப. 11.00 இற்கு (ஜா-எல நகர சபை அலுவலகத்தில்)

- ➢ கொடுப்பனவிற்காக காசோலைகள் ஏற்கப்பட மாட்டாது
- ➢ கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளும் போது தமது ஆளடையாளத்தை விண்ணப்பதாரியினால் உறுதி செய்தல் வேண்டும்
- ➢ கேள்விப் பத்திரங்கள் திறக்கும் வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அவரால் அதிகாரம் ஒப்படைக்கப்படும் ஒரு பிரதிநிதிக்கு சமுகமளிக்கலாம்.
- ➢ கேள்விப் பத்திரங்கள் குறித்த நேரத்திற்கு முன்பு ‘செயலாளர், நகர சபை, ஜா-எல’ என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
- ➢ கேள்விப் படிவங்கள் உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் எந்த குத்தகைக்கு என்பதை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.
- ➢ மேலதிக விபரங்களை வார வேலை நாட்களில் ஜா-எல நகர சபை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். (தெ. பே. 011-2236822)
- ➢ மேற்படி கேள்வி பற்றிய இறுதித் தீர்மானம் ஜா-எல நகர சபைக்கு உரியது.

2023.12.05
**ஜா-எல நகர சபை அலுவலகத்தில்**

**டி.பி.எச். சமரவிக்ரம**
**செயலாளர்,**
**நகர சபை, ஜா-எல.**

---

NCD SRI LANKA

# பெறுகை அறிவித்தல்

## தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனம் பொல்கொல்ல

**உணவக சேவையை வழங்குதல்**

பொல்கொல்ல தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தில் மேற்படி சேவையை 2024ம் ஆண்டிற்கு நடத்திச்செல்வதற்கு தகைமையுள்ள தனிநபர்கள், நிறுவனங்களில் இருந்து தேசிய போட்டி கேள்வி கோரலின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன. இந் நிறுவனத்திலி நடத்தப்படும் சகல பயிற்சி செயலமர்வுகள், மாநாடுகள், உற்வசங்களுக்கு சமுகமளிக்கும் விருந்தினர்களுக்க உள்ளூர், வெளிநாட்டு உணவுப் பட்டியலின் பிரகாரம் பகல் இரவு உணவு பானங்களை தயாரித்து வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் தேர்ந்தெடுக்கப்படும் வழங்குநர் குறைந்தபட்சம் மாதாந்தம் ரூ. 20 இலட்சமாவது சமைத்த உணவை வழங்கக் கூடிய நிறுவனம் அலலது தனிநபராக இருத்தல் வேண்டும்.

**பொது நிபந்தனைகள்**

விண்ணப்பிக்கும் தனிநபர்கள் அல்லது நிறுவனங்கள் கூட்டுறவு அபிவிருத்தி பதிவாளரின் கீழ் அல்லது வியாபார பெயர் பதிவு செய்யும் சட்டவாக்கத்தின் கீழ் அல்லது கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்த கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டு வியாபாரங்கள் அல்லது தனிநபர் வியாபாரம் அல்லது கம்பனி ஆவதுடன் குறித்த துறையில் குறைந்தபட்சம் 01 வருடத்திற்கு குறையாத சிறந்த அனுபவப் பதிவு செய்த பின்னர் இருத்தல் வேண்டும். குறித்த வியாபார பதிவுச் சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**பெறுகை விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளல்**

குறித்த தகைமைகள் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய ஆவணங்களுடன் விண்ணப்பங்களை 2023.12.05 முதல் 2023.12.19 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை பொல்கொல்லவில் அமைந்துள்ள தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தின் பெறுகைப் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம். அதற்காக (மீளளிக்கப்படாத) ரூ. 2000.00 கேள்விப்பத்திர கட்டணத்தை செலுத்துதல் வேண்டும். குறித்த விண்ணப்ப மாதிரிகளின் மூலம் மட்டும் விண்ணப்பித்தல் வேண்டும். போட்டோப் பிரதிகள் நிராகரிக்கப்படும்.

**பெறுகை விண்ணப்பத்தை சமர்ப்பித்தல் மற்றும் பிணைத் தொகை**

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பெறுகை விண்ணப்பங்களை மீளளிக்கப்படும் கேள்வி வைப்புத் தொகையுடன் சமர்ப்பித்தல் வேண்டும். மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு ‘பணிப்பாளர் நாயகம், தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தின்’ பெயருக்கு மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக் கொண்ட ரூ. 50,000.00 வங்கிப் பிணையின் மூலம் அல்லது நிறுவனத்தின் கணக்குப் பிரிவிற்கு ரூ. 25000.00 காசு வைப்புச் செய்தல் மூலம் மேற்கொள்ளலாம். கேள்விப் பத்திரத்துடன் குறித்த வங்கிப் பிணை முறியின் மூலப்பிரதி அல்லது கணக்குப் பிரிவில் காசு வைப்புச் செய்யப்பட்ட பற்றுச் சீட்டின் போட்டோப் பிரதியை இணைத்தல் வேண்டும். பொறியிடப்பட்ட பெறுகை விண்ணப்பங்களின் இடது பக்க மேல் மூலையில் ‘பெறுகை விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் உணவக சேவை’ என்று குறிப்பிட்டு 2023.12.20 பி.ப. 2.30 இற்கு முன் கிடைக்குமாறு பணிப்பாளர் நாயகம், தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனம், பொல்கொல்ல என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது நிறுவனத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

**பெறுகை விண்ணப்பங்களைத் திறத்தல்**

2023.12.20 பி.ப. 2.30 இற்கு பொல்கொல்ல தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தில் பெறுகை விண்ணப்பங்கள் திறக்கப்படுவதுடன் அவ் வேளையில் விண்ணப்பதாரிக்கு அல்லது பெயர் குறிப்பிடப்படும் பிரதி நிதியொருவருக்கு அதற்காக சமுகமளிக்கலாம். பெறுகை விடயங்கள் சம்பந்தமாக பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

**பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி,**
**தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனம்,**
**பொல்கொல்ல.**

**தொலைபேசி: 0812 498679/80**

---

# நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு

## தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை

## விலைக்கோரல் அறிவித்தல் - 2023-12.06

பின்வரும் வேலைகள் / வழங்கல்களுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபைச் சார்பில் பெறுகைக் குழுத் தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | தேவையான கேள்விப் பிணை | தேவையான தகைமை | VAT உட்பட மதிப்பீட்டுச் செலவு (ரூபா) | தொடர்புகொள்ள வேண்டிய நபர் மற்றும் ஆவணங்கள் வழங்கப்படும் இடம் | இறுதித் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|---|
| | **சிவில் கேள்விகள்** | | | | | | |
| 01 | உக்குவளை நீர் வழங்கல் திட்டம் - வருமானமற்ற நீரைக் குறைப்பதற்கான நீர்க் கசிவு திருத்தவேலைகள் ஒப்பந்த இல **:RSC-C/CN/CIVIL/O&M/UKUWELA/ 2023/32** | 6,000/- +VAT ** | ரூபா 60,000/- | சிவில் / நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C6, C7 அல்லது C8 தரத்தில் CIDA பதிவு அத்துடன் ஆவணத்தின் பிரகாரம் மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 5.6 மில்லியன் | பி.ஒ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை. Tele : 081-2386068, Fax: 081-2388027 கட்டுகஸ்தோட்ட மத்திய வடக்கு அலுவலகத்தில் 2023-12-13ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும். **(T:P-0812492311)** | 20/12/2023 பி.ப. 2.00 மணி |
| | **வழங்கல் கேள்விகள்** | | | | | | |
| 02 | மட்டக்களப்பு பிராந்தியத்திலுள்ள வவுனதீவு நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியில் உள்ள உள்ளீர்ப்புப் பம்பித் தொகுதிகளுக்கான உதிரிப்பாகங்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல் ஒப்பந்த இல **: RSC(E)/DGM/NRW/SPARE PARTS-PUMP/VAVUNATHIVU WTP/BATTI/ 2023/038** | 6,000/- +VAT ** | ரூபா 70,000/- | உள்ளீர்ப்புப் பம்பிகளுக்கான உதிரிப்பாகங்களை வழங்குதல் மற்றும் விநியோகிப்பதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு முகவர்கள் மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவு. | - | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (கிழக்கு), தேநீவசு, இல. 48A/1, கண்டி வீதி, திருகோணமலை. Tele : 026-2222519/ 026-2222028 Fax : 026-2225225 | 20/12/2023 மு.ப. 10.00 மணி |
| | **M & E கேள்விகள்** | | | | | | |
| 03 | ரத்தொலுகம - நீர் மீட்பு பொறித் தொகுதியிலுள்ள Primary Lift நிலையத்திற்கு Submersible Electrically Driven Dry Well type சாக்கடை பம்பித் தொகுதிகள் மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல் மற்றும் நிறுவுதல் ஒப்பந்த இல **:GCWR/PUMP/RH/Raddolugama/2022/16R3** | 12,500/- +VAT ** | ரூபா 177,000/- | சாக்கடை பம்பித் தொகுதிகளை வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு முகவர்கள் மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவு. | - | பிபொமு (GCWRD), தேநீவசு, இல. 26/2, அத்திடிய வீதி, இரத்மலானை. Tele: 011 2623681, Fax:011 2636205 மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தை இலங்கை வங்கியின் எந்தவொரு கிளையிலும் 1994381 எனும் பிரதான நடைமுறைக் கணக்கிலக்கத்திற்கு செலுத்துதல் வேண்டும். பெயரை “Tender Fees-DGM Tender Board” எனக் குறிப்பிடுதல் வேண்டும். | 18/10/2023 மு.ப. 10.00 மணி |
| 04 | தெஹிவளை சாக்கடை பம்பி இல்லத்திற்கு Variable Frequency Drive வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நிறுவுதல் (MLP 01) ஒப்பந்த இல **: GCWR/SUP&INS/DM/VSD PANEL/2023/05R** | 4,000/- +VAT | ரூபா 37,000/- | Variable Frequency Drives (VFD) வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு முகவர்கள் மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவு. | - | பிபொமு (GCWRD), தேநீவசு, இல. 26/2, அத்திடிய வீதி, இரத்மலானை. Tele: 011 2623681, Fax:011 2636205 மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தை இலங்கை வங்கியின் எந்தவொரு கிளையிலும் 1994381 எனும் பிரதான நடைமுறைக் கணக்கிலக்கத்திற்கு செலுத்துதல் வேண்டும். பெயரை “Tender Fees-DGM Tender Board” எனக் குறிப்பிடுதல் வேண்டும். | 18/10/2023 மு.ப. 10.00 மணி |
| | **சேவைக் கேள்விகள்** | | | | | | |
| 05 | கட்டுகஸ்தோட்ட - நீர் பாதுகாப்பு திட்ட அறிவுரை பிரிவிற்கு தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களுக்கு சேவைகளை வழங்குதல் ஒப்பந்த இல **:RSC-C/WSP/SER/CKD/LAB/2023/268** | 2,000/- +VAT | ரூபா 10,400/- | ஆவணத்தின் பிரகாரம் | - | பி.ஒ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை. Tele : 081-2386068, Fax: 081-2388027 கட்டுகஸ்தோட்ட WSP யில் 2023-12-13ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி முன்னேடிக் கூட்டம் இடம்பெறும். **(T:P-0812492298)** | 20/12/2023 பி.ப. 2.00 மணி |
| 06 | உபொமு (வ) மற்றும் பிஓநி (வ) அலுவலகங்களுக்கு தேர்ச்சிபெற்ற சாரதி தொழிலாளர் சேவைகளை வழங்குதல் ஒப்பந்த இல **:RSC/N/DGM/O&M/Skilled Workmen Driver RSC(N) & AGM (N)/2023/104** | 4,000/- +VAT | ரூபா 40,000/- | தேர்ச்சிபெற்ற மற்றும் தேர்ச்சியற்ற தொழிலாளர் சேவைகளை (கேள்விக்கு இயைபான) வழங்குவதில் குறைந்தபட்சம் 02 வருடங்கள் அனுபவம் வாய்ந்த இயைபுடைய பிரதேசங்களிலுள்ள பிரதேச செயலகங்களின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள சமூக அடிப்படையிலான அமைப்புகள் (CBO) அல்லது வியாபாரப் பதிவின் கீழ் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் | - | பிஓநி (வடக்கு) அலுவலகம், தேநீவசு, யாழ்ப்பாணம் வீதி, வவுனியா. Tele:024-2227313/ 024-2225719/ 024-2227340 Fax:024-2225088/ 024-2227341 வவுனியா, யாழ்ப்பாணம் வீதி, தேநீவசு பிரதிப் பொது முகாமையாளர் அலுவலகத்தில் 2023-12-13ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி முன்னேடிக் கூட்டம் இடம்பெறும். | 20/12/2023 பி.ப. 2.00 மணி |

தயவு செய்து PCA 3 படிவத்தைப் பெற்றுக்கொள்ள இணையதளத்தில் நிகழ்நிலை (online) ஊடாக கம்பனி பதிவாளருடன் பதிவு செய்து கொள்ளவும். (“**” எனக் குறியீடு இடப்பட்ட கேள்விகளுக்கு மட்டும்) பதிவு செய்து கொள்வதற்கு gmail

பயன்படுத்த வேண்டுமென மேலும் தயவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது.

முடிவுத் திகதிக்கு முதல் நாள் வரை சாதாரண வேலை நேரங்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் மற்றும் வியாபாரக் கடிதத் தலைப்பிலான வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும்.

சாதாரண வேலை நேரங்களில் ஆவணங்கள் வழங்கப்படும் இடத்திலேயே கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

சமுகம் தந்துள்ள கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் கேள்விகள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் கேள்விகள் திறக்கப்படாமலேயே திருப்பியனுப்பப்படும்.

**தலைவர்,**
**தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை.**

SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service
Best way to fulfil your Future Dreams
Affordable & Attractive Packages for YOU.
077 7 278 948 / 011 2 429 343/ 342 / 011 2 429 383
E-mail - classified@lakehouse.lk

## அமைச்சரவையில் அங்கம் வகிக்காத அரச பெருந்தோட்ட தொழில்முயற்சி மறுசீரமைப்பு அமைச்சு

## இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்

## பலகை அறுவைக்கான மரங்களை விற்பனை செய்தல்

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினால் நிர்வகிக்கப்படும் ஓவல்ல, கொட்டகங்க அரச தோட்டங்களில் முகாமைத்துவ திட்டத்தின் பிரகாரம் அப்புறப்படுத்துவதற்குள்ள 415 மரங்களை விற்பனை செய்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

மேற்படி விலைக்கோரலுக்கான நிபந்தனைகள் மற்றும் விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கான படிவங்களை உள்ளடக்கிய கேள்வி ஆவணங்களை கொழும்பு-10, சிறிதம்ம மாவத்தை, 257ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகத்திலிருந்து 2023-12-07ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் 2023-12-20ஆம் திகதி பி.ப. 1.00 மணி வரையிலும் மற்றும் கல்பிஹில்லயில் அமைந்துள்ள அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் பிரதேச அலுவலகத்தில் 2023-12-07ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் 2023-12-19ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரையில் 2000.00 ரூபா கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

அந்த கேள்வி ஆவணங்களை 2023-12-20ஆம் திகதி பி.ப. 1.30 மணிக்கு முன் கொழும்பு-10, இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். 2023-12-20ஆம் திகதி விலைமனுக்கள் கோரல்கொள்ளும் காலம் நிறைவடைந்த உடனடுத்து அந்த விலைமனுப் படிவங்கள் தலைமை அலுவலகத்தில் திறக்கப்படும். வெற்றிகரமான கேள்விதாரருக்கு கேள்வி கையளிக்கப்பட்ட 07 நாட்களுக்குள் முழுத் தொகையையும் செலுத்துதல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு செய்யாத அனைத்துக் கேள்விகளும் இரத்துச் செய்யப்படும் என்பதுடன் கேள்வி முற்பணத் தொகை கூட்டுத்தாபனத்திற்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

ஏதாவதொரு விலைக்கோரலை அல்லது விலைக்கோரலின் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் முழுமையான அதிகாரத்தை இஅபெகூ பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்,**
**இல. 257, ஸ்ரீ தம்ம மாவத்தை,**
**கொழும்பு-10.**
**விசாரணை: 011-4194879**

2023-12-04.

## சுற்றாடல் அமைச்சு

## விலைமனுக்களுக்கான அழைப்பு

## சுற்றாடல் அமைச்சிற்கு பாதுகாப்புச் சேவைகளை வழங்குதல் – 2024

1. 2024ஆம் வருடத்தில் பத்தரமுல்ல, ரொபர்ட் குணவர்தன மாவத்தை, 416/C/1, ''சொபாதம் பியஸ'' எனும் இடத்தில் அமைந்துள்ள சுற்றாடல் அமைச்சின் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரினால் 2024 ஜனவரி 01ஆம் திகதி முதல் 2024 டிசம்பர் 31ஆம் திகதி வரையில் சுற்றாடல் அமைச்சிற்கு மேற்கூறப்பட்ட சேவையை வழங்குவதற்காக தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய போட்டி ரீதியில் விலைக்கோரலின் கீழ் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
2. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத 2,500.00 ரூபா மற்றும் மீளளிக்கப்படும் 5,000.00 ரூபா தொகையை சுற்றாடல் அமைச்சின் சிறாப்பருக்கு வெவ்வேறான வகையில் செலுத்திப் பெற்றுக்கொண்ட விலைக்கோரல் விண்ணப்பப் படிவங்கள் மூலம் விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாம். 2023-12-06ஆம் திகதி முதல் 2023-12-22ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் சுற்றாடல் அமைச்சின் முதலாம் மாடியில் அமைந்துள்ள கணக்கிடல் பிரிவில் விண்ணப்பப் படித் தொகுதியைப் பெற்றுக்கொள்ளலாம்.
3. விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும்போது நிறுவனத்தின் சேவை அனுபவம் மற்றும் வேலை செய்யும் இயலுமை தொடர்பான தகவல்களை உறுதி செய்தல் வேண்டும். (அந்த சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்)
4. இரு பிரதிகளில் (02) பூர்த்தி செய்யப்பட்ட விலைக்கோரல் ஆவணங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியெனக் குறிப்பிட்டு இரு கடித உறைகளில் இட்டு அக்கடித உறைகளை வேறொரு கடித உறையில் இட்டு முத்திரைக் குறி பொறிக்கப்படல் வேண்டும் என்பதுடன் அக்கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''சுற்றாடல் அமைச்சிற்கு பாதுகாப்பு சேவையை வழங்குதல் - 2024'' எனக் குறிப்பிட்டு 2023-12-27ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அவ்வாறல்லாவிடில் ''சொபாதம் பியஸ'' அலுவலகக் கட்டிடத் தொகுதியின் முதலாம் மாடியில் உள்ள நிர்வாகப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிட்டு விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாம். தாமதமாகக் கிடைக்கப்பெறும் மற்றும் இலத்திரனியல் மூலமாக அனுப்பப்படும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் அவைகள் அறிவிக்கப்படாமலேயே நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவடைந்த உடனடுத்து அவைகள் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் விலைமனுக்களைச் சமர்ப்பித்த கேள்விதாரர்களின் பிரதிநிதிகள் குறித்த நிறுவனத்தின் கடிதம் சகிதம் கலந்துகொள்ளலாம்.
5. மேலதிக விபரங்களை 011-2034111 எனும் தொலைபேசி இலக்கத்தில் நிர்வாக அதிகாரியிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
6. இந்த விலைமனுக்களை முழுமையாக அல்லது பகுதியாக ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை சுற்றாடல் அமைச்சின் திணைக்கள பெறுகைக் குழுவிற்கு உண்டு என்பதுடன் இது தொடர்பில் சுற்றாடல் அமைச்சின் திணைக்கள பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**சுற்றாடல் அமைச்சு,**
**''சொபாதம் பியஸ'',**
**இல. 416/C/1, ரொபர்ட் குணவர்தன மாவத்தை,**
**பத்தரமுல்ல.**

## பெறுகை அறிவித்தல்

## அப்புறப்படுத்தப்பட்ட பொருட்களை விற்பனை செய்தல்

### போதனா வைத்தியசாலை - மஹமோதர, காலி

காலி, மஹமோதர போதனா வைத்தியசாலையில் அப்புறப்படுத்தப்படும் பின்வரும் பொருட்களை விற்பனை செய்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

01. வெற்று சேலைன் போத்தல்கள்
02. சிறிய கண்ணாடி போத்தல்கள்
03. கண்ணாடி போத்தல் (பழுப்பு நிறம்) 2500 ml
04. கண்ணாடி போத்தல் (பழுப்பு நிறம்) 500 ml
05. கண்ணாடி போத்தல் (கறுப்பு நிறம்) 450 ml
06. கண்ணாடி போத்தல் (கறுப்பு நிறம்) 500 ml
07. கண்ணாடி போத்தல் (கறுப்பு நிறம்) 250 ml
08. வெற்று பிளாஸ்டிக் போத்தல்கள்
09. வெற்று பிளாஸ்டிக் போத்தல்கள் (Elasto plaster)
10. பிளாஸ்டிக் 1 லீற்றர் கேன்கள்
11. கார்ட்போர்ட்
12. பத்திரிகைகள்
13. சிரட்டை

02. மேற்கூறப்பட்ட பொருட்களுக்கான விலைகளை 2023-12-28ஆம் திகதி வரை மு.ப. 10.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அல்லது நேரில் கொண்டு வந்து கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். சகல கடிதங்களையும் ''பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, மஹமோதர'' எனும் பெயரில் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''அப்புறப்படுத்தப்பட்ட பொருட்களுக்கான விலைமனு 2024'' எனக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

02. கேள்வியைச் சமர்ப்பிக்கும் கேள்விதாரரினால் ஒவ்வொரு மாத இறுதியிலும் இந்தப் பொருட்களின் பெறுமதிக்கான விலையைச் செலுத்தியதன் பின் பொருட்களை அப்புறப்படுத்துதல் வேண்டும்.

04. பின்வரும் வகையில் உங்களால் தயாரிக்கப்பட்ட விண்ணப்ப படிவங்கள் மூலம் விலைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

1. கேள்விதாரரின் பெயர் :
2. முகவரி :
3. அடையாள அட்டை இலக்கம் :
4. தொலைபேசி இலக்கம் :
5. விலைகளைச் சமர்ப்பிக்கும் பொருட்களுக்கான விலைகள் :
01. மீளளிக்கப்படாத 2,000.00 ரூபா கட்டணத்தைச் செலுத்தி விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலையின் அலுவலகத்திற்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் இதில் ஆர்வம் காட்டும் கேள்விதாரர்கள் கேள்வி ஆவணத் தொகுதியொன்றை 2023-12-07ஆம் திகதி முதல் 2023-12-18ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை (அரச பொது விடுமுறை மற்றும் வார இறுதி நாட்கள் தவிர்ந்த) பெற்றுக்கொள்ளலாம்.

02. கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவடைந்த உடனடுத்து வைத்தியசாலையின் கணக்கீடல் பிரிவில் கேள்விகள் திறக்கப்படும் என்பதுடன் இதில் கேள்விதாரரின் அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

**டீ. ஜீ. ஏ. ரணவீர,**
**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை, சீதுவ.**
**தொலைபேசி இல. 011-2258862-64**
**தொலைநகல் இல. 011-2258865**

# பதவி வெற்றிடங்கள்
## மின்வலு மற்றும் சக்தி அமைச்சு
### இலங்கை அணுசக்தி சபை

இலங்கை பிரஜைகளிடமிருந்து பின்வரும் பதவிகளுக்காக பொருத்தமான தகைமையுடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. பணிப்பாளர் நாயகம் பதவி (பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை – 01)
   [30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள (முசேதி) சுற்றறிக்கையின் பிரகாரம் ஊழியர் வகுதி: சிரேஷ்ட முகாமையாளர் (எச்எம் 2-3)]
2. பணிப்பாளர் (நிதி) பதவி (பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை – 01)
   [30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள (முசேதி) சுற்றறிக்கையின் பிரகாரம் ஊழியர் வகுதி: சிரேஷ்ட முகாமையாளர் (எச்எம் 1-3)]
3. பணிப்பாளர் பதவி (இலங்கை கம்ம நிலையம்) பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை – 01)
   [30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள (முசேதி) சுற்றறிக்கையின் பிரகாரம் ஊழியர் வகுதி: சிரேஷ்ட முகாமையாளர் (எச்எம் 1-3)]
4. பணிப்பாளர் பதவி (நிருவாகம்) (பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை – 01)
   [30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள (முசேதி) சுற்றறிக்கையின் பிரகாரம் ஊழியர் வகுதி: சிரேஷ்ட முகாமையாளர் (எச்எம் 1-3)]
5. பிரதிப் பணிப்பாளர் பதவி (வாழ்க்கை விஞ்ஞானங்கள்) (பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை – 01)
   [30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள (முசேதி) சுற்றறிக்கையின் பிரகாரம் ஊழியர் வகுதி: சிரேஷ்ட கல்விசார்/ ஆராய்ச்சி சேவைகள் (ஏஆர் 2)]
6. பிரதிப் பணிப்பாளர் பதவி (கதிர்வீச்சு செயற்பாடு) (பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை – 01)
   [30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள (முசேதி) சுற்றறிக்கையின் பிரகாரம் ஊழியர் வகுதி: சிரேஷ்ட கல்விசார்/ ஆராய்ச்சி சேவைகள் (ஏஆர் 2)]
7. பிரதிப் பணிப்பாளர் பதவி (அறிவுறாத பரீட்சித்தல்) (பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை – 01)
   [30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள (முசேதி) சுற்றறிக்கையின் பிரகாரம் ஊழியர் வகுதி: சிரேஷ்ட கல்விசார்/ ஆராய்ச்சி சேவைகள் (ஏஆர் 2)]
8. உதவிப் பணிப்பாளர் பதவி (சர்வதேச ஒத்துழைப்பு) தரம் II - (பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை – 01)
   [30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள (முசேதி) சுற்றறிக்கையின் பிரகாரம் ஊழியர் வகுதி: முகாமையாளர் (எம்எம் 1-1)]
9. நிருவாக அலுவலர் பதவி (இலங்கை கம்ம நிலையம்) – தரம் II - (பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை – 01)
   [30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள (முசேதி) சுற்றறிக்கையின் பிரகாரம் ஊழியர் வகுதி: கனிஷ்ட முகாமையாளர் (ஜேஎம் 1-2)]
10. நிதி அலுவலர் பதவி (அறிவுறாத பரீட்சித்தலுக்கான தேசிய நிலையம்) – தரம் II பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை – 01)
    [30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள (முசேதி) சுற்றறிக்கையின் பிரகாரம் ஊழியர் வகுதி: கனிஷ்ட முகாமையாளர் (ஜேஎம் 1-2)]
11. தொழில்நுட்ப உதவியாளர் பதவி – தரம் III (பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை – 02)
    [30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள (முசேதி) சுற்றறிக்கையின் பிரகாரம் ஊழியர் வகுதி: முகாமைத்துவ உதவியாளர்- தொழில்நுட்பவியல் / தொழில்நுட்பம் (எம்ஏ 2-3)]
12. கணக்குபேணுநர் பதவி – தரம் III (பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை – 01)
    [30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள (முசேதி) சுற்றறிக்கையின் பிரகாரம் ஊழியர் வகுதி: முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பவியல்/ தொழில்நுட்பம் (எம்ஏ 2-3)]
13. மின்னியலாளர் /பராமரிப்பு தொழில்நுட்பவியலாளர் பதவி – தரம் III (பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை – 01)
    [30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள (முசேதி) சுற்றறிக்கையின் பிரகாரம் ஊழியர் வகுதி: ஆரம்ப மட்டம் - பயிற்சி பெற்றவர் (பிஎல்3)]

நியமனத்தின் தன்மை: நிரந்தரமானதும் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் உரித்தாவார்.

2023 டிசம்பர் 27 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் தன்மையில் முழுமையான சுயதரவு, உறவிரனல்லாத இரு பரிந்துரையாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் மற்றும் பதவிக்குரித்தான சான்றிதழ்களின் பிரதிகள் ஆகியன பதிவுத் தபாலில் தலைவர், இலங்கை அணுசக்தி சபை, 60/460, பேஸ்லையின் வீதி, ஒருகொடவத்த, வெல்லம்பிட்டிய அல்லது **recruitment2023@aeb.gov.lk** என்ற மின்னஞ்சல் வழியாக அனுப்பப்படல் வேண்டும். (மின்னஞ்சல் வழியாக விண்ணப்பங்களை அனுப்பும் போது விண்ணப்பம் மற்றும் ஏனைய ஆவணங்கள் single file (PDF-Zip file)) என்ற முறையில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பத்திற்கான பதவியானது தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்படல் வேண்டும். அரச துறை/கூட்டுத்தாபனம் /நியதிச்சட்ட சபைகள் ஆகியவற்றில் கடமையாற்றுபவர்கள் அவர்களின் விண்ணப்பங்களை உரித்தான நிறுவன தலைவர்களூடாகவே அனுப்புதல் வேண்டும்.

இந்த விளம்பரம் தொடர்பாக மேலதிக தகவலை **www.aeb.gov.lk** என்ற இணையபக்கத்தில் தயவு செய்து பார்க்கவும்.

**தலைவர்,**
**இலங்கை அணுசக்தி சபை,**
**60/460, பேஸ்லையின் வீதி, ஒருகொடவத்த, வெல்லம்பிட்டிய.**
**தொலைபேசி: 0112533427/8.**

To Buy Your Dream Vehicle within your Budget
If it is a vehicle you want,
YOU NAME IT,
WE HAVE IT
Sunday Observer adz Auto Focus



THE ONLY PLACE TO BUY YOUR DREAM CAR!
Sunday Observer adz it's what you want



- Auto Focus
adz Magazine Issued with Sunday Observer
Hot Line 011 2 429 369
011 2 429 368
E-mail adzsuo@gmail.com

# புளத்சிங்கள பிரதேச சபை

புளத்சிங்கள பிரதேச சபைக்கு சொந்தமான சொத்துகளை குத்தகைக்கு விடுவதற்கு 2023.12.01 ஆம் திகதி தொடக்கம் 2023.12.15 ஆம் திகதி வரை விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**மேலதிக விபரங்களுக்கு**
bulathsinghala.prasaba@gmail.com
bulathsinghalaps@yahoo.com
தொலைபேசி : 034-2283175
பெக்ஸ் : 0342283592
bulathsinghala.ps.gov.lk/web

# வாகன விற்பனை

| மூன்று சக்கர வாகனம் | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| ABJ-5622 | பஜாஜ் | 2015 | மாதரா |
| ABB-9344 | பஜாஜ் | 2015 | ராகம |
| ABD-7493 | பஜாஜ் | 2015 | ராகம |
| AAW-5987 | பஜாஜ் | 2015 | பாணடுரா |
| AAW-1830 | பஜாஜ் | 2014 | ராகம |
| AAO-4587 | பஜாஜ் | 2014 | கண்டி |
| AAS-2711 | பஜாஜ் | 2014 | ரத்தினபுரி |
| AAI-8188 | பஜாஜ் | 2013 | ராகம |
| AAF-9607 | பஜாஜ் | 2013 | ராகம |
| AAD-3810 | பஜாஜ் | 2012 | மாதரா |
| AAD-1502 | பஜாஜ் | 2012 | ராகம |
| AAI-1343 | பஜாஜ் | 2012 | குருநாகல் |
| AAC-0908 | பஜாஜ் | 2012 | பாணடுரா |
| YN-1659 | பஜாஜ் | 2011 | ராகம |
| YR-1545 | பஜாஜ் | 2011 | பாணடுரா |
| YN-9489 | பஜாஜ் | 2011 | நுவரேலியா |
| YR-6236 | பஜாஜ் | 2011 | ராகம |
| YN-4437 | பஜாஜ் | 2011 | ராகம |
| YU-1268 | பஜாஜ் | 2011 | பாணடுரா |
| YW-5812 | பஜாஜ் | 2011 | ராகம |
| YH-1436 | பஜாஜ் | 2010 | ராகம |
| YG-2574 | பஜாஜ் | 2010 | ராகம |
| YC-5998 | பஜாஜ் | 2010 | மாதரா |
| QX-9015 | பஜாஜ் | 2010 | ராகம |
| YB 7066 | பஜாஜ் | 2010 | பாணடுரா |
| QT-4962 | பஜாஜ் | 2009 | ராகம |
| QV-4000 | பஜாஜ் | 2009 | பாணடுரா |
| QP-2647 | பஜாஜ் | 2008 | மாதரா |
| QH-6576 | பஜாஜ் | 2006 | ராகம |
| QA-4589 | பஜாஜ் | 2005 | ராகம |

| மோட்டார் வாகன்ம் | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| KX-4562 | டொயோட்டா | 2013 | கண்டி |
| KK-7241 | மைக்ரோ சாங்யாங் | 2008 | குருநாகல் |
| KC-6778 | மாருதி | 2006 | ரத்தினபுரி |
| HY-5175 | நிசான் | 2001 | கண்டி |
| JG-7449 | நிசான் | 1996 | ராகம |
| 32-0510 | இசுசு | 1984 | ராகம |

| இரட்டை நோக்கம் கொண்ட வாகனம் | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| PA-4077 | நிசான் | 2000 | ராகம |
| 250-8622 | நிசான் | 1992 | கண்டி |
| 52-3265 | டொயோட்டா | 1987 | கண்டி |

| டுயல் பர்போஸ் கேப் | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| PX-6264 | மஹிந்திரா | 2014 | சிலாவ் |
| PR-4164 | டாடா | 2011 | எம்பிலிபிட்டிய |

| ஒற்றை வண்டி | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| DAC-8949 | டாடா | 2015 | கண்டி |
| DAB-0963 | மஹிந்திரா | 2015 | ராகம |

| மோட்டார லாரி | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| JJ-8024 | அசோக் லேலண்ட் | 2004 | ராகம |
| 227-7792 | டொயோட்டா | 1995 | மாதரா |

மேற்கண்ட வாகனங்களை யார்டுகளிலும் சோதனை செய்யலாம் அது ஏல அடிப்படையில் இருக்கும்

| | |
|---|---|
| ராகம 0778 523 285 | திருகோணமலை 0773 382 612 |
| ரத்தினபுரி 0774 857 351 | கண்டி 0773 972 860 |
| நுவரெலியா 0777 717 562 | அனுராதபுரம் 0767 139 916 |
| அம்பாரா 0773 547 556 | குருநாகல் 0764 425 205 |
| எம்பிலிபிட்டிய 0773 610 188 | பாணடுரா 0775 215 263 |
| மாத்தறை 0743 601 121 | சிலாவ் 0770 288 804 |

SUNDAY OBSERVER adZ  வாரமஞ்சரி

**Promotional Rates for Classified Advertisements** (Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
|---|---|---|
| Rs. 800/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,000/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,300/- |

**Gampaha District**

**Mahara - 011 2 925 168**
1474 - H. M. Induka Herath - Adz soon Advertising, 57/D, Kandy Road, Mahara.

**Mirigama - 033 22 740 19**
1964 - M. D. Mohan Jayalal - No. 219, Pasyala Road, Mirigama.

**Veyangoda - 033 22 903 86**
1984 - H. M. De Seram - No. 37, Main Street, Veyangoda.

**Weliweriya - 077 4 965 266**
1986 - K. L. P. Perera - Nilanka Stores, No. 4, New Kandy Road, Weliweriya.

**Kaluthara District**

**Panadura - 072 6 267 432**
1730 - B. D. P. Perera - Sausiri Adds, No. 121, Horana Road, Mahawila, Panadura.

**Panadura - 038 22 324 80**
1776 - Mahen Silva - Suwena News and Adds, 28/A, Weeraman Road, Panadura.

**Panadura - 038 22 400 60**
1819 - G. R. Gunasingha - 467, Media Lick, Main Street, Panadura.

**Mathugama - 076 6 589 582**
1737 - D. C. S. Lakmal - Janahitha Newspaper Agency - Mathugama.

**Ingiriya - 077 9 806 680**
1757 - A. D. Nimal Chandra - Chandra Stores, No. 03, Main Street, Ingiriya.

**Beruwala - 034 22 775 84**
1784 - Upali Weerasingha - Kanthi Book Shop, No. 10, Market Road, Beruwala.

**Bandaragama - 071 4 475 504**
1785 - Sumith Kumara - Dawasa Book Shop, No. 17, Panadura Road, Bandaragama.

**Wadduwa - 077 2 671 013**
1850 - Chinthaka Cooray - No. 509, Galle Road, Wadduwa.

**Horana - 071 8 863 522**
1852 - D. Nandawathi - Add House, No. 262A, Rathnapura Road, Horana.

**Bandaragama - 070 2 424 240**
1860 - W. A. V. Perera - Nearest Gelanigama Highway Entrance, Kothalawala, Bandaragama.

**Kegalle District**

**Mawanella - 071 6 946 452**
9113 - D. K. R. Ranasingha - No.132, Main Street, Mawanella.

**Kegalle - 077 6 778 481**
9119 - M. M. Salgado & Sons - No. 88, Kandy Road, Kegalle.

**Mawanella - 077 0 217 854**
9131 - P. M. A. Indunil Bandara - Nimalasiri Book Shop, No. 14, Main Street Mawanella.

**Kegalle - 0702651515**
9145 - J. T. F. Corera - Kandy Road, Kegalle.

**Warakapola - 071 7 112 567**
9158 - A. A. Ariyawathi - Piumi Book Shop, Bus Satnd, Warakapola.

**Ruwanwella - 071 3 117 535**
9192 - U. K. D. Ariyawansa - No. 44, Kalyani Book Shop, Main Street, Ruwanwella.

**Rathnapura District**

**Sooriyawewa - 076 6 032 171**
9345 - M. A. Chaminda Kumara - Chathumi Agencies, Sooriyawewa.

**Kuruvita - 077 7 123 149**
9371 - Y. M. Roshan Bandara - Yapa Agencies, Kuruvita.

**Rathnapura - 071 2 900 035**
9377 - G. G. Karunarathne - Karunarathna Brothers, Rathnapura.

**Rathnapura - 077 7 221 939**
9378 - D. Liyanarachchi - Lake House Media Center, Rathnapura.

**Balangoda - 045 22 862 84**
9402 - B. K. D. Padmasiri Jinadasa - Jinadasa Trade Center, Balangoda.

**Eheliyagoda - 0712362035**
9404 - K. A. Premasinghe Kuruppu - Famous Cafe, Eheliyagoda.

**Embilipitiya - 0714784294**
9449 - K. V. D. Teja Karavita - Queens Agencies, Pallegama, Embilipitiya.

**ADZ HOTLINE - 011 2 429 369**

**CALL - 011 2 429 342/ 343**

# ஹொரணை நகர சபை - பெறுகை அறிவித்தல்

## ஹொரணை நகர சபையில் நாளாந்தம் சேகரிக்கப்படும் இறுதிக் குப்பைகளை அப்புறப்படுத்துதல்

## 2024 – 01 – 01 முதல் 2024 – 12 – 31 வரை

ஹொரணை நகர சபை அதிகாரப் பிரதேசத்தினுள் உருவாகும் குப்பைகளை இறுதியாக அப்புறப்படுத்துவதற்காக பின்வரும் வகையில் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

உக்கிப்போகாத குப்பை ஒரு (01) கியூப் மீற்றர் அலகை இறுதியாக அப்புறப்படுத்துவதற்குச் செலவாகும் குறைந்தபட்சம் விலையை வழங்குதல் வேண்டும்.

**கேள்விப் படிவங்கள் வழங்கப்படும் நாள் மற்றும் நேரம்:**
2023-12-06ஆம் திகதி முதல் 2023-12-22ஆம் திகதிக்கிடையில் வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை

**கேள்விப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாள் மற்றும் நேரம்:**
2023-12-27ஆம் திகதி பி.ப. 2.30 மணி வரை

**கேள்விப் படிவங்கள் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம்:**
2023-12-27ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு

மீளளிக்கப்படாத ஐந்தாயிரம் (5,000.00 ரூபா) கேள்விப் படிவக் கட்டணம் மற்றும மீளளிக்கப்படும் ஐம்பதாயிரம் (50,000.00 ரூபா) ரூபா கேள்வி வைப்பொன்றைச் செலுத்தியதன் பின் கேள்வி விண்ணப்பங்களை ஹொரணை நகர சபையின் பிரதான அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விக்குரித்தான சகல விபரங்கள் மற்றும் நிபந்தனைகள் என்பவற்றை விண்ணப்பப் படிவங்களுடன் பெற்றுக்கொள்ளலாம். மேலதிக விபரங்களை பின்வரும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக பெற்றுக்கொள்ளலாம்.

**தொலைபேசி இல:** **034-2261275 (பொது)**
**070-1310038 (பொது சுகாதாரப் பரிசோதகர்)**

2023-12-01.
**ஹொரணை நகர சபை,**
**ஹொரணை.**

**டீ.ஜீ. பிரசன்ன சிறிசேன,**
**செயலாளர் மற்றும் அதிகாரம் வாய்ந்த கடமைகளை நிறைவேற்றும் அதிகாரி,**
**ஹொரணை நகர சபை.**

# தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை

**கைத்தொழில் அமைச்சு**

**இரத்தினக்கல் மற்றும் ஆபரண தொழில் முயற்சியாளர்களுக்கு விடுக்கப்படும்**

## அழைப்பு

ஜப்பான் டோக்கியோ நகரத்தில் 2024 ஜனவரி 17ஆம் திகதி முதல் ஜனவரி மாதம் 20ஆம் திகதி வரையில் 35ஆவது முறையாக நடைபெறுவதற்குள்ள "INTERNATIONAL JEWELLERY TOKYO (IJT) SHOW" சர்வதேச இரத்தினக்கல் மற்றும் ஆபரண கண்காட்சியில் இலங்கை பார்வையாளர் மண்டபம், ''இலங்கை இரத்தினக்கல் தலைநகரம்'' எனும் கருப்பொருளை மேலும் மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு இம்முறையும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என மகிழ்ச்சியுடன் அறியத்தரப்படுகின்றது. இந்த மிகுந்த புகழ்வாய்ந்த கண்காட்சியைப் பார்வையிடுவதற்கு 40,000 பார்வையாளர்கள் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேற்கூறிய கண்காட்சியில் அதிகாரசபை மண்டபத்தினுள் இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்களை காட்சிப்படுத்துவதற்கு மற்றும் வியாபார வாய்ப்புகளை விரிவாக்கிக்கொள்ள விரும்பும் இரத்தினக்கல் மற்றும் ஆபரண வியாபாரிகள் மற்றும் சிறிய மற்றும் மத்திம அளவிலான இரத்தினக்கல் மற்றும் ஆபரண வியாபாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கண்காட்சி வாய்ப்புகள் குறைந்த எண்ணிக்கையில் இருப்பதால் விண்ணப்பதாரர்களைத் தெரிவு செய்தல், முறையான நேர்முகத் தேர்வின் மூலம் மேற்கொள்ளப்படும் என்பதுடன் இதில் ஆர்வம் காட்டும் தொழில்முயற்சியாளர்கள் தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் இணையதளத்திற்குப் (www.ngja.gov.lk) பிரவேசித்து உரிய விண்ணப்பப் படிவத்தின் மாதிரிப் படிவத்தின் பிரகாரம் தயாரித்துக்கொண்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

"INTERNATIONAL JEWELLERY TOKYO (IJT) SHOW" எனக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டு விண்ணப்பப் படிவங்களை 2023 டிசம்பர் மாதம் 13ஆம் திகதி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது ஏற்றுமதி மேம்பாட்டுப் பிரிவிற்கு நேரில் கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும்.

**மேலதிக விபரங்களுக்கு ஏற்றுமதி மேம்பாட்டுப் பிரிவைத் தொடர்புகொள்ளவும்.**
**நேரடி தொலைபேசி: 011-2390653**
**பொது தொலைபேசி இல. 011-2390645-8 (நீடிப்பு 333 - 335)**

**தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்று அதிகாரி**
**தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபை,**
இல. 12, மெக்சன்ஸ் கோபுரம், அல்பிரட் ஹவுஸ் கார்டன்ஸ், கொழும்பு 03.
தொலைபேசி: 0112390645-8 தொலைநகல்: 0112320758
மின்னஞ்சல்: ngjaexportpromotion@gmail.com
இணையதளம்: www.ngja.gov.lk

# 2024ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

## மாவட்ட பொது வைத்தியசாலை - அவிசாவளை

2024ஆம் வருடத்தில் எமது வைத்தியசாலைக்கு பின்வரும் வழங்கல் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு ஆர்வம் காட்டும் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு உற்பத்தியாளர்கள் / அதிகாரம் வாய்ந்த முகவர்கள் / மொத்த வியாபாரிகள் / ஒப்பந்தக்காரர்கள் / பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் உட்பட அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மற்றும் நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. இதன்பொருட்டு பின்வரும் 07ஆம் இலக்கத்தில் காணப்படும் மாதிரிக்கு அமைவாக விண்ணப்பங்கள் தம்மால் தயாரிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட பின்பு பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "2024ஆம் வருடத்திற்கான வழங்கல் மற்றும் சேவைகளுக்காக பதிவுசெய்தல்" என்று குறிப்பிடுதல் வேண்டும். எமது நிபந்தனைகள் மற்றும் விதிகளுக்கு அமைவாக முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 2023 டிசம்பர் 29ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு தலைவர், பிரதேச பெறுகைக்குழு, மாவட்ட பொது வைத்தியசாலை, அவிசாவளை என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். தபாலில் தொலைந்து போதல் மற்றும் தாமதமாதல் தொடர்பில் இந்த நிறுவனத்தினால் பொறுப்புகூறப்பட மாட்டாது.

03. விண்ணப்பதாரிகள் தாம் பதிவுசெய்வதற்கு விரும்பும் ஒரு பொருள் / சேவையின் பொருட்டு மீளளிக்கப்படாத 1000.00 ரூபாவை ரொக்கப் பணமாகச் செலுத்தி அவிசாவளை மாவட்ட பொது வைத்தியசாலை, கணக்காளரிடம் பெற்றுக்கொண்ட ப.ப.01 பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். காசோலைகள் ஏற்கப்படமாட்டாது.

04. கட்டிட நிர்மாணம் மற்றும் திருத்தவேலைகளுக்கான பதிவுக்கட்டணம் 2000.00 ரூபாவாகும். தகைமைகளைப் பரீட்சித்துப் பார்த்து பதிவுசெய்யப்படும் கட்டிட நிர்மாணம் மற்றும் திருத்தவேலைகள் விடயத்தின் கீழ் பதிவுசெய்வதற்கு எதிர்ப்பார்க்கும் விண்ணப்பதாரிகள் வியாபார பதிவுடன் கட்டிட கைத்தொழிலில் ஈடுபட்டமைக்கான CIDA / மாகாண சபை பதிவு இருத்தல் கட்டாயமாகும் என்பதுடன், பதிவுச்சான்றிதழின் பிரதியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

05. பொருட்கள் மற்றும் சேவைகள் குறைந்தபட்சம் மூன்று மாதகால கடன் அடிப்படையில் வழங்குவதற்கு இணங்குதல் வேண்டும் அத்துடன் பொருட்களை போக்குவரத்து செய்து கொடுக்க குறித்த நிறுவனம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

06. **(அ) வழங்க வேண்டிய பொருட்கள்**

01. சகல வகையான அலுவலக உபகரணங்கள்
02. அலுவலக காகிதாதிகள்
03. கணனி காகிதாதிகள், ரிபன், டோனர் மற்றும் இறுவட்டு
04. அலுவலக பொருட்கள் (மரம், பிளாஸ்டிக் மற்றும் உருக்கு)
05. தலையணை மற்றும் மெத்தை
06. சகல வகையான துணிகள்
07. மெகின்டொஷ் மற்றும் ரெக்ஷின்
08. அலுமினியம் / உலோகப்பொருட்கள்
09. மட்பாண்டப் பொருட்கள் (போசிலின்)
10. கட்டிடபொருட்கள் (நிறப்பூச்சு, வார்னிஷ், வயர், பல்ப் உட்பட)
11. நீர்க்குழாய் துணைப்பாகங்கள்
12. வாகன உதிரிப்பாகங்கள்
13. வாகன டயர், டியூப் மற்றும் பெற்றரி
14. மின் உபகரணங்கள் மற்றும் மின்சார துணைப்பாகங்கள் (வளிச்சீராக்கி, குளிர்சாதனம் மற்றும் மின் விசிறிகள் உட்பட)
15. காலணிகள்
16. காபட் மற்றும் இறப்பர் சார்ந்த உற்பத்திகள்
17. பொலித்தின் உட்பட அதுசார்ந்த உற்பத்திகள்
18. பாவனையாளர் மற்றும் துப்புரவேற்பாட்டு பொருட்கள்
19. கணனி மற்றும் கணனி துணைப்பாகங்கள்
20. புகைப்படப்பிரதி இயந்திரம் மற்றும் அச்சுப்பொறிகள்

**(ஆ) வழங்க வேண்டிய சேவைகள்**

01. கணனி சேர்விஸ் செய்தல் மற்றும் திருத்தவேலைகள்
02. கணனி வலையமைப்பு சேவை மற்றும் பராமரிப்பு விடயங்கள்
03. CCTV கெமரா முறைமை சேவை மற்றும் பராமரிப்பு விடயங்கள்
04. தொலைதொடர்பு உபகரணங்கள் திருத்தவேலைகள் பராமரிப்பு விடயங்கள்
05. தொலைபேசி பராமரிப்பு வேலைகள்
06. மின்சார பராமரிப்பு வேலைகள்
07. குளிர்சாதனம் மற்றும் வளிச்சீராக்கி திருத்தவேலைகள்
08. மின்சார உபகரண திருத்தவேலைகள்
09. சமையலறை உபகரண திருத்தவேலைகள்
10. வாகன திருத்தவேலைகள்
11. திணைக்கள அடையாள அட்டை தயாரித்தல்
12. கட்டிட திருத்தவேலைகள்
13. தையல் இயந்திரம் மற்றும் உபகரணங்களின் திருத்தவேலைகள்
14. வீட்டுத்தோட்ட இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் திருத்தவேலைகள்

**(இ) விற்பனை செய்தல்**

01. அப்புறப்படுத்தப்பட்ட பொருட்கள் (காட்போட், சிரட்டை, கண்ணாடிக் குப்பிகள், பிளாஸ்டிக் போத்தல்)

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக்குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை,**
**அவிசாவளை - (036-2222261/036-2222262)**

07. மாதிரி விண்ணப்பப்படிவம்

**2024ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்**
**மாவட்ட பொது வைத்தியசாலை – அவிசாவளை**

01. வழங்குநரின் பெயர் ..............................................................
02. வியாபாரத்தின் பெயர் ..............................................................
03. வியாபாரத்தின் முகவரி ..............................................................
04. தொலைபேசி இலக்கம் ..............................................................
05. வியாபார பதிவு செய்தல் இலக்கம் மற்றும் திகதி :..............................................
06. விண்ணப்பிக்கும் வழங்கல் சேவைகள் :..............................................

அவிசாவளை மாவட்ட பொது வைத்தியசாலையின் நிபந்தனைகள் மற்றும் விதிகளுக்கு இணங்குவதாகவும் அதன்படி செயற்படுவதற்கும் நான்/நாம் இணங்குகிறேன்/இணங்குகிறோம்

திகதி : ........................ கையொப்பம் :................................

**NILIS**

# தேசிய நூலகம் மற்றும் தகவல் அறிவியல் நிறுவகம்

## கொழும்பு பல்கலைக்கழகம்

## பணிப்பாளர் பதவி

கொழும்பு பல்கலைக்கழகத்தின் தேசிய நூலகம் மற்றும் தகவல் அறிவியல் நிறுவக (National Institute of Library and Information Sciences – NILIS) பணிப்பாளர் பதவிக்காக விண்ணப்பங்கள்/ முன்மொழிவுகள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரர்கள்/ பெயரிடப்பட்டவர்கள் இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும் என்பதோடு 63 வயதுக்கு குறைந்தவராக இருத்தல் வேண்டும். வெற்றிகரமான விண்ணப்பதாரர்/ பெயரிடப்பட்டவர் நியமிக்கப்படும் திகதியில் இருந்து மூன்று ஆண்டுகள் காலம் அல்லது அவர் தமது வயது 65 ஐ பூர்த்தி செய்யும் வரை ஆகிய இரண்டில் முதலில் வருகின்ற சந்தர்ப்பம் வரை பதவிக் காலம் அமுலில் இருக்கும்.

NILIS என்பது கொழும்பு பல்கலைக்கழத்துடன் இணைந்த நிறுவனம் என்பதோடு அது பல்கலைக்கழக மாநியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ், டிப்ளோமா மற்றும் பட்டப் பின் படிப்பு கற்கைகள் நடத்தப்படும் நிறுவனம் ஒன்றாகும். NILIS மாணவர்களில் பிரதானமாக தற்போது அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களில் பணியாற்றுபவர் உள்ளனர். இந்த நிறுவனம் ஆராய்ச்சி மற்றும் ஆலோசனை சேவையிலும் ஈடுபட்டுள்ளது.

பணிப்பாளர் நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று மற்றும் கல்விசார் அதிகாரியாவார். அவர் நிறுவனத்தின் பிரதான கணக்கு அதிகாரி என்பதோடு, நிறுவனத்தின் நிர்வாக சபை மற்றும் கல்விசார் குழுவின் அங்கத்தவராவார். முகாமைத்துவ கொள்கை தயாரிப்பு மற்றும் செயற்படுத்தல் மற்றும் நிர்வாக சபையின் முடிவுகளை செயற்படுத்துவதற்கான கல்விசார் தலைமைத்துவத்தை வழங்குவதன் பொறுப்பை அவர் ஏற்பார். அவர் நிறுவனத்தின் பொதுவான நிர்வாகத்திற்கு பொறுப்பு வகிப்பதால் கல்விசார் சிறப்புத்தன்மை, வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், ஜனநாயக ரீதியான முகாமைத்துவம் மற்றும் பயன்தரும் மற்றும் பக்கச்சார்பற்ற நிர்வாகத் தலைமை ஆகிய அடிப்படைகளை பின்பற்றுதல் வேண்டும். நிறுவனத்திற்குள் ஒழுக்கத்தை பேணும் பொறுப்பும் பணிப்பாளர் வசமாகும். அவர் நிறுவனத்தின் வாடிக்கையாளர்கள் மற்றும் பணிக் குழுவின் தேவைகள் தொடர்பில் புரிதல் இருத்தல் வேண்டும் என்பதோடு, நிதி உருவாக்குவதற்கும், பல்கலைக்கழகம் மற்றும் வேறு அது சார்ந்த நிறுவனங்களுடன் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கும், சர்வதேச தொடர்புகளை மேம்படுத்துவதற்கும் முடியுமாக இருத்தல் வேண்டும்.

பணிப்பாளர் அவரது அறிவுசார் முகாமைத்துவ திறமைகள் மூலம் நிறுவனத்தின் இலக்குகளை எட்டுவதற்கான நோக்கு உள்ள நபர் ஒருவராக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர்/ பெயரிடப்பட்ட நபர் சிறந்த ஆய்வை அறிவித்திருத்தல் வேண்டும் என்பதோடு, உயர் தரமான ஆளிடை திறமையுடன் தலைமைத்துவ பண்புகள் மற்றும் கொள்கை ரீதியான விடயங்கள் தொடர்பில் தெளிவான புரிதல் உள்ள, கல்வி ரீதியில் உயர்ந்த மற்றும் நேர்மையான ஒருவராக இருப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

பணிப்பாளருக்கு பேராசிரியர் ஒருவருக்கு உரித்தான சம்பளம் மற்றும் பதவிக்கு உரிய வேறு கொடுப்பனவுகள் கிடைக்கப்பெறும்.

விண்ணப்பம்/ முன்மொழிவுடன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் இருத்தல் வேண்டும்:

(i) பிறந்த திகதி உட்பட விண்ணப்பதாரரின்/ பெயரிடப்பட்டவரின் முழுமையான சுயவிபரக்கோவை (பிறப்புச் சான்றிதழில் உறுதி செய்யப்பட்ட பிரதி ஒன்றை இணைத்தல் வேண்டும்).

(ii) கல்விசார் மற்றும் ஆராய்ச்சி சிறப்புத்தன்மை, தொழில்முறை தொடர்பாடல் மற்றும் முகாமைத்துவ தேர்ச்சி, பயனுள்ள தலைமைத்துவம் போன்றவை சார்ந்த அத்தாட்சிகளின் பிரதிகள்.

(iii) நிறுவனத்தின் அபிவிருத்தி தொடர்பிலான கொள்கை அறிவிப்பு

(iv) பணிப்பாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டால் அவர் எட்டுவதற்கு எதிர்பார்க்கும் இலக்குகள் தொடர்பில் முன்மொழிவுகள் உள்ளடங்கிய சுருக்கமான விபரம்.

(v) முன்மொழிவு ஒன்றாயின், அவ்வாறு பெயரிடப்படும் நபரின் விருப்பத்தை உள்ளடக்கிய ஒரு கடிதம்

(vi) NILIS நிறுவனம் தவிர, வேறு அரச துறை, கூட்டுத்தாபனம், சட்டரீதியான நிறுவனம் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் பணி புரியும் விண்ணப்பதாரர்/ பெயரிடப்பட்டவர் ஒருவராயின், அவர் பதவிக்கு நியமிக்கப்பட்ட அவர் தற்போது வகிக்கும் பதவியில் இருந்து விடுவிக்க முடியுமா என்பதை குறிப்பிட்டு தொழில் வழங்குநரினால் கடிதம்.

நேர்முகப்பரீட்சைக்காக அபேட்சகர்கள் தனிப்பட்ட முறையில் அழைக்கப்படுவர். விசேட சந்தர்ப்பம் ஒன்றில், அபேட்சகர் ஒருவருக்கு தனிப்பட்ட முறையில் தோன்றுவது முடியாத சந்தர்ப்பத்தில், அவர் வீடியோ மாநாடு அல்லது ஸ்கைப் மூலம் நேர்முகப்பரீட்சைக்கு தோன்றுவதற்கு அனுமதி அளிக்கப்படும். அபேட்சகர் ஒருவர் குறைந்தது பத்து (10) விநாடிகள், ஆனால் பதினைந்து (15) விநாடிகள் மேற்படாது சுருக்கமான நிகழ்ச்சி வழங்கல் ஒன்றுக்காக தயாராகுதல் வேண்டும். 2020 செப்டெம்பர் 11 ஆம் திகதிய UGC சுற்றுநிருப இலக்கம் 07/2020 இன் இணைப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தாளில் உள்ள அளவுகோல்களுக்கு அமைய நேர்முகப்பரீட்சை நடத்தப்படுவதோடு அதனை https://nilis.cmb.ac.lk/wpcontent/uploads/2020/10/2221_Commission-Circular-No.-07-2020-English.pdf என்ற இணையதளத்திற்கு பிரவேசித்து அல்லது UGC இணையதளத்தில் இருந்து (https://www.ugc.ac.lk) பெற்றுக்கொள்ள முடியும்.

விண்ணப்பங்கள்/ முன்மொழிவுகள் சிரேஷ்ட உதவி பதிவாளர், தேசிய நூலகம் மற்றும் தகவல் அறிவியல் நிறுவகம், கொழும்பு பல்கலைக்கழகம், கொழும்பு-03 என்ற முகவரிக்கு முத்திரை பொறிக்கப்பட்ட உறையில்/ கடித உறை ஒன்றில் அனுப்ப வேண்டும் என்பதோடு 2024 ஜனவரி 05 ஆம் திகதி பி.ப. 3.00 க்கு அல்லது அதற்கு முன்னர் மேலுள்ள அலுவலகத்திற்கு வருகை தந்து ஒப்படைத்தல் அல்லது பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பம்/ முன்மொழிவை கொண்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "பணிப்பாளர் பதவி" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

இறுதித் திகதிக்கு பின்னர் கிடைக்கின்ற விண்ணப்பங்கள்/ முன்மொழிவுகள் நிராகரிக்கப்படும்.

**முகாமைத்துவ சபையின் செயலாளர்**
**தேசிய நூலகம் மற்றும் தகவல் அறிவியல் நிறுவகம்**
**கொழும்பு பல்கலைக்கழகம்**

**2023.12.06**

**The Housewives' companion**
**Classifieds on**
**Daily News**

# இலங்கை கிரிக்கெட் தேர்வுக் குழு தலைவராக உபுல் தரங்க நியமனம்

இலங்கை கிரிக்கெட்டின் புதிய தேர்வுக் குழு தலைவராக இலங்கை அணியின் முன்னாள் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் உபுல் தரங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

2024 ஆம் ஆண்டுக்கான விளையாட்டுத் துறை அமைச்சின் வரவு செலவுத் திட்ட விவாதம் நேற்று முன்தினம் (04) நடைபெற்றபோது விளையாட்டுத் துறை அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ இதனை தெரிவித்தார்.

இதன்படி பிரமோத்ய விக்ரமசிங்கவுக்கு பதிலாகவே தரங்க புதிய தேர்வுக் குழு தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். பிரமோத்ய விக்ரமசிங்க 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அப்போதைய விளையாட்டுத் துறை அமைச்சராக இருந்த நாமல் ராஜபக்ஷவின் பரிந்துரை அடிப்படையில் தேர்வுக் குழு தலைவராக நியமிக்கப்பட்டிருந்தார்.



எனினும் அண்மையில் இந்தியாவில் நடைபெற்ற உலகக் கிண்ண போட்டியில் இலங்கை அணி மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தியதோடு குறைந்தது சம்பியன்ஸ் கிண்ணத்திற்கு தகுதிபெறத் தேவையான முதல் எட்டு இடங்களுக்குள் முன்னேறாமல் வெளியேறியது. இதனையடுத்து இலங்கை தேர்வுக் குழுவினர் மீதும் விமர்சனங்கள் வலுத்த நிலையிலேயே இந்த மாற்றம் பற்றிய அறிவிப்பு வெளியாகியுள்ளது.

பிரமோத்ய விக்ரமசிங்க தலைமையிலான தேர்வுக் குழுவில் முன்னாள் விக்கெட் காப்பாளர் ருமேஷ் களுவிதாரண, ஹேமன்த விக்ரமரத்ன, வருண வராகொட, எஸ்.எச்.யு. கர்னைன் மற்றும் பி.ஏ. திலகா நில்மினி குணரத்ன ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

எவ்வாறாயினும் புதிய தேர்வுக் குழுவில் இடம்பெறும் மற்ற உறுப்பினர்கள் விபரத்தை அமைச்சர் பெர்னாண்டோ வெளியிடவில்லை.

தரங்கவின் தேர்வுக் குழுவில் முன்னாள் கிரிக்கெட் வீரர்களான அஜந்த மெண்டிஸ் மற்றும் தரங்க பரணவிதான ஆகியோரும் இடம்பெற்றிருப்பதாக நம்பகமான வட்டாரங்கள் மூலம் தெரியவருகிறது.

தேர்வுக் குழுவை நியமிப்பதற்காக 10 பேரின் பெயரை இலங்கை கிரிக்கெட் பரிந்துரைத்திருப்பதாகவும் அது தொடர்பில் அவதானம் செலுத்தி புதிய கிரிக்கெட் தேர்வுக் குழு ஒன்றை நியமிப்பதாகவும் அமைச்சர் பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

38 வயதான உபுல் தரங்க கடந்த 2021 பெப்ரவரியில் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றபோதும், முதல்தர போட்டிகளில் தொடர்ந்து ஆடி வருகிறார். அவர் கடந்த நவம்பரில் பிரதான கழக மட்டப் போட்டியில் என்.சி.சி. அணிக்காக ஆடினார்.

இலங்கை ஒருநாள் அணித் தலைவராக செயற்பட்ட தரங்க, 2019 ஆம் ஆண்டு வரை இலங்கை அணிக்காக சர்வதேச போட்டிகளில் ஆடியுள்ளார். 235 ஒருநாள் சர்வதேச போட்டிகளில் ஆடியிருக்கும் அவர் 15 சதங்கள் மற்றும் 37 அரைச்சதங்களுடன் 6951 ஓட்டங்களை பெற்றுள்ளார். தவிர அவர் 31 டெஸ்ட் மற்றும் 26 டி20 சர்வதேச போட்டிகளிலும் விளையாடியுள்ளார்.

இந்நிலையில் உலகக் கிண்ணத்திற்குப் பின்னர் இலங்கை அணி பங்கேற்கும் முதல் போட்டி சிம்பாப்வேயுக்கு எதிராக எதிர்வரும் ஜனவரி மாதம் நடைபெறவுள்ளது. சிம்பாப்வே வரும் இலங்கை அணி மூன்று ஒருநாள் மற்றும் மூன்று டி20 போட்டிகளில் ஆடவுள்ளது.

உபுல் தரங்கவின் தலைமையிலான புதிய தேர்வுக் குழுவின் முதல் பணியாக இந்தத் தொடருக்கான இலங்கை அணியை தேர்வு செய்வது அமையும்.

# ஐ.சி.சி தடை விரைவில் நீங்கும்: அமைச்சர் உறுதி



இலங்கை கிரிக்கெட் மீது சர்வதேச கிரிக்கெட் கௌன்சில் விதித்துள்ள தடையை விரைவில் அகற்றுவதாக அந்த கௌன்ஸில் கூறியதாக விளையாட்டுத் துறை அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ பாராளுமன்றத்தில் வைத்து தெரிவித்துள்ளார்.

கிரிக்கெட் தடையை அகற்றுவதற்காக சர்வதேச கிரிக்கெட் கௌன்ஸிலின் அதிகாரிகளுடன் தொலைபேசியில் பேசியதாகவும் அவர் தெரிவித்தார். இலங்கை கிரிக்கெட் தலைவர் ஷம்மி சில்வாவுக்கு எதிராக உள்ள அனைத்து குற்றச்சாட்டுகள் தொடர்பிலும் ஐ.சி.சியிற்கு தெரிவிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கிரிக்கெட் சங்கங்கள் மீதான அரசியல் தலையீடுகள் தொடர்பில் தாய் சங்கத்திற்கு முறையிடுவது தவறு என்றும் தாம் விளையாட்டுத்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டது ஷம்மி சில்வாவை பாதுகாப்பதற்கு அல்லவென்றும் ஹரீன் பெர்னாண்டோ குறிப்பிட்டார். வரவு செலவு திட்டத்தில் விளையாட்டுத் துறை அமைச்சின் செலவுத் தலைப்பு தொடர்பில் நேற்றுமுன்தினம் (04) இடம்பெற்ற விவாதத்தின்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அரசியல் தலையீட்டை காரணம் காட்டி இலங்கை கிரிக்கெட் மீது கடந்த நவம்பர் 10 ஆம் திகதி ஐ.சி.சி தடை விதித்தது. தடை இருந்தபோதும் சர்வதேச போட்டிகளில் ஆட இலங்கைக்கு அனுமதி அளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கற்பிட்டி பிரீமியர் லீக் தொடரின் வீரர் ஏலம்

புத்தளம் தினகரன் நிருபர்

கற்பிட்டியில் வருடாந்தம் நடைபெறும் கற்பிட்டி பிரீமியர் லீக் கிரிக்கெட் சுற்றுப் போட்டி எதிர்வரும் ஜனவரி மாதம் கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலை மைதானத்தில் நடத்த ஏற்பாடாகியுள்ளது.

இதில் கற்பிட்டியில் உள்ள சகல கிரிக்கெட் கழகங்களிலும் உள்ள திறமையான விளையாட்டு வீரர்களைக் கொண்டு ஆறு அணிகள் பிரிக்கப்பட்டு போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இவ் அணிகளுக்கான வீரர்களை ஏலத்தில் எடுக்கும் நிகழ்வு நாளை மறுதினம் (8) கற்பிட்டியில் இடம்பெற உள்ளது. இதன்போது 102 வீரர்கள் ஏலமிடப்படுவதுடன் ஒவ்வொரு அணிக்கும் 13 வீரர்கள் முகாமையாளர்களால் ஏலத்தின் மூலம் தேர்தெடுக்கப்படுவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச செய்திகள்

# பிரிட்டனில் குடியேறிகளை குறைப்பதற்கு நடவடிக்கை



சட்டரீதியாக நாட்டுக்குள் வரும் குடியேறிகளை குறைக்கும் திட்டத்தை பிரிட்டன் அரசு அறிவித்துள்ளது. பிரிட்டனில் சாதனை எண்ணிக்கையான குடியேறிகளின் வருகை பிரதமர் ரிஷி சுனக் அரசு மீது கடும் அழுத்தத்தை ஏற்படுத்தி இருக்கும் நிலையிலேயே இந்த அதிரடி அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இதன்படி நாட்டுக்குள் வருவதற்கு தேர்ச்சிபெற்ற தொழிலாளர்கள் ஈட்ட வேண்டிய குறைந்தபட்ச சம்பளம் 26,200 பௌண்ட்ஸ்களில் இருந்து 38,700 பௌண்ட்ஸ்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது. எனினும் சுகாதாரம் மற்றும் சமூக சேவையாளர்களுக்கு இதில் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

இதில் வெளிநாட்டு சுகாதார பணியாளர்கள் தமது விசாவில் குடும்ப உறுப்பினர்களை அழைத்து வருவது நிறுத்தப்படுவதோடு சுகாதார சேவையை பயன்படுத்துவதற்கு குடியேறிகள் செலுத்த வேண்டிய கூடுதல் கட்டணம் 66 வீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று குடும்ப விசாவுக்கான குறைந்தபட்ச வருவாயும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# அமெ. மீதான மற்றொரு தாக்குதல் முறியடிப்பு



ஈராக்கில் ஆளில்லா விமானத் தாக்குதலை நடத்த முயன்ற ஐந்து தாக்குதல்தாரிகளும் கொல்லப்பட்டு அவர்களின் ஆளில்லா விமானங்களும் அழிக்கப்பட்டதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது. கடந்த ஒக்டோபர் 17 ஆம் திகதி தொக்கம் ஈராக் மற்றும் சிரியாவில் அமெரிக்க துருப்புகளை இலக்கு வைத்து ஈரான் ஆதரவு போராளிகள் குறைந்தது 76 தடவைகள் தாக்குதலில் ஈடுபட்டிருப்பதாக அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். ஈராக், கிர்குக்கிற்கு அருகில் கடந்த ஞாயிற்றுக்கிழமையே தாக்குதல்தாரிகள் மீது இராணுவ நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாக அமெரிக்க மத்திய கட்டளையகம் வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சீனா செல்வோருக்கு தாய்வான் அறிவுறுத்தல்



சீனாவில் சுவாசத்தொகுதியுடன் சம்பந்தப்பட்ட நோய்கள் சமீப காலமாக அதிகரித்து வருவதால் ஹொங்கொங், மக்காவ் மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கு பயணிக்க வேண்டாமென தாய்வான் சுகாதார அமைச்சு நாட்டு மக்களை அறிவுறுத்தியுள்ளது. முதியவர்கள், சிறுவர்கள் மற்றும் பலவீனமான நோயெதிர்ப்பு சக்தியைக் கொண்டவர்கள் போன்றோர் இந்நாடுகளுக்கு பயணிப்பதைத் தவிர்த்துக் கொள்வது இன்றியமையாதது எனவும் அந்நாடு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, சுவாசத்தொகுதி நோய்கள் அதிகரிப்பதற்கான காரணம் குறித்து சீனாவிடம் கேட்டுள்ள உலக சுகாதார அமைப்பு இது கொவிட் தொற்றுக்கு முன் போன்ற நிலையில் இல்லை என்றும் புதிய நோய்க்கிருமிகள் எதுவும் கண்டறியப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

# தெற்கு காசாவில் இஸ்ரேல் படைகளுடன் பலஸ்தீன போராளிகள் உக்கிர சண்டை

## மக்கள் தொடர்ந்தும் வெளியேற இடமில்லை

முற்றுகையில் உள்ள காசா மீது இஸ்ரேலின் தாக்குதல்கள் மேலும் தீவிரப்படுத்தப்பட்டிருக்கும் நிலையில் தெற்கு காசாவில் பலஸ்தீன போராளிகள் மற்றும் இஸ்ரேலிய துருப்புகளுக்கு இடையே நேற்று (05) உக்கிர மோதல் நீடித்தது. இது அங்கு சிக்கி இருக்கும் பொது மக்கள் மேலும் பயங்கர சூழலை எதிர்கொள்ளும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

போர் வெடித்த ஆரம்பத்தில் வடக்கு காசா மீது கவனம் செலுத்திய இஸ்ரேல் தற்போது தனது துருப்புகளை தெற்கு பக்கம் நகர்த்தியுள்ளது. இதனால் தெற்கில் பல பகுதிகளிலும் உள்ள மக்களை அங்கிருந்து வெளியேறும்படி கூறி இஸ்ரேல் வானில் இருந்து துண்டுப் பிரசுரங்களை வீசியுள்ளது.

ஏற்கனவே வடக்கு காசாவில் இருந்து வெளியேறிய மக்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் தெற்கு காசாவின் கான் யூனிஸ் நகருக்கு அருகில் இஸ்ரேலிய டாங்கிகள், கவச வாகனங்கள் மற்றும் புல்டோசர்கள் நெருங்கி வந்திருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இஸ்ரேலிய படைகளுடன் கான் யூனிஸின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் தீவிர சண்டையில் ஈடுபட்டிருப்பதாக ஹமாஸ் கூட்டணியான இஸ்லாமிய ஜிஹாத் ஆயுதப் பிரிவு தெரிவித்துள்ளது.

கான் யூனிஸுக்கு அருகில் இரு கவச வாகனங்கள் மற்றும் டாங்கி ஒன்றை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தியதாக ஹமாஸ் அமைப்பு டெலிகிராமில் தெரிவித்துள்ளது.

தெற்கு இஸ்ரேலில் பீர்ஷபாவை நோக்கி ரொக்கெட் குண்டுகளை வீசியதாக ஹமாஸ் ஆயுதப் பிரிவு நேற்று தெரிவித்த நிலையில் அங்கு அபாய ஒலி எழுப்பப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் குறிப்பிட்டது.

காசா பகுதியின் வடக்கு மற்றும் தெற்கில் திங்கட்கிழமை இடம்பெற்ற மோதல்களில் மூன்று இஸ்ரேலிய படையினர் கொல்லப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் நேற்று வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பாக தெற்கில் கான் யூனிஸ் மற்றும் வடக்கில் ஜபலியா மற்றும் ஷுஜையா பகுதிகளில் இஸ்ரேலிய படைகள் கடும் எதிர்ப்பை சந்தித்து வருவதாகக் கூறப்படுகிறது.

இதன்படி ஒக்டோபர் பிற்பகுதியில் காசா மீது தரைவழி தாக்குதலை ஆரம்பித்தது தொடக்கம் அங்கு கொல்லப்பட்ட இஸ்ரேலிய துருப்புகளின் எண்ணிக்கை 80 ஆக அதிகரித்துள்ளது.

மறுபுறம் இஸ்ரேல் போர் விமானங்கள் காசாவின் பல பகுதிகளிலும் குண்டு வீசி இருக்கும் நிலையில் உயிரிழப்பு எண்ணிக்கை வேகமாக அதிகரித்துள்ளது. காசா நகரில் உள்ள அல் யாசிகி குடும்பத்தின் குடியிருப்பு கட்டடம் ஒன்றின் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் கணிசமானோர் பலியாகி இருப்பதாக பலஸ்தீன உத்தியோகபூர்வ செய்தி நிறுவனமான வபா தெரிவித்துள்ளது.



கான் யூனிஸ் அகதி முகாமில் உள்ள வீடு ஒன்றின் மீது நடத்தப்பட்ட மற்றொரு வான் தாக்குதலில் மேலும் பலர் கொல்லப்பட்டுள்ளனர்.

எனினும் காசாவில் நேற்று இடம்பெற்ற தாக்குதல்களால் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையை அந்தப் பகுதியின் சுகாதார நிர்வாகங்கள் நேற்று பின்னேரம் வரை குறிப்பிட்டு கூறவில்லை.

எனினும் கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி போர் வெடித்தது தொடக்கம் கொல்லப்பட்டவர்கள் எண்ணிக்கை 16,000ஐ நெருங்கியுள்ளது. மேலும் 42,000க்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர்.

உலகின் அதிக சனநெரிசல் மிக்க காசாவின் அனைத்து இடங்களிலும் இஸ்ரேலிய தாக்குதல்கள் இடம்பெற்று வருவதால் மக்கள் இடம்பெயர்வதற்கான இடம் தீர்ந்து வருவதாக சர்வதேச உதவி நிறுவனங்கள் எச்சரித்துள்ளன.

“காசாவில் எந்த இடமும் பாதுகாப்பாக இல்லை, செல்வதற்கும் இடமில்லை” என்று பலஸ்தீன பகுதிகளுக்கான ஐ.நா மனிதாபிமான இணைப்பாளர் லைன் ஹஸ்டிங்ஸ் தெரிவித்துள்ளார்.

“மனிதாபிமான உதவிகளுக்கு பதிலளிக்க முடியாத பயங்கர சூழ்நிலை ஒன்று ஏற்படுவதற்கான சாத்தியம் உருவாகியுள்ளது” என்றும் ஹஸ்டிங்ஸ் வெளியிட்ட அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எட்டு வாரங்கள் நீடிக்கும் இந்தப் போரில் 2.3 மில்லியன் மக்கள் வசிக்கும் காசாவில் ஏற்கனவே 80 வீதமானவர்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர்.

இந்நிலையில் கான் யூனிஸின் பல பகுதிகளில் இருந்தும் மக்களை வெளியேறும்படி உத்தரவிட்டிருக்கும் இஸ்ரேலிய இராணுவம் அவர்கள் மத்தியதரைக்கடற்கரை மற்றும் எகிப்து எல்லைக்கு அருகில் இருக்கு ரபா நகரை நோக்கி செல்லும்படி குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில் கான் யூனிஸில் அவநம்பிக்கையில் இருக்கும் மக்கள் தமது உடைமைகளை சுமந்தபடி ரபாவை நோக்கி பயணிக்க ஆரம்பித்துள்ளனர். பெரும்பாலானவர்கள் இடிந்த கட்டடங்களுக்கு மத்தியில் கால்நடையாக தமது பயணத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

எனினும் ரபா நகர குடியிருப்பாளரான அபூ ஜஹர் அல் ஹாஜ், தனது வீட்டுக்கு அருகில் இடம்பெற்ற வான் தாக்குதல் “பூகம்பம் ஒன்றை போன்று” இருந்தது என்று குறிப்பிட்டுள்ளார். “கொங்கிறீட் துண்டுகள் எம்மீது விழ ஆரம்பித்தன” என்றும் அவர் கூறினார்.

மேலும் வடக்காக டெயிர் அல் பலாஹ்வில், வலா அபூ லிபதா என்பவர் மருத்துவனை ஒன்றில் அடைக்கலம் பெற்றிருந்தபோதும், இஸ்ரேலிய தாக்குதலால் தனது நான்கு வயது மகள் கட்டட இடிபாடுகளில் சிக்கி இருப்பதாக தெரிவித்துள்ளார். “அவள் உயிருடன் இருக்கிறாளா அல்லது இறந்து விட்டாளா என்பது எனக்குத் தெரியாது” என்று அவர் கூறினார்.

காசாவில் உள்ள இஸ்ரேலிய பணயக்கைதிகளுக்கு பதிலாக இஸ்ரேலிய சிறையில் உள்ள பலஸ்தீனர்களை விடுவிக்கும் ஏழு நாட்கள் நீடித்த போர் நிறுத்தம் கடந்த வெள்ளிக்கிழமை (1) முறிந்தது.

தொடர்ந்தும் குறைந்தது 137 பணயக்கைதிகள் காசாவில் இருப்பதாக இஸ்ரேலிய இராணுவம் குறிப்பிட்டுள்ளது. எனினும் நிரந்தர போர் நிறுத்தம் ஒன்றுக்கு உடன்படாத வரை அவர்களை விடுவிப்பதை ஹமாஸ் நிராகரித்துள்ளது.

இந்தப் போர் பிராந்தியத்தில் பரந்த அளவிலான மோதல் ஒன்றை ஏற்படுத்தும் அச்சுறுத்தலை உருவாக்கியுள்ளது. லெபனானுடனான இஸ்ரேலிய எல்லையில் ஈரான் ஆதரவு ஹிஸ்புல்லா அமைப்பு மற்றும் இஸ்ரேல் படைகள் இடையே அடிக்கடி மோதல் இடம்பெற்று வருகிறது.

கடந்த திங்களன்று லெபனானில் இருந்து இஸ்ரேல் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு பதிலடியாக ஹிஸ்புல்லா நிலைகள் மீது இஸ்ரேலிய ஜெட்கள் தாக்குதல்களை நடத்தியதாக இஸ்ரேல் இராணுவம் நேற்று தெரிவித்தது.

இஸ்ரேல் ஆக்கிரமிப்பு மேற்குக் கரையிலும் வன்முறை அதிகரித்திருப்பதோடு காசாவில் போர் வெடித்தது தொடக்கம் அங்கு 250க்கும் அதிகமான பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.



# நைஜீரிய இராணுவம் தவறுதலாக நடத்திய தாக்குதலில் 85 பேர் பலி

நைஜீரிய இராணுவம் கிளர்ச்சியாளர் இலக்குக்கு பதில் சமய நிகழ்ச்சி ஒன்றின் பொதுமக்கள் ஒன்றுகூடல் மீது ஆளில்லா விமானங்களை பயன்படுத்தி தவறுதலாக நடத்திய தாக்குதலில் குறைந்தது 85 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

வடமேற்கு கடுனா மாநிலத்தில் உள்ள கிராமம் ஒன்றில் இஸ்லாமிய நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்றிருந்தவர்கள் மீதே கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. ஜனாதிபதி போலா அஹமது டினுபு இது தொடர்பில் விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார்.

காயமடைந்த 66 பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாக தேசிய அவசர முகாமைத்துவ நிறுவனம் தெரிவித்துள்ளது.

“முதல் குண்டு விழும்போது நான் வீட்டுக்குள் இருந்தேன். பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ நாம் சம்பவ இடத்திற்கு ஓடினோம் பின்னர் இரண்டாவது குண்டு வீசப்பட்டது” என்று உள்ளூர் குடியிருப்பாளரான இத்ரிஸ் தஹிரு ஏ.எப்.பி செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

நைஜீரியாவின் வடமேற்கு மற்றும் வடகிழக்கு பிராந்தியங்களில் கொள்ளைக்கார ஆயுதக் குழுக்களுடன் அந்நாட்டு இராணுவம் சண்டையிட்டு வருவதோடு ஜிஹாதிக் குழுக்களுடனும் அது போரிட்டு வருகிறது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 டிசம்பர் மாதம் 6ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.